[illegible]

NR21
N33
172809

084

...ன்னிந்தியா நக்ஷத்திர சிகாமணிகள்

பாடிய

கிராமபோன் கீர்த்தனைகள்

OFFICE OF THE REGIS...
26 MAY 193
1084

...ர்ப்பது:-
...விலாசபுத்தகசாலை
...ருப்பாதிரிப்புலியூர்

NR21
N.33
172809

நாவல் உலகில் நவீனத்தில் நவீனமாகத் தோன்றி இருக்கும்
நவரஸ அலங்கார நாவல்!

ருக்மணீகாந்தன்

அல்லது

ஆபத்தில் காக்கும் அன்பர்கள்

ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது

5 ஆப்டோன் படங்களுடன் கூடியது
அலங்கார நடை! ஆச்சர்ய சம்பவம்!
இணையில்லா கற்பனை!!!
இவை ஒருங்கு அமைந்து படிப்பவர் மனதை பிரமிக்கச் செய்யும்
அதி உன்னத துப்பறியும் நாவல். விலை ரூ 2/-

காதற் கடிதங்கள் மிளிரும் நவீனம்!

கோபாலரத்னம்

ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது

இதில் B.A. பட்டம் பெற்றவர்கள் வேலையில்லா திண்டாட்டமும், வரதட்சிணைக் கொடுமையும், மாமி மாமனிடம் படும் கஷ்டங்களும், மற்ற அற்புத விஷயங்கள் நிறைந்தது.

ஆப்டோன் படங்களுடன் விலை 0-14-0

தமிழுலகம் இதுகாறும் கண்டிராத அதிசய நாவல்!

அறுபது தலை வாங்கிய அற்புத வல்லி

நாகரீக உலகம் நடுநடுங்க அறுபது தலைகளை வெட்டி வீழ்த்தி சர்வ தேசங்களிலும் புரட்சி கோஷத்தை எழுப்பிய அற்புத நங்கையின் வீரப்பிரதாபம்

தென்பாதி T.S. கனகசபை அவர்களால் எழுதப்பட்டது

திவான்பகதூர்
M. K. செட்டியார்
அவர்கள்
இந்நாவலுக்கு முகவுரை
எழுதியிருக்கின்றார்.

380 பக்கம் அநேக ஆப்டோன் படங்களுடன் .... விலை ரூ. 1

ஸ்ரீ வாணி விலாச புத்தகசாலை,
திருப்பாதிரிப்புலியூர்.

☞ 1933 வருஷம் டிசம்பர் மாதம் வரையில் வெளிவந்த
புதிய பாடல்கள் அடங்கியது.

OFFICE OF THE ... OF ... 26 MAY 19..

உ

கணபதி துணை.

"கொலம்பியா",
"ஓடியன்", "அட்சன்",
"மாஸ்டர் வாய்ஸ்"ஸில்

பல வித்வ சிரோன்மணிகள் பாடிய

கிராமபோன்

கீர்த்தனாம்ருதம்

இருபது பாக கட்டடம்
10 ஆப்டோன் படங்களுடன்

பிரசுரிப்பது :—

ஸ்ரீ வாணி விலாச புத்தகசாலை,
திருப்பாதிரிப்புலியூர்.
15-12-33.

[காப்பிரைட்] [விலை அணா 12.

அதியற்புதக் கதா கற்பித பொக்கிஷம்

மதனசிங்கர் அல்லது உரிமை இழந்த சீமான்

ஓர் இனிய துப்பறியும் நவீனம்.

இவ்வரிய நவீனத்தைப்பற்றிய நல்லபிப்பிராயங்கள் பல அறிஞரிடத்திலிருந்தும் தினேதினே வந்துக்கொண்டிருப்பதே இதிலுள்ள விசேஷத்திற்கும் இனிமையான கதைப்போக்கிற்கும் எளிய நடைக்கும் சாக்ஷியம் கூறும். ஆ! இதனைப் படித்தோரே இதன் அருமை அறிவீர்!

ஆச்சரியம்! ஒரு சீமான் தனது உரிமையை இழக்க நேரிட்டதெப்படி? ஏன் இழந்தார்? பிறகு என்னசெய்தார்? இதை ஆச்சரியமெனக் கருதவில்லையா? அநுபவம்!! கதாநாயகனின் அநுபவங்களை அறிய நீங்கள் ஆசை கொள்ள வில்லையா? ஆனந்தம்!!! கதையின் இன்பசாரமான முடிவை அறிவது அவசியமென உங்களுக்குத் தோற்றவில்லையா? ஆகவே ஆச்சர்யமும் அநுபவமுமடைந்த பிறகு ஆனந்தமுமடைய இதனை வாங்கி வாசியுங்கள். இருபத்தி ஐந்து அழகிய அத்தியாயங்களைக் கொண்டது. ஒவ்வொரு அத்தியாயமும் படிப்பவ யனது கருங்கல்லை யொத்ததாயிருப்பினும் அதை பாகுபோல் கரையச்செய்யுமென்பது நிச்சயம்.

விலை ரூ. 1—0—0

ஸ்ரீ வாணி விலாச புத்தகசாலை, திருப்பாதிரிப்புலியூர்

1910

உ

கணபதி துணை.

கிராமபோன்

கீர்த்தனாம்ருதம்.

1970
784.0954

மிஸ். K. B. சுந்தராம்பாள் கொலம்பியாவில் பாடிய பாடல்கள்

பிளேட் நெ. B. E. X. 1 இந்துஸ்தான்-தோடி

பல்லவி

1. பண்டிதமோ திலால் நேரை
பரிகொடுத் தோமே பண்

அநுபல்லவி

பரிகொடுத்தோமே மனம்
பரதவித்தோமே நாம் பண்

சரணம்

NR21
N59

எண்டிசை எல்லாம் புகழ்ந்த
ஏழைகளுக்கு கன் புதந்த
பண்டிதரே உமது தேகம்
பாகதியாச்சே பாகதியாச்சே
எங்கள் பலமெல்லாம் போச்சே பண்

தொகையறு

ஆயிரத்தி எண்ணூற்றி அருபத்தி ஒராண்டு
மே மாதத்தி லவதரித்தார்
தூயகுண க்ஷத்திரிய துரைராஜ சிங்கமெங்கும்
துணையாய் நின்று

தாயகத்தி லன்புருகும் தவயோகி
காந்தி மகான் தான் விக்க
மாய உடல் மறைந்த தய்யோ
மகனுன ஜவர்லால் நேர்
மனம் கொதிக்க மனம் கொதிக்க பண்

பாட்டு

தேவர்களும் உமையழைத்து
சிங்காதனத்தில் வைத்து
பூவுலகம் வாழச்சென்ற
புண்ணியமூர்த்தி புண்ணியமூர்த்தி
எங்கும் புகழுதே கீர்த்தி பண்
பிப்ரவரி தேதியாறில்
பிர்முடிக உமது தேகம்
எப்படி லக்ஷ்மணபுரியில் இறந்தமாயமே
இறந்த மாயமே கர்மம் ஈய்ந்ததியாகமே பண்

பிளேட் BEX 1. செந்தூர்வேலாண்டி முருகன் துதி.

பல்லவி

2 செந்தூர்வேலாண்டி ஆண்டிதிரு செ

அநுபல்லவி

உன்சேவை க்ஷேமந்தாண்டி ஆண்டி செ

சரணம்

பந்தபாசம் கடந்தால்
பாவலர் உண்டுவந்தால்
பரமகுருபரன் அறுமுக சரவணன்
திருமலை முருகனும்
முறையோடு வறுமையும் செ

ச-தொடர்

படைத்த பிர்மனை அடைத்து சிறையினில்
உரைத்த பிரணவ முகத்தனக மகிழ்
பரிமளத்திலுயர் அரியர் சொக்கர் மகிழ்
பிரிய முற்றவர்க்கு வருகு மற்புகமே செ

சரணம் பல்லவி

கந்தன் கடம்பன் குகன்
கன்னி வள்ளி லோலன்
கற்பனை கற்புத சாமி சொல்லற்புத
பொற்புய முற்றிடில் சாமி தமிழ் பதில் செ

ப்ளேட் நெம் L. B. E. 27.

3. காந்தி லண்டன் சேர்ந்தார் கைகூப்பி தொழுவீர்
கைகூப்பி தொழுவீர் தொழுவீர் தொழுவீர் எந்தன் கா
சாந்தி இல்லாத பேசும் சர்ச்சில் வைராக்யங்கே
ஆழ்ந்து நன்ருக யோசிப்பீர் யோசிப்பீர் யோசிப்பீர்
எந்தன் கா
முப்பது கோடிமக்கள் முயற்சிக்கோ ராதாரமாம்
அற்புத ஞான யோகியாம்யோகியாம் யோகியாம் மகான் கா
ஊக்கமாகப் பிரபு உருமைபெறக் கோறினேம்
பாஸ்கரநீதி கூறினேம் கூறினேம் கூறினேம் மகான் கா

செங்கோட்டை S. G. கிட்டப்பா கொலம்பியாவில் பாடிய பாடல்கள்

ப்ளேட் நெ. L.B.E. 2 காமி சத்தியபாமா இராகம்-கமாஷ்

பல்லவி

4. காமி சத்ய பாமா கதவைத் திறவாய் எந்தன்
கதவைத் திறவாய் திறவாய் காமி

அனுபல்லவி

பூமி புகழ் நேயன் புழுதியடைந்தவாயன்
நேமிய ஸந்தன் நானடி—எந்தன்
நானடி நானடி நானடி காமி
அக்ரமங்கள் செய்திடும்
அசுரரை அழித்திட்ட
சுக்ரீ தரனும் நானடி—எந்தன்
நானடி நானடி நானடி காமி

பிளேட் நெ. L. B. E. 2
இராகம் கமாஸ்

பல்லவி

5. தாமதமேன் தானே நீ திறவாய்
தநிமிது தயவாய் தா

அநுபல்லவி

கோமளமயிலினமே கொஞ்சிடுமடவனமே
கூறுவாய்சினமே கூறுவாய்சினமே
குணவதியென்னையகல விடுவாயினிமே தா

சரணம்

கோ தையமுகி அதிவிநய
கோ லமதிசய மதிபுகழ்
கோ மகளோடு குலவிட
கோ தையுந்தனை யகலவிடல
கோ மொழிபு கோவிடல
கொ ஞ்சும்மொழி யுடைய அஞ்சுகமே தா

சங்கீத வித்வான்

S. V. சுப்பையா பாகவதர்

கொலம்பியாவில் பாடியது

பிளேட் நெ. G.E. 31 பவளக்கோடிமீதில் ஆசை
இராகம் செஞ்சுருட்டி

பல்லவி

6. பவளக்கொடி மீதிலாசை மறப்பேனு நானே
மறப்பேனு நானே மாயப்பிரானே பவ

அநுபல்லவி

மார்க்கமொன்று சொல்ல நீர்
மயங்குவது சரியல்ல அந்த
[மாதரசி மீதிலாசை மறப்பேனோ] பவ
கண்ணபிரானே புண்யந்தானே இது
எண்ணுதலேனே நான் பவ

அவலேசத்தாலே அதிர்ஷ்ட மேன்மேலே
அரும்பவளம் கொள்ள இதில்
அருமை யிது வல்ல அந்த பவ

(காமியாசை மறப்பேனே)

அவளன்றி யேது இப்புவியில் கிட்டாது
அழகென்ற போது அருள்வா யிப்போது
அவலேசத்தாலே நான் பவ

திருநெல்வேலி V. சந்தோஷநாடார் பாடியது.

பிளேட் நே C. A. 629 ஏசுநாதனே

பல்லவி

7 ஏசுநாதனே இரங்கும் என் ஏசு நாதனே ஏசு

அநுபல்லவி

ஆசைக் கிறிஸ்தென தன்புள்ள நேசனே அருளே
தெருளே பொருளே
ஆவல் ஆகினேன் மகா பிரலாபம் மூழ்கினேன்
ஆயா நேயா தூயா ரட்சியும்
ஆபத்திஞல் பரிதாபித்து நிற்கிறேன் ஏசு

சரணம்

அருமை ரட்சகனே உனை அல்லாமல் ஆதரவார் ஐயா
ஆத்தும நாயகன்நீ எனக் கல்லவோ அன்புகூர் மெய்யா
தருணம் தருணம் கைவிடாதேயும் தலைவா வலவா நலவா
தாமதியாதே கிருபைசெய்யும் ஸ்வாமி இப்போதே
தாதா நீதா நீதா நாதா
தருமப்பிரகாசனே பரம சருவேசனே ஏசு

காதற் களஞ்சியம், ஆனந்த ஊற்று, இனியமொழி இவைகள் அமைந்து மருதூர் A. பிரபாகர சாஸ்திரியார் எழுதிய மதன சிங்கர் அல்லது உரிமை இழந்த சீமான் விலை ரு. 1

கடலூர் சங்கீத வித்வான்

A. V. நாகசுந்தர ராஜா கொலம்பியாவில்

பாடிய பாடல்

பிளேட் நெ. G. E. 6. தேடிவந்தேனே இந்து பைரவி

பல்லவி

8 தேடி வந்தேனே வள்ளிமானே இனி
மோடி செய்யாதே செழும் தேனே தானே தே

அநுபல்லவி

தீரமான குரலொடு பரண் மிசை
கானவாழ்விலுருதல் சரியல்லவே தே
தித்தித்திடுமாலோலத் தொனியதில்
நத்திக் கொடுமாகிக் கருதினதால் தே
திடசித்த ஜனின் கொடு பித்த மலர்பட
வித்ததி வெட்கிட முத்தமளித்திடத் தே

சரணம்

கோடி நமஸ்காரமே கூறினேன் இன்னேரமே
கோமளாங்கி மதுரித பாஸ்கர சாமி
கீதசமரச துணைபெறத் தே

தஞ்சை M. D. சாரதாம்பாள் ஓடியன் ரிகார்டில்

பாடியது

பிளேட் நெ. C. A. 520 வாருங்கள்

குலேபகாவலி

9 வாருங்கள் வாருங்கள் கைதாருங்கள் மாமா வா
நல்ல வகையோடமர்ந்து
இளைப்பாருங்கள் மாமா வா
ஆறுமாதமாய் அடியாளை மறந்து
கோறும் தெய்வம் போலே வந்தீர் வா
ஹலோ மை டியர் மாமா
கமான் சிட்டவுன் ப்ளீஸ் மாமா வா
அடே சேர் இருந்தால் கொண்டு வந்து
சீக்கிரம் போடு வா

களை தீர மாமாவுக்கு
எஸன்ஸ் காப்பியை கொடு மாமா வா
உள்ளே யார் இருந்தாலும்
பங்காவை இழுத்திடச்சொல்லு
இவர் ஆசை கொள்ளும்
பலகார பக்ஷணம் கொடு வா
கோலா லெம்னேட் வகை
பானங்களோடு மிக
மேலான சாக்லெட்
பிஸ்கெட் கொடு மாமா வா
பாலாடை லாடுபதர் பேணியும்கொடு
பூச பக்குவமாய் சந்தனத்தில்
பன்னீரை விடு மாமா வா
அன்றியும் நீ இன்று வெகு நன்றி
யோடு சென்று பெட்டியதனைத்
திறந்து நல்ல விதமாய் தாம்பூலம்
கொண்டுவா கொண்டுவா கொண்டுவா ஜல்தி வா

P. S. சிவபாக்கியம் ஓடியன் ரிகார்டில் பாடியது.

செஞ்சுருட்டி ஆதி

பிளேட் நெ. C. A. 538—மதிச்சயத்திலே

கண்ணிகள்

10. ✓மதிச்சயத்திலே குடியிருக்கிறது—நான்மதி
ஏ ஐயா ஐயா ஏ ஐயா அந்த
மதுரையிலே பாலுவிற்கிறது வந்து விற்கிறது
வந்து விற்கிறது வந்து விற்கிறது நான் மதி
நான் புதுசு புதுசா வுடை யுடுத்துறது என்
புருஷன் மனது கோணுமல் நான் நடந்து கொள்ளுறது
நான் காலையிலே தயிர் விற்கிறது வந்து விற்கிறது
வந்து விற்கிறது நான் காலை
நான் மாலையிலே பாலுவிற்கிறது எங்க மாமி என்னை
மதிப்பாகவே வைத்துக் கொள்ளுறது மதி

வசனம்

நான் புறப்பட்டு வரும்போது—எந்த
பெரிய சனியன் முன்னுக்கு வந்ததோ—ஐயோ
கொண்டுவந்த பால் தயிர் மோர்
கூடையில் அப்படியே யிருக்குது
கண்டவிட மெல்லாம் கடனாய்ப் போச்சுது
கடைக்குப் போகணும் காசு சேரணும்
இனிமே நான்போய் மிளகாயரைக்கணும்
இரண்டு பிள்ளைக்கும் பால் கொடுக்கணும்
வரட்டி தட்டணும் வெளியே போடணும்
வெந்நீர் வைக்கணும் மேல் குளிக்கணும் ஐயோ
உலையும் வைக்கணும் உள்ளதைக் காய்ச்சணும்
அண்டா குண்டா கொப்பரைச் சருவம்
அடுக்குப் பாத்திரம் லொட்டு லொசுக்கு
எல்லாம் விளக்கணும் தண்ணீர் நிரப்பணும் அய்யா
அதற்கு மேல் சூ! அப்பாடி என்று
அசந்து கீழே படுக்கணும் செத்தே

பால் வாங்கலேயோ பாலு ஏ ஐயா
பால் வாங்கலேயோ பாலு
பாலு பாலு
மோரோ மோரு
தயிரோ தயிரு மதி

P. S. சிவபாக்கியம்

பிளேட் நெம் C. A. 538 காமிக்

11. வண்ணான் வந்தானே
வண்ணாரச் சின்னான் வந்தானே வ

அநுபல்லவி

வண்ணானும் வண்ணாத்தியும் விண்ணாரம் பேசியே
கண்ணைச் சிமிட்டியே கண்டு மயங்கிட வ

ப. எடுப்பு

காரிக் கழுதை மேலே வண்ணாத்தியும்
வண்ணானும் வெளுக்கப் போகையிலே கா

மகுடத்துடர்

மேல மலைச் சிகரங்களில் சோ சோ
ஐயோ வெள்ளாடு மேய்ப்பவனே ஹா ஹா
யார் வைத்த தீவினை யோ ஹா ஹா
எவரு வைத்த தீவினை யோ ஹா ஹா

பல்லவி எடுப்பு

வெளுக்கக் குறி வைத்து வண்ணானும்
வழுக்கச் சேணிவைத்து வெ

அநுபல்லவி எடுப்பு

வெள்ளாவி அடுப்புக்கு விறகை யொடித்து
தள்ளாதவயதில் தலைமேலே எடுத்து வண்

பல்லவி எடுப்பு

மெள்ள நடைநடந்து அம்மாடியோ சும்மாடு கீழே
தள்ளியே சோர் வடைந்து மெ

ஷ மகுடத் தொடர்

தன்னாலே நின்ற நிலை சோ
இரு கண்ணாலே நின்ற நிலை
வண்ணான் மகள் வண்ணாத்தியும் வந்தாளே

ஷ பலலவி எடுப்பு.

வண்ணாத்தி வந்தாளே வண்ணாக் கண்ணாத்தா
வந்தாளே வ

மேல மலைச் சிகரங்களில் சோ சோ
ஐயோ வெள்ளாடு மேய்ப்பவனே ஹா ஹா
யார் வைத்த தீவினை யோ சோ சோ
எவரு வைத்த தீவினை யோ ஹா ஹா வ

மதுரை பபூன் ஷண்முகம்
கொலம்பியாவில் பாடியது.
பிளேட் நெ. G. E. 4.

பல்லவி

12. வாங்கடி வாங்க லவுண்டிகளா
உங்கள் வாத்தியார் சட்டாம்பிள்ளைகண்டீர்களா—அடி வா

அநுபல்லவி

போங்கடி போங்க பெண்டுகளா
ஒரு புருஷனுக்கு ஆசைப்பட்டு நின்றீங்களா—அடி வா
புத்தி கெட்டுத்தானே
புறப்படுவதேனோ
நித்தியமுந்தானே
நிலைகுலைந்தேனே

சரணம்

அடி நீலக்கருங்குயிலே நீயும் நானும் போகையிலே
சிலம்பிறக்கையிலே சிதம்பரம் காணயிலே
சிங்காரம் தோணுதடி உங்களுக்கு
ஜீவனங் கிருக்குதடி
செல்லு செல்லு
திருச்சிநகர் செல்லு
திருவாலூர் செல்லு
கிருமதுரை செல்லு

மதுரை கோகிலகானம் மிஸ் சுப்புலக்ஷிமி
மாஸ்டர் வாய்ஸில் பாடியது.
பிளேட் நெ 3612 பாவட்டம் சோலையிலே
இராகம்-சிந்து

13. பாவட்டம் சோலையிலே
மயில்வந்து வாவிட்டுக் கூவுதய்யா
கந்தய்யா வாவிட்டுக் கூவுதய்யா சுப்பையா
வாவிட்டுக் கூவுதய்யா பா

தேசைச்சுற்றி பூமணக்குது
தென்பழனியிலே கந்தய்யா
எட்டடிக்குச்சிக்குள்ளே கந்தய்யா
நான் எத்தனை நாளிருப்பேன்
கந்தய்யா எத்தனை நாளிருப்பேன்
சுப்பைய்யா எத்தனை நாளிருப்பேன் பா
மாமணக்குது தேன் மணக்குது
மலைப்பழனியிலே
கந்தய்யா மலைப்பழனியிலே
சுப்பைய்யா மலைப்பழனியிலே பா
ஓட்டை குடந்தனிலே
ஓன்பது பாட்டுகள் கண்டிக்கும்
அனுத்திய கூட்டுகளை வைத்து
வினைபயன் வாட்டுவது பாருமய்யா பா
ஆங்காரப் பேய்பிடித்து அடியேனலைந்து
திரியாமல் கந்தய்யா
ஓங்காரத்துள்ளிருக்கு ஒருவித உண்மையைக்
காட்டுமையா பா

மதுரை ஸ்வரஜோதி
T. A. நாகசுவாமி பாகவதர் பாடியது
பிளேட் நெ. 3613 நாசகாலதாசி 1-2 பாகம்
குலேபகாவலி

14.✓நாசகாலதாஸி களை நம்பினோர் பரதேசி
இந்துதேசர் காளிதை யோசித்துங்கள் நேர்வரைகுறேன்
[பேசி
பரநாரியவர்கள் பேரை யெடுத்துகூறினலந்த ஊர்சிரித்திடும்
தொகையறு
பலபேர்கள் நடமாடும் வீதியிலே குடியிருக்கும்
பாவியாகும்
பலபேர்கள் தமைகெடுக்கும் கண்ணென்ற வலைவீசும்
பட்டியாகும்
பலபேர்கள் தந்த விந்து தனிப்பிறந்த ஜென்மம்
இந்த பாவைதானே

பாட்டு

வருடத்திற் கொருதடவை நீர் வாடை கண்டிடும்
புடவை நல்ல
புருடர் முன்வரில் வியர்வைநாத்தம்
பொருப்பதெவர்க்கு அபர்வே

தொகையறு

தலைநரைத்து விட்டதென்றால் மேகம்போல்
கருப்பு தைலம் பூசி
நிலைகுலைந்து முழுதும் நடுக்கமுற்றாலும் அதை
நிறுத்தி நிற்பார் வாசல்களில்
நிறைந்தகன்னம் இரண்டும் குழிவிழுந்தாலும்
மஞ்சளதை கனமாய் தேய்ப்பார்
கலகலெனப் பல்வரிசை கழன்றாலும்
வேறுதந்தங் கட்டு வாரே

பாட்டு

நகையெல்லாம் இமிடேஷன்
கியாஸ்லைட்டுக் கிவர் ரிலேஷன்
அவர்வகை யெல்லாம் பொய்வேஷம்
சிக்கும் வாலிப ரவர் மோசம்

தொகையறு

பட்டதொரு மரங்களிலும் பாழடைந்த
கோவிலிலும்பசியால் வாடி
ஒட்டியதோர் வௌவால் போல்தன மிரண்டு
மிருந்தாலும் உயர்த்து தோணக்
கட்டுவாள் ரவிக்கையினுட் கந்தை துணி சுருட்டி
வட்டப் பந்தைப் போல
தொட்டவிழ்க்க விடமாட்டாள் இன்னும்
பவுண்டியர்கள் சூது தானே நா

காசு கொடுக்கும் வரையில் நம்மைக் கருதுவாள் உள்ள
வரையில்
பணம் வீசும் குறைந்த வரையில் நம்மை விரும்பிடா
ளிந்த அறையில்

தொகையரு

சேலேக்கோர் புருஷனையும் தினமணியும் செண்டுமலர்
மாலேக்கோர் புருஷனையும் வாலிபதை மலக்கும் கில்ட்டு
ஓலேக்கோர் புருஷனையும் உப்பு புளி அரிசி வீட்டு
வேலேக்கோர் புருஷனையும் விளம்பவென்றால் கணக்கிலேயே

பாட்டு

துஷ்ட பரத்தையர் குலமே கொல்லும் சட்டம்
பிறந்தாலும் நலமே நம
திஷ்டானும் பாஸ்கரன் தலமே உண்மை
யியம்பும் செந்தமிழ் பலமே

தஞ்சாவூர் கள்ளபார்ட் சிம்மம் T. N. ராமலிங்கம் மாஸ்டர் வாய்ஸில் பாடிய பாடல்கள்

பிளேட் நெ. 8065 காமிக்

வாங்க வாங்கடி மெட்டு.

15. ஆடுங்கடி ஆடுங்கடி பெண்டுகளா உங்கள்
ஆசைநாயகனை கண்டுகொண்டிங்களா
பாடுங்கடி பாடுங்கடி லண்டிங்களா-சிறு
பையனைத்தேட எண்ணங்கொண்டிங்களா—நீங்கள்
தேடு தேடு தேடு திருநல்வேலி தேடு திருமதுரை
தேடு திண்டுக்கல்லு தேடு திருச்சிநகர் தேடு
திருதஞ்சையைநாடு தெரு தெருவாக ஓடி
உங்களே தேடவும் உட்டானடி
அக்காடி அக்கா அக்கா மூத்தவளே
ஆளாய்பிடித் தொருகைப்பார்த்தவளே-நல்ல
வெக்கமும் துக்கமும் தீர்த்தவளே-உங்கள்
விபரம் காட்டாமலே கார்த்தவளே-நீ
வேண்டு வேண்டு வேண்டு வெள்ளிபொன்னே
வேண்டு மினுக்கு துணிவேண்டு மேஜைகட்டில்
வேண்டு வீட்டு டபாபர்மாமா வேண்டு
விளையாட நிலக்கண்ணடி மாடிவீடு வேண்டிக்கோடி
நீட்டசட்டை ஆட்டநடை கோணவாக்கு
நல்லநேர்த்தியான யீக்கோசெண்டு சோப்

புமாவு காட்டியும் காட்டாதண சட்டைமேவு
கவுன் காலிலே பூனுகொலுசு சில்வர் காப்பு-அடி
நில்லு நில்லு நில்லு நிலவாசபடியில் நில்லு ஆளே
நேரில் கண்டால் நில்லு நீ காட்டாதே பல்லு யிது
நேசமாமன் சொல்லு நித்தம் ராமலிங்கம்பாட
உங்கள் டங்குவாரருந்து ஓட ஆடுங்கடி

பிளேட் நே. 8065 காமிக்

16 பாலுகார பாபம்மா இந்த
பம்புதண்ணி போதுமா
ஆறு குளம் சேருமா
அளக்கும்சேரு முற்காலல்லவோ
பழக்கம் தன்னேயே எடுத்துச் சொல்லவோ பா
காலே மோரை பெருக்குதே-அந்த
கணக்குசேரை குறைக்குதே-பல
ஏழைக்குடியைக் கெடுக்குதே
எங்கும்காபி கிளப்பினுலே
உங்களுக்கு பிழைப்புமேலே பா
பச்சரிசி மாவைக்கரைத்தால்
பாலுடிக்ரி காட்டுமா
பார்வைக்கு நுரைநிரமும்
பதமுங்கம்பி நீட்டுமா
பரபரப்புடன் நுரையோடளந்து
கரையசேர்க்கிருய் கடனுய்த்தந்து பா
வெண்ணே நெய்யும் கண்ணிற்காணுமல்
வெகுதூரம் ஓடிப்போச்சுதே நீ
பெண்ணுய்ப் பிறந்ததற்கோ இந்த
புண்ணியத்தைக் கட்டிக்கொண்டாய்
பேசுராமலிங்கம் கூசாமலுரைத்தேன்
தேசத்தோர றிய மோசம் புரிந்திடும் பா

ஆப்டோன் படங்களுடன்கூடிய "அறுபது தலேவாங்கிய அற்புதவல்லி" நாவல் வாங்கிப் படியுங்கள். இன்பகளஞ்சியம் விலே ரு. 1—8—0

P. S. வேலுப்பிள்ளை

மிஸ். K. B. சுந்தராம்பாள் கொலம்பியாவில் பாடிய பாடல்கள்

பிளேட் நெ. L. B. E. 43. ஒரு நாளும்

இராகம் செஞ்சுருட்டி

பல்லவி

17. ஒரு நாளும் மறவேனே உனை நானே
ஒரு நாளும் மறவேனே ஒரு

அநுபல்லவி

புருவர தினம் உன்னை க்ஷணமும் பிரிவதில்லை
பரம நன் அரிய சொல்கிறேன் ஒரு

சரணம்

நிலையான உயிர் ஸ்தானம் நீதானே
விலையில்லாத மணியே விரும்பினேன் கருணியே
வேண்டி வந்தேன் எண்ணியே ஒரு

பிளேட் நெ. L. B. E. 27. இராகம் மாண்டு ரூபகம் தாளம்

பல்லவி

18. மகா மோசமான வாசக மென்று
மொழிவது சரியாமோ மகா

அநுபல்லவி

பாசமேனோ பாலகன் மீது
பாவ பாவம தாகும் பண்படுமோ தாயே மகா

சரணம்

நாகரீக சந்த்ர குலதெய்வ
நாசமாக்குதல் நன்றோ நாடாதே தாயே மகா

பார்க்க, படிக்க, கேட்க, தெவிட்டாத இன்பத்தை தரும் நாவல்
புல்-புல்-தாரா அல்லது ஏமாந்த சோணகிரி. விலை அணு 2.

தஞ்சாவூர் M. சாரதாம்பாள் ஓடியனில் பாடியது.

பிளேட் நெ. C. A. 612 ட்ரியோ ட்ரியோ

ஆயர் பாட்டு வசனம்.

19. ✓ என் அய்யா! என் புருஷன் ஆடு மேய்க்கிற
அளகை கேட்டீர்களா! நான் சொல்லுகிறேன்
கேளுங்கய்யா!

பாட்டு

ட்ரியோ, டேயன்ன, டேயன்ன, டேயன்ன,
டேயன்ன, டை, டொ, டோ, டௌ, ட்
ட்டன்ன பெரு மட்டிநா சிறு குட்டிநா
ஒரு பொட்டைநா, கிடைக்கு இரண்டு
ஆடு கேட்டுதாம் கேடுகெட்ட முட்டாளாம்
அடித்துகொன்று வெளிதுரத்தி அலக்ஷியமாய் விட்டேன
அது வடிக்கஞ்சியை குடித்து விட்டுவளக்கு பேசுதாம்
கெட்டநாய் டிரியோ, டேயன்ன
வயித்திவெள்ளை மூளியாடு வறப்பிலே படுத்துகிடுச்சாம்
வடக்குவீட்டு செம்பலி ஆடு வளிலே படுத்துகிடுச்சாம்
கோபாலன் ஆடுவந்து குறுக்கே படுத்துகிச்சாம்
கூட இருந்த செம்பிலிகடா குட்டி போட்டுடுச்சாம்
குள்ளநரியும் வெள்ளைநரியும் வேடிக்கை பார்த்துகிடுச்சாம்
ட்ரியோ, டேயன்ன
கருப்புகம்பளி உயரசெருப்பும் கம்பும் கையோட
கருவகிளையை வளைப்பதற்கு அலக்கும் கையோட
பொயிலைசாகு போட்டு வைக்க பையும் கையோட
பெரியநாம பொட்டிஒன்று அதுவும் கையோட
ட்ரியோ, டேயன்ன

படிக்க பிரமிப்பையும் அதிசயத்தையும் திகைப்பையும் தரும்
நாவல் சரோஜினி அல்லது நாகரீக வேட்கை விலை அணு 5.

பிளேட் நெ A. C. 612 எங்கக் குடும்பம் பெரிசு.

பாட்டு

20 எங்கக் குடும்பம் பெருசு எங்கள்
எளையக் கொழுந்தன் சிருசு சிருசு எங்

வசனம்

ஏனைய்யா எங்கள் குடும்ப சேதியைக் கேட்டியளா எங்கள் குடும்பத்திலே ஏளொட்டுக் கொளுந்தன் மாறுவ இருக்குராவ இண்ணுலும் எங்க எளையவக இருக்குராவளே அவுகளை நான்

பாட்டு

சும்மா விட்டிருப்பேனு எங்க
அம்மாக் கருவக்கோனுக் கோனு சும்

வசனம்

எம் புருஷன்பேருக் கருவக்கோனு அவன் சுத்த சோம்பேரி மனுசன்னு எனக்கு கொசஞ்சங்கூட பிடிக்கிறதே இல்லே.

பாட்டு

இதுக் காச்சின நல்லப் பயிரு ஆனால்
காள மாட்டுத் தயிருத் தயிரு இது

வசுனம்

நானும் பசுமாட்டுத் தயிரு விபாபாரத்திலேயே ரொம்ப நாள் இருந்து பார்த்தேன் வியாபார நடக்கலெ இண்ணு இப்பக் காளமாட்டு விபாபாரத்துக்கு வந்துவிட்டேன்.

பாட்டு

உனக் காரு மீதிலாசை
அதே முருக்குரா ரே மீசை எ

வசனம்

நானும் ரொம்ப நேரமா வந்து நின்னும் பாக்குறேன் பொம்பளைத் தனியா யிருக்குராண்ணு (ஏனையா கண்ண டிக்கிற அடிய அடியைப் பார்த்து) அடி ஆத்தே. என

பாட்டு

நான் பெத்து வளர்த்தேன் டேசன் இந்த
பெரியவன் பேரோ நடேசன் நான்

வசனம்

நான் ஒருபிள்ளை இரண்டுபிள்ளை பெத்தவளா ஐயா
பனிரெண்டு பிள்ளை பெத்தவளன்னோ கானு. என

ஸ்ரீமான் S. V. சுப்பைய பாகவதர் கொலம்பியாவில் பாடிய பாடல்கள்

பிளேட் நெ G E 18 யுவதி ஸ்ரீமதி இ-குறஞ்சி

பல்லவி

21 யுவதி ஸ்ரீமதி மாரதியே யுவ

அநுபல்லவி

யூகம் மிகுந்த பெண்மணி கருணி யுவ

சரணம்

புவன மதில் மகா
பூவையே நாயகியே
பூர்வ விவேக வனிதா புனிதா யுவ

அருணசல ஆசாரி பாடியது.

பிளேட் நெ. C. A 632 ஆதிவினயகனே

பல்லவி

22 ஆதி வினயகனே பகவானே யென்னை
ஆதரிக்க வேணுமய்யா துணைதானே ஆதி

காதர் களஞ்சியம், ஆனந்த ஊற்று, இனிய மொழி இவைகள் அமைந்து மருதூர் A. பிரபாகர சாஸ்திரியார் எழுதிய மதன சிங்கர் அல்லது உரிமை இழந்த சீமான் விலை ரு 1.

அநுபல்லவி

நீதி மறை புகழும் முருகோனே
நீ வரவேணுமய்யா துணைதானே ஆதி

சரணம்

பொங்கல் தின்கிற முனிகளா—நான்
பங்குதாரேன் வாரீங் கிளா
டாகினி மோகினி களா
சாராய பீப்பாவை நேராய் உடைத்திடுவேன் ஆதி
கள்ளு குடங்கள் இரண்டு
காட்டியே நான் படைப்பேன்
கஞ்சாவும் சீட்டாவும் நான் படைத்திடுவேன்
தில்லானு பாட்டுப்பாடி மடமானே
இந்தத் திருடனும் பாடுவது கணக்குத்தானே
பல் ஆடை பலே ஜோக்கு
பல் பாட பலே ஜோக்கு தமாஸ்பலே ஆதி

K. S. தேவுடு அயயர் பாடியது

பிளேட் நே. S. N. 17. விந நாஸ கோரி

இராகம் ப்ரதாபவராளி

23. விந நாஸ கொரி யுந்நா நுரா
விஸ்வ ரூபுட நே

அநுபல்லவி

மநஸாரக வீநுல விந்துக
மதுரமைந பலு குல வி

சரணம்

ஸீதா ரமணிதோ ஓமந—கும்ட லாடிகெல் சுட
சேத நொகரி கொகரு ஜூசி—ஆபாவ மெறிகிஸா
கேதாதிப நிஜமகு ப்ரேமதோ—பலகு கொந்ந முச்சட
வாதாத்மஜ பாதலு விந்தடுல தியாகராஜ ஸந்நுத வி

கொலம்பியாவில் மதுரை பபூன் ஷண்முகம் பாடிய பாடல்கள்

பிளேட் நெ. G. E. 4. மானுருட்டும்.

24 மானுருட்டும் கண்ணழகி அடி
மணக்கோட்டுப் பெண்ணழகி
தேனருந்துந் தினையழகி உங்கள்
சேதியெல்லாந் தெரியுமடி
சிமிட்டுக் குட்டிங்களா நீங்கள்
சிமையை விட்டிங்களா
அமிட்டு காரிங்களா ஊரில்
அலையப் போரிங்களா
கையோடு கைகோர்த்து இந்த
காலோடு ரெண்டும் சேர்த்து
பையப் பைய நடந்துவாடி
பசுப்புக்கார தடிச்சிகளா
பழமதுரையடி பயப்படாததேயடி
இங்கே வழி யிருக்குதடி பின்னே
வாங்கடி ஓடி பின்னே மா

மிஸ். M. R. வாசுவாம்பாள் அட்சன் ரிகார்டு

பிளேட நெ. S. N. 2 புன்னகவராளி

பல்லவி

25. கைராட்டனமாம் அம்மா
கைராட்டினமாம் நமது
காந்திமகான் சொன்ன கைராட்டினமாம் கை

தொந்தி குலுங்க சிரிக்க வேண்டுமானல் டக்-புக் தாமோதரன் நாவலை வாசிக்கவும். விலை அணு 2

அநுபல்லவி

வையகத்தில் உள்ளவர்கள் ஆதியில்
வழங்கிவந்த அம்மா கைராட்டினமாம் கை

மகுடம்

கத்தருதித்திடும் வெற்றிகொடுத்திடும் கை
கத்தர் மிஞ்சி சுதேசி நலம்பெற
சித்தாஞ்சன தாசர் மகிழ்ந்திட கை
வருஷமொன்றுக் கறுபது கோடி
மதிப்பு ரூபாய் நமக்கு லாபந்
தரும் ஆண் பெண்கள்நிரு வாணமதை
தடுத்து மானம் கொடுக்க வந்த கை

தொகையறு

ஒரு வருஷத்துக்கு மூன்று சேர் பருத்தி விளையிது
அதில் கால்சேர் பருத்தி நூற்று நெய்தால்
அது இரண்டு வருஷத்துக்குதவுது அதிலாப முண்டு
அதை நூற்று நெய்து உடைதரித்தால் லாபமுண்டு
வீரிய முண்டு தைரிய முண்டு சக்திய முண்டு
கௌர்வ முண்டு இதை பெறுவீரே கை

S. S. விஸ்வனாத தாஸ் ஓடியன் ரிகார்டில் பாடியது.

பிளேட் நெ. C. A. 610 தாழ்த்தப்பட்ட தீண்டாமைப்பாட்டு

பல்லவி

26. தாழ்த்தப்பட்ட சோதரரைத் தாங்குவாருண்டோ
தாங்குவாருண்டோ! மண்ணில் ஒங்குவாருண்டோ தா

அநுபல்லவி

வீழ்த்தப்பட்டு வாடுகின்றார் வெம்பியே திண்டாடுகின்றார்
பாழ்த்தமனப் பாவியர்செய் பாதகத்தாலேபாதகத்தாலே
இந்த மேதினிமேலே தா

சரணம்

இருக்கவும் இடமில்லை நிற்கவும் நிழலில்லை
என நொந்துவாடியழுறார்
இல்லமொன்றில்லாது அல்லாலே வடிவமாய்
ஏங்கியே யேங்கிவிழுறார்
நெருக்கவும் பண்ணையார் குடிக்கவும் நீரின்றி [ஞ்சம்
நிட்டூரத்தால் கதறுறார்கொ
நெஞ்சிரக்கமற்ற வஞ்சகக் கொடியரை
நினைத்துதான் பதறுறார்
கருக்கவும் உடம்பினை பெருக்கவும் வியர்வை நீர்
கஷ்டக் கண்ணீர் வடிக்கிறார்
—அவர்கள்
காலமெல்லா முழைத்திங்கு கூலி பெறமாட்டாது
கலங்கிசித்தமுந் துடிக்கிறார்
இருக்கவும் பொறிகள்போல் அடக்கவும் உணர்வினை
தீயவர்களால் நலிகிறார்
செத்திடவுமொண்ணாது நித்தமு மடிமைகளால்
தீண்டாமையால் நலிகிறார்
பள்ளுப் பறையரென்னும் பாமரரைக் காக்கவுன்னும்
கொள்கையிலும் புண்ணியந்தான் குவலயமீது குவலயமீது
வேறு கூறுவீரேது தா

மதுரை கோகிலகான மிஸ் சுப்புலக்ஷிமி மாஸ்டர் வாய்ஸில் பாடிய பாடல்

பிளேட் நெ. 3682 வேலவரே இராகம் பைரவி தாளம்-ஆதி

பல்லவி

27 வேலவரே உம்மைத்தேடி ஒருமடந்தை
விடியமுழுதும் காத்திருக்கும் வகை என்ன வே

அநுபல்லவி

வாலிபமும் சேல்வியும் வில்லும் புழுவவடிவ
நூலிடையும் மதிவதனமும் மேலும் அவள்
மேனி பசும்பொன்னிறமும் மின்னல்கொடியாள்
அன்னநடையே ஒயிலாகவே வே

சரணம்

விதவிதமாகவே பக்ஷிளங் கொங்கை மீதினில்
வெண்படி தரித்து பல்லும் வரிசையும்
கதலிதுடையும் அதரக்கன் சொருக்கழகும்
கருத்தையுருக்கும் கலகலவென்னும் நடையும் வே

சர்வதேசப் புரட்சியின் ஆரவாரம், குடிமுடிப் போரில் சமதர்மக் குழப்பம், மகுட மன்னவர்கள் முடியிழந்த வரலாறு தெரியவேண்டுமானல் தென்பாதி T. S. கனகசபை பிள்ளை எழுதிய "**அறுபது தலைவாங்கிய அற்புதவல்லி**" நாவலைப் படியுங்கள் அழகிய படங்களுடன் விலை ரூ. 1—8—0.

மதுரை D.R. முத்துலக்ஷிமி கொலம்பியாவில் பாடியது

பிளேட் நெ. V. E. 43 ஆனந்த பைரவி ஆதி தாளம்

பல்லவி

28 வேசி ஆசை நீங்கியே வீடுவந்து சேரவும்
விருப்பம் இன்றுதான் வந்ததோ நாதா நாதா வே

அநுபல்லவி

காசும் துணிமணிகள் கைப்பொருள்களையெல்லாம்
காதகியாரால் அந்த பாதகிக்கே கொடுத்தீர் வே

சரணம்

கப்பல் கப்பலாய்ச் செல்வம் கணக்கில்லாமல் கொடுத்தீர்
காலாழி பீலி முதல் மேலான நகை கொடுத்தீர்
கப்பல் கப்பலாய் நவ ரத்னம் கொட்டிக் கொடுத்தீர்
கோரிய பொருளெல்லாம் குறைவில்லாமல் கொடுத்தீர் ()

மதுரை பபூன் A. M. கார்மேக ஆச்சாரி பாடிய பாடல்

பிளேட் நெ. 3628 நில்லு நில்லுங்கடி

பாட்டு

29 நில்லு நில்லுங்கடி பெண்டுகளா
சொல்லிய சல்லிபயலே கண்டிங்களா
எல்லே விட்டகலா மண்டுகளா வாத்தி
தொல்லே சகியாது காட்டில் திண்டிங்களா நீங்கள்

நல்ல குலமாச்சே அது
செல்லரித்து போச்சே கற்ற
கல்வியும் வீணாச்சே இந்த
தொல்லுலகில் பேச்சே
செல்லு செல்லுங்க சிரிக்கிகளா ராஜ
செல்வத்தை கெடுத்திட்ட சிரிக்கிகளா செடி
காணிலலேய உங்கள்
மேனிகுலேய ததி
கெர்வம் ஒழிய வீணா
கர்ப்புமழிய
கண்டேனடி. கார்மேகமே மாஸ்டர் வாய்ஸ் கம்பெனி
பிளேட்டில் விண்டேனடி நற்பதமே.

ஆர்மோனியம் மிஸ்டர் A. V. துரைராஜ்
அட்சன் பிளேட்டில் பாடிய பாடல்கள்
பிளேட் நெ. S. N. 31 மல்லிகை முல்லை

காமிக்

30 மல்லிகை முல்லிகை மலர் விற்கிறது—கண்ணாளா
ஏ நாதா! மனோரஞ்சித மலர்கள் விற்கிறது
—மலிந்து விற்கிறது
ரோஜா மலர்கள் விற்கிறது
ராஜா மலர்கள் விற்கிறது
அதோ பார் மனோரஞ்சித மலர்கள் விற்கிறது
மல்லிகை முல்லிகை மலர்கள் மலிந்து விற்கிறது ()

பழுத்த கிழவியும் கொழுத்த சிரிப்பு சிரிக்கும் நாவல் எது?
தமாஷ் தடியன் அல்லது தஞ்சாவூர் தங்கரத்தினம் விலை அ. 2

தவனமரு மருக்கொழுந்து இருவாக்ஷி சண்பகமலர்
நாகலிங்கம் நந்தியாவட்டை சாமந்தி கமலமலர்
கும் கும் என வாசனை இன்னுமென்ன யோசனை
கவனமுடன் நம்பு மகா தெம்பு
சும்மா வாங்கிக்கோ கோனு மானு கானு கவி
கோர்த்து விற்கிறது சித்திரம் சேர்த்து விற்கிறது
கண்ணுளா மல்லிகை முல்லிகை மலர்கள் விற்கிறது
(ஏ நாதா)

ஆ ஆ போ! போ! அது வேண்டாம் வேண்டாம்
சப்பாத்தி புதரு பூ கனகாம்பரம் நீலாம்பரம்
ஊதாம்பரம்
இது பெருமெத்த சிலாக்கியம் இதை அணிந்தாலே
இல்லை இதற்கு யோக்கியம் நிர்பாக்கியம்
எந்த தினமும் சுத்த மணமும் நல்ல குணமும்
ஏது ஏது யீது சூது வாண்டாம் வாது
தேங்கிடாமல் வாங்கிக் கொடு ராங்கியாக
மல்லிகைபூ செண்டு மயில் தோகைபோலுண்டு
மையல் மாதுமேல் கொண்டு நாதா மல்

உறையூர் T. M. காதர்பாக்ஷா பாடிய பாடல்

பிளேட் நெ. 3064 பெண் கொண்ட பேர்பட்ட

இராகம் பந்துவராளி தாளம் சாப்பு

பல்லவி

31 பெண் கொண்ட பேர்பட்ட பாட்டையுங் கேட்டையும்
பேசுவோமே நெஞ்சமே பெண்

அநுபல்லவி

சங்கையும் போக்கிச் சதிமான மாகச்
சகசண்டியாக்குவித் திடுவாள்—வெகு
பங்கப்படுத்தி விட் டிடுவாள்—அந்த
மங்கையராசை வைத் தையையோ வையத்தில் பெ

சரணம்

தங்க நகைய முகப்பணிச் சேலையுந்
தாவென வேகுரங மாட்டுவாள்
செங்கை வளையுந் தலைக்கெண்ணை சிப்புஞ்
சிறப்பொடுதாவென மாட்டுவாள் —வன்னக்
கொங்கைக் கிசைந்த ரவிக்கையுங் கோலம்
பணியுங் கொடுவென மூட்டுவாள் —அட
வெங்கப்பயனீயென் றுமக்கனேவென்று
வீட்டில் வரைதேயன் றோட்டுவாள் —வெகு
பங்கப் பழப்பினி றுட்டுவாள் —அந்த
மங்கையரா சைவத் தையையோ வையத்தில் பெ

ஆதி கடவுளுக்கு இராகம் செஞ்சுருட்டி.

32. ஆதி கடவுளுக்கு யாரிடத்தும் பேதமில்லை
பாதியிலே சமயக்கூத்தர் பண்ணிவைத்தார் இந்தத் [தொல்லை
சாதி ஒன்றுதான் ஆண்பெண் தன்மை ரெண்டுதான் [மனத்தின்
வித்தியாசம் விட்டால் மதத்தின் வித்தியாசமில்லை
நினைத்தபோது அவரவர்கள் நிந்திக்கவே மார்க்கமில்லை
ஜாதி ஒன்றுதான் வித்யாசப் படுத்தவென்றால் வெகு
கோடி சமயமுண்டு
மத்தியான வெயிலில் நின்று மதிப்பவர்க்கே உண்மைத்
தோணும்

பொய்யை நிசம்போல் பேசி பகல் வேஷத்துடன் டாக்டரை எமாற்றும் நாவல் எது! **நிஜப்புளுகன்** அல்லது **ராவ்பகதூர் ரஸதுல்லா சாகிப்** விலை அணா 2.

பிளேட் நெ. 3728 } திருசெந்தூர் தேசிகதோடி
ஆதிகடவுளுக்கு செஞ்சுருட்டி

இராகம் தேசிகதோடி

௰ திருச்செந்தூர் வேலாயுதனே வந்துன் சேவைதாரும்
கந்தா கடம்பா கனகபொற் சிலம்பா
கானமயில் வீரா தேனின்னுபகாரா—திருச்செந்தூர்

தஞ்சாவூர் கள்ளபார்ட் சிம்மம் T. N. ராமலிங்கம்
மாஸ்டர் வாய்ஸில் பாடியது

பிளேட் நெ N. 8140 (அப்பாடா ஆரோ காமிக்)

34 அப்பாடா ஆரோ ஒரு பொம்மனுட்டி அவ
பாப்பாளிசேலைகட்டி கொம்புமாட்டி
டப்பா குலுக்கிநடையாகநடந்து அவ
தப்பாமே கிட்டவாரா நான் விடேனெண்டு அவ
பட்டணத்துதேவடியா போலிருக்காளே
கிட்டமுட்ட வந்துட்டாளே டங்குடிங்காளே
ஒட்டிவாராளே குட்டி ஜோராளே
அய்யோ-சோறுபோச்சேவீணு நான்
சும்மாயிருப்பேனு எனக்கு
சொக்குதையே வெக்கம் ஒரு
பக்கம்வந்துவீணு (இது)
அநியாயம் அநியாயம் அநியாயமே இது
அநியாயம் அநியாயம்
ஆசையொருபக்கம்வந்து பேசச்சொல்லுத வளுடனே
அச்சம்வந்துமே கிச்சுகிச்சென
நச்சுபண்ணுது இச்சை மீறுது

இது மகாபாவம் பாவம் இந்த
மனிசிக் கென்னலாபம்
மாடிவீட்டுக்காரலேடி போலிருக்கிறுளே
மனசைக் கெடுக்கிருளே எனே
வழி மறிக்கிருளே எனக்கு
மயக்கம் வந்து தலையை சுத்த
முளி முளிக்கிருளே
வகையாயிதைக் கேட்டு பார்க்க
ஜெகந்நாதன் சொல்பாட்டு கேட்க
பகரும் ராமலிங்கம் சிரு
ஜெகமெலாம் சொல்லக்கேட்டுப்பாரு (அப்பாடா)

அரியகுடி ராமானுஜ அய்யங்கார் பாடியது

பிளேட் நெ. A. 107 ராட்டினமே

இராகம் கமாஸ்

பல்லவி

35 ராட்டினமே காந்தி கைபாணம்—நா
நம்மைக் காக்கும் பிரமாணம் சுதேசிய ரா

அநுபல்லவி

நாட்டிற் கதர்வேலே சூட்டிநற்—கங்கணம்
நன்றுய்க் கட்டுவோம் குணம்—நாகரீக

சரணம்

வீட்டிற்கு விடாது மெய்யாக வேண்டுமே
மீக்ஷிபெற தூண்டுமே பாஸ்கரன்
ஆக்ஷித் தமிழ்ப் பாண்டுமே மிக முழங்கிடும் ரா

கயிற்றைக் கண்டு பாம்பெனப் பயப்படும் போலீஸ் புலிபடும் திண்டாட்டம் நிறைந்த நாவல் போலீஸ்கிலி போர்திராயர். விலை அணு 2.

திருகோ கரணம் சங்கீத ரத்னம்
மிஸ் T. M. மாணிக்கம் மாஸ்டர் வாய்ஸில்
பாடிய பாடல்

பிளேட் நெ 3726 கார்த்திகேயே காங்கேயே பாகம் 1 & 2
இராகம் தோடி

பல்லவி

36 கார்த்திகேய காங்கேய கௌரி தனயா
கருணாலய அருள் திரு கா

அநுபல்லவி

கீர்த்திமேவும் தென் பரங் குன்றில் திருச்செந்தில்
பழனி சுவாமி மலை மேவும்வளர் கா

சரணம்

குன்று தோறும் மழகர்கோவில் தனிலும்
குஞ்சரியும் குறக் கொடியும் தழுவும்
குற்றமிலை ஈராறு தோள்களோடு
குஞ்சரமென உலவும் சரவணபவ கா

மால்மருகஷண்முக முருக குஹா
மகபதியும் விதியும் தொழ
மாதங்கவதன சகோதரா அழகா
வேல்மருவும் அமலகா கமலா
குருநகை தவள் ஆறுமுகா
விரைவு கொள் மயூரபதி மேல்
வரும் குமார சூரசம்ஹாரா கா

காப்பிஹோட்டலின் விநோதமும், பாம்பாட்டி சன்மானமும், பெண்வேடம் பூண்டவன்படும் அவஸ்தையை படிக்க, கேட்க இனிக்கும் நாவல் புல்-புல்-தாரா அல்லது ஏமாந்த சோணகிரி விலை அணா 2.

மிஸ் K. B. சுந்தராம்பாள் கொலம்பியாவில் பாடியது

பிளேட் நெ. L. E. B. 7 ஆலோலமென்று கூவினள்

இராகம்-கமாஸ்

172809

பல்லவி

37 ஆலோலமென்று கூவினள் தினைப்புனத்தில்
ஆலோலமென்று கூவினள் பரன் மீதேறி ஆ

அநுபல்லவி

பாலோ சுவைசே ரமுதாலோ மதித்ததிந்த
பைங் கொடியாளிவள் இசை நலமென
இந்து வதனமுள்ள எழில் சோபிதமே ஆ

சரணம்

கடகாகரங்கள் மின்னவே சோ! சோ!
எனும் சொல் கனிவாய் சுரங்கள் பன்னவே
கமல மலரை நிகழும் பழமை நிலவிய
கனகமணி பணிகள் எழிலொரு பழகிய
கதித்த வீணை தானென உவமை உரைக்க
கவணெறிந்து பரன்தனி சிறந்து
மகிழ்வாய் மனதுவந்து மதிமயங்கி விரைவாய் ஆ

வடுகு கன்னடம் மலையாளம் முதல் திராவிடம்
மதித்த வேதத்தினியவள் போலே

புனிதமான கியானேஸ்வரியை
காண காணேன் இனியாவளே ஆ

பிளேட் நெ. L. E. B 9 மோக்ஷமு கலதா
இராகம்-ஸாரமதி தாளம்-ஆதி
பல்லவி

38 மோக்ஷமுகலதா புவிலோஜீவன்
முக்துலுகானி வாரலகு மோ

அநுபல்லவி

ஸாக்ஷாத்கார நீ ஸத்பக்தி
ஸங்கீத ஞான விஹீனுலகு மோ

சரணம்

பிராணுகலஸம் யோகமு வல்ல
பிரணவநாதமு ஸப்தஸ்வரமுலைபரக
வீணுவாதன லோலு டௌசிவமனே
விதமெருகரு த்யாகராஜ விநுத மோ

ஸ்ரீமான் S. V. சுப்பைய பாகவதர்
கொலம்பியாவில் பாடியது

பிளேட் நெ. G. E. 31 முன்னம் ஒரு சன்யாசி
ஆனந்தபைரவி

39 முன்னமொரு சந்யாசி வடிவமாகி
சுபத்திரையை முடித்து வைத்தாய்
பின்னமொரு அல்லி யென்னும்
பேராளைப் பேணித் தந்தாய்
இன்னும் நீ ஏ கிருஷ்ணு மு

கடலூர் மிஸ்டர் A. V. நாகசுந்தர ராஜா கொலம்பியாவில் பாடிய பாடல்.

பிளேட் நெ. G. E. 35 சகடயோக மகுடராணி.

இராகம் அட்டாணா

40 சகடயோக மகுடராணி
சரசமாட வருவாய்ப்பேணி
பகடியேனோ கமலவேணி
பருவரூபவதி கல்யாணி சக

விகசித புது மது மலரனே
விரும்பி குஞ்சாரம் தமிழ்கவிதனே
ரகசியமொடு பழகிடுமெனே
நளினமாகவே கலந்து வந்தனே சக

டம்பக்கிளி மதனூர்
தென்றற் புதுரதமே
சிந்தைக் கொரு விதமாய்
சிந்தைக் கொடைதொடவே

ரதியே ததியே மயலாகுதடி
அதனு லினமே லுறவாடிட்டடி
ரஞ்சித் திடு சமுகத்தே
கொஞ்சத் தான் நெஞ்சத்தே
நாம் பழகலாம் புதுமை
யாம் புவியில் சக

காதற் களஞ்சியம், ஆனந்த ஊற்று, இனியமொழி இவைகள் அமைந்து மருதூர் A. பிரபாகர சாஸ்திரியார் எழுதிய மதன சிங்கர் அல்லது உரிமை இழந்த சீமான் விலை ரு. 1

திருவண்ணாதபுரம் சங்கீத ஸாகரம்
V. அண்ணாதுரை பாகவதர் பாடியது
பிளேட் நே. 8117 சன்னிதானமே 1 & 2

ராகம்-ஷண்முகப்ரியா தாளம் ரூபகம்.

பல்லவி

41 ஸன்னிதானமே
மன்னும், கலியுகவரதன் திரு ஸன்னி
உன்னிப்பலர், நன்னிப்பனி, சென்னிக்கிணி
நருமலர் கமழ்தரும் ஸன்னி
உகந்துவந்தடி பணிந்தெழுந்தவர் குயர்
பதம் தரும் ஸன்னி
நித்தம் உன திருபதம், முத்தம்தருமென வுரு
சத்தம்பெரு ஸன்னி
முத்திக்கொரு, வித்தைக்கருதிய, சித்தத்துடன்
மெத்தப்பணிவொடு, தொழுவம், அவர்-இது
சதமெனவே, சொலுமறையின் ஒளிநிறையும் ஸ
இருவினையொடு, திருமலங்களை, கறுவறுத்திடும்
குருவடைந்தவர்-சுருதிக்குள், விதித்ததைமதித்து
யுக்திக்கனுசரித்தரநெரியும், கற்பிதவழிக்குரிய
தொரு-புகழுறைத்தடிவரடும் ஸன்னி

அநுபல்லவி

சென்னிலம்சூழ்திரு-செந்தூறையாள் குரு
நாதன்-விநோதன்-சுபோதன்-அருளனுதினம்
பெருகிடும் ஸன்னி

சரணம்

காவடி நின்றாடும்-சாவடியைக் கோடி
கூர்வடிவேல்கொண்ட-பூவடியார்தேடி
மாவடிவென்றனர்ச்-சேவடியைநாடி
கூடி அங்கோடி-பண்பாடி துதிபுரிந்
தகமகிழ்ந்திடும் ஸன்னி

மதுரை மிஸ். சுப்புலக்ஷிமி
மாஸ்டர் வாய்ஸில் பாடிய பாடல்கள்.

பிளேட் நே. 3738 மாறுதலானவனே

இராகம் இந்துஸ்தான் பியாக் ஆதி தாளம்

பல்லவி

42 மாறுதலானவனே பறங்குன்றினில்
ஆறுமுகத் தோடிருப்பவனே மா

அநுபல்லவி

ஆதியில் தென்பறங்குன்றனெனும்
காருணியின் திருப்பறங்குன்றனென மா

தொகையறு

ஸிக்ஸ் யெனும் இங்கிலீஷ் எண் அந்தரெனும்
பதம்சேர்த்து திகழும் மலேயனே
சர்க்கரைப் பொங்கல் புளியோதறப்பிரிய
னிளைய தம்பியாம் ஆறுதலேயனே மா

பாட்டு

திருவருள் புரிந்திடும் தருணமிடியிது தறிவாய்
ஒரு நிமிஷமும் தாளமுடியாதுதறிவாய்
சேவர் கொடியா முராஹரிதாஸ் ஆறுவர்
பரம்பொருளே குமரேசா மா

T. M. சாரதாம்பாள் ஓடியனில் பாடிய பாடல்

பிளேட் நே. C. A. 601.

பல்லவி

43 காந்திரிஷி நம்மை காத்திடும் ஸமரவலி
காந்திரிஷி நல் வேதாந்த ரிஷி வெகு
சாந்த ரிஷி நம்மைக் காத்திடும் ஸமரவலி காந்தி

சரணம்

ஆய்ந்த சுதேச மக்கள் ஆஸ்தியாக வந்தவர்
ஆழியினும் பொருமை காட்டி ஆதிக்கமாய் நின்றவர்
தேர்ந்த கலைஞானத்தில் தேவகுருவை வென்றவர்
ஜீவர்கட்கு ஹிம்ஸை இலா தீரப்போர் புரிந்தவர்
தீண்டாமையே இனிவேண்டா மென்றெச்சரிக்கும் (காந்தி)
தேசத்திர்க்குழைத்துவாடி தேகமும் மெலிந்தவர்
சீமைத்துரைமக்களை சிரித்து வஸ்யங் கண்டவர்
ஆசையுடன் மன்னர்வேண்ட அரும்விருந்தாய்ச் சென்றவர்
அன்ன ஆகாரம் இல்லாமலும் ஆத்மசக்தி கொண்டவர்
ஆண்டவனால் இடும் ஆணையிலே நடக்கும் (காந்தி
தாழ்ந்தவரை தாங்குவதில் தயைகாட்டும் புண்ணியர்
தாய்நாட்டுச் சமூகத்திற்கே தாமூட்டுங் கண்ணியர்
வாய்ந்த கதராடை தன்னை வளரச்செய்யும் லாவண்ணியர்
வஞ்சமது பானம் நீங்க வழுத்திடுங் காருண்ணியர்
வண்டாரும் தேன் தமிழ் வாக்கிய சுந்தரன் துதி (காந்தி)

மதுரை D. R. முத்துலக்ஷிமி கொலம்பியாவில் பாடியது.

பிளேட் நெ V. E. 48 தாசி கடன்

44 விருத்தம்

தாசியின் கடனுக்காக சாப்பிட மாட்டேனென்றே
பேசிய வார்த்தைகேட்க பெருந்தீய பிணக்குண்டாச்சே
மோசமும் சூதும் வாதும் முறையில்லாரிடத்தில் சத்யமும்
தோஷமும் விளைந்திடாது துணிந்தன்னம் உண்ணவாரீர்.

எல்லா பத்திரிகைகளாலும் நன்குபுகழப்பட்ட அதிசய துப்பறி யும் நாவல் ருக்மிணிகாந்தன் அழகிய படத்துடன் விலை ரூ 2.

T. M. சாரதாம்பாள் ஓடியனில் பாடிய பாடல்
பிளேட் நே. C. A. 601 ஆத்மயாகம்
(மகாத்மாகாந்தி உபவாச கீதம்)

பல்லவி

45 ஆத்மயாகம் பூர்த்தி செய்தார் ஹரிஜன வுயிர்த்தோழன்
காந்தி ஆத்ம

அநுபல்லவி

சாத்மீக அஹிம்சா தர்மசித்தாந்தி சத்ய தரிசனத்வ
வேதாந்தி ஆத்ம

சரணம்

ஸ்ரீ முகச் சித்திரைத் திங்களிருப்பத்தாரில்
ஜெயபீஷ்ம விரதங் கொண்டார்
தேவிதாஸ் சரோஜனி மகா தேவர் பிரார்த்திக்கத்
தேன்பழச்சார் நீருண்டார்
தீமுகத் தீண்டாமை யொழியவே பரிசுத்தம்
சேர நேர் வழியைக் கண்டார்
தீரனிருந்தோர் தினம் பட்டினித்தவம்
செய்வதாய்ச் சபதம் விண்டார்
தேச மக்கள் தெய்வ தோத்திரம் பாட
மாசற்ற பாரதமாதாகொண்டாட (ஆத்ம)
சிறை வாசம் நீங்கியே தாக்கர் ஸேபர்ணகுடி
சேர்ந்த காருண்ய மூர்த்தி
சேவை பெற வந்ததொரு ஹரிஜனச் சிறுவனிடம்
தேறுதலை சொன்ன நேர்த்தி
முறையாகவே சட்டமறுப் பெலாம் நிறுத்தவே
மொழிந்திட்டாரறிக்கை பூர்த்தி
முன் வந்து சர்க்காரும் சமரஸம் பெருகவே
முயன்றிட்டாரிதுவே கீர்த்தி
மோகன அஸ்திர விவே கப்புன் சிரிப்பில்
லோக வுத்தாரண தியாக உச்சரிப்பில் (ஆத்ம)

பந்தவ்ரதம் வைகாசி பதினாறு நல்லுச்ச
பகற்றிங்கள் பூர்த்தியாக
இந்து முகம்மது பார்ஸி ஏசுமத கீதமுடன்
இனிய கஸ்தூரி மாதா
தந்த பழரஸமுண்டு அன்சாரி கைலாகு
தாக் காலன் தனையே வென்றூர்
முந்து முப்பது கோடி ஜனத்தலைவர் வெற்றிபெற
முக்காலும் வாழ்த்துவோமே
முக்ய சுதேச பக்தியுப தேசிக்க சற்குண பாஸ்கர
கீதம் ப்ரகாசிக்க (ஆத்ம)

பிளேட் 3739 வடிவேலா செஞ்சுருட்டி

பல்லவி

46. கதிர்வடிவேலா உமைபாலா அனுகூலா கதிர்

அநுபல்லவி

துடியிடை வள்ளிமோகா
தேனைகமா மயில்வாகன
தொண்டர் கொண்டாடும் சிவயோகா கதிர்

தொகையறு

மேலான நினதுபுகழ் பாடவேண்டும்
மெய்யாக உருகி உனைத்தேடவேண்டும்
மாலாம் பெண்மாய்கையை விட்டோடவேண்டும்
மறலிபயமறுத்தே கொண்டாட வேண்டும்

பாட்டு

குன்றுதோ ராடும் பாதா
குமர பாஸ்கர கீதா
கோதில்லா நீதியருள் நாதா

சர்வதேசப் புரட்சியின் ஆரவாரம், குடிமுடிப் போரில் சமதர் மக்குழப்பம், மகுடமன்னர்கள் முடியிழந்த வரலாறு தெரியவேண்டு மானல் தென்பாதி T. S. கனகசபை பிள்ளை எழுதிய "அறுபது தலைவாங்கிய அற்புதவல்லி" படியுங்கள். அழகிய படங்களுடன் ரூ 1—8—0

மதுரை ஸ்வரஜோதி
T. A. நாகசுவாமி பாகவதர்

பிளேட் நெ. 3740 பேயிடத்திலென்னை

பல்லவி

47 பேயிடத்திலென்னைத் தள்ளப்பேசுகின்றீர் பெண் பே

அநுபல்லவி

நோயிடத்தில் விழுவேனோ நொந்துமனம் தாழ்வேனோ
தீயிடத்தில் சேர்ந்ததேகம் தேறுவேனோ பே

தொகையறு

பாழான நரகிலும் கீழான சிற்றின்ப
படுகுழியை எண்ணலாமோ
பாசவலை வீசிடும் நாசமட மாதர்தம்
பக்கத்தில் நண்ணலாமோ
பக்தி வழி தேடு வேனே
பாஸ்கரன்சொல் பாடுவேனே
முக்திபெற ஈசனைக் கொண்டாடு
வேனே பெண் பே

உரையூர். ஆர்மோனியம்
T. M. காதர்பாஷா

பிளேட் நெ 3741 மாயப் பிரபஞ்சமடி பாப்பா 1 & 8

இராகம் செஞ்சுருட்டி.

48 மாயப் பிரபஞ்சமடி பாப்பா இதில்
மயக்கம் நீ கொள்ளாதடி பாப்பா
நம் காயம் பொய்யாகுதடி பாப்பா
இதை கண்டு தெளிந்திடடி பாப்பா
பெண்டுபிள்ளைகளெல்லாம் பாப்பா நம்மை
பிடுங்கித் தின்னும்பேயடி பாப்பா நமக்
குண்டோ இதிலென்சுகம் பாப்பா வெறும்
ஊற்றுச் சடலமடி பாப்பா

பொய்யுல காகூியடி பாப்பா பொல்லா
பொம்மலாட்டமடி பாப்பா
சிறுமெய்து கொஞ்சமில்லே பாப்பா மேக
மின்னற்போலே மறையும் பாப்பா

மதுரை T. B. தனலக்ஷிமி ஓடியன் ரிக்கார்டு

பிளேட் நே. C. A. 614 வேடா விறைவினில் போடா

பல்லவி

49 வேடா விறைவினிலே போடா
வீம்பு செய்யாதே மூடா வீண் அலேகுராய் கூடா நீ
மெத்தவும் மயங்கிக் காமபித்தம் பிடித்தே புலம்ப
வேண்டாம் தீண்டாதே—கேடா வேடா
மானங்கெட்ட வேடுவனே மருத்திடாதே நில்லு
இந்த மானுக்கு அதை சொல்லு
இந்த மானுக்கு நீ புல்லு வழி
மாற்றமெல்லாம் நானறிவேன் மார்க்கமீதே செல்லு
வேடா
ஏற்டெ. ஊைப் பார்த்து பார்த்து
எடுக்குராய் பெருமூச்சு—உந்தன்
எண்ணம் வெளியாச்சு—இங்கு
ஏலாதுன் கைவீச்சு—தப்பி
ஏகிடுவாய் யூகம் சொன்னேன் ஏனோ இந்த பூச்சு வே
காட்டில் வந்து கவெணறியும்
கன்னிகுற வள்ளி வெகு
கண்யமுள்ள புள்ளி எனக்
கருதுவாய் நீ யுள்ளில் தமிழ்
காவியனும் சுந்தரன் சொல் கவனங்
கொள் வாயுள்ளில் மானங்

V. S. ஸ்ரீனிவாசன் & பி. கிருஷ்ணவேணி

சம்பாஷணை

(சத்தியவான்-சாவித்திரி)

பிளேட் நெ. C. A. 598 ஏனோ என்னை எழுப்பலானாய்

50. சத்—ஏனோ என்னை எழுப்பலானாய் மடமானே—எனக்
கதனை உரைக்கவேணும் இசைந்து கேழ்ப்பனானே

சாவி—சிங்கத்தால் நானடைந்ததுன்பம் தீர்த்ததாலே
செய்தநன்றி யெண்ணி வந்தேன் எந்தனன்பினாலே

சத்—எந்தவூரோ இருப்பது ஏதுபெயர் தந்தை எந்தனுக்கு
நீ யுரைத்தால் இன்பங் கொள்ளும் சிந்தை

சாவி—அழகிய மதுராபுரி அஸ்வபதி புத்ரி—அக்கம்
பக்கத்தோர்கள் என்னை அழைக்கும் பெயர் சாவித்ரி

சத்—இன்னும் மணமானதோ இல்லையோ நீ ஓது—
இச்சை கொண்டேன் கேட்பதற்கு வெட்கையும்படாது

சாவி—சொல்ல வெட்கமாகுதெனக் கின்னும் மணமில்லை
சொந்தமான தாய்தந்தையர் எண்ணிடவுமில்லை

சத்—தையலே உன் இன்பமொழி தந்தது சந்தோஷம்—
தரணியில் ராஜமைந்தர் யாருமீதில் நேசம்

சாவி—சாலவபுரியை யாளும் த்யுமத்சேனன் புத்ரன்—
சத்யவான் என்பார் மேல் இச்சை சார்ந்து மையல்
[கொண்டேன்

சத்—ஆகா சத்யவான் என்று சொல்வோர் நான்தான்
[மாதே

சாவி—அப்படியா அப்படி யானந்தம் இப்போது!

சத்—ஆனந்தத்திர்க்கு ஏது குறை ஆசை தந்தாலே

சாவி—அன்புகொண்ட பேர்களுக்கு இன்பம் நீங்காதே

சத்—அற்புதமே மிக்க ஒரு முத்தம் தா இங்கே
சாவி—அன்பாய் தருவேன் யான்
சத்—நின்பால் வருவேன் யான்

(இரண்டு பேரும்:—ஆனல் போவோம்)

மறுபக்கம் (சாவித்திரிக்கும்—எமனுக்கும் தர்க்கம்)

51. சாவி—யமதர்மராஜ என் நாதனுயிர் தாரும்
எமன்—இதனலாகுமா
சாவி—வேதனை போகுமா
எமன்—இது வேளையில் வாதுரை யாடுவதேனே
ஆயுளுமே முடிவதினல் என் ஆணையை மீறிடலாமா
சாவி—மணவாளனுமாகிய நாயகனுவி மாயவும் வாழ்வ
[தாமா
எமன்—யார் என்ன செய்யலாம்
சாவி—நீர் தயை செய்யலாம்

விசலூர் நாடக கான சிரோன்மணி
N. சுப்பிரமணிய பாகவதர்

பி. நே. 3753. மதனசுரதமயிலாள் 1-2 இ-ம் சங்கராபரணம்

பல்லவி

52 மதனசுரத மயிலாள் இவள் மத

அநுபல்லவி

மங்காத சங்கீத மாமதுரித பூங்குயிலாள் இவள்
மானில மீதினிலே தமிழ் மத

சரணம்

ஞானிகளே புகழ்வாசகி இவள் மத
வட்டப்பட்டுக் கச்சினில்
முட்டுக்கட்டும் பொற்கனதன மத

இந்நாவலைப் படிக்காதவர்கள் அதிர்ஷ்டமற்றவர்களே !

தமிழுலகம் இதுகாறும் கண்டிராத அதிசய நாவல்!

அறுபது தலை வாங்கிய அற்புத வல்லி

நாகரீக உலகம் நடுநடுங்க அறுபது தலைகளை வெட்டி வீழ்த்தி சர்வ தேசங்களிலும் புரட்சி கோஷத்தை எழுப்பிய அற்புத நங்கையின் வீரப்பிரதாபம்

தென்பாதி T.S. கனகசபை அவர்களால் எழுதப்பட்டது

திவான்பகதூர்
M. K. ரெட்டியார்
அவர்கள்
இந்நாவலுக்கு முகவுரை
எழுதியிருக்கின்றார்.

380 பக்கம் அநேக ஆப்டோன் படங்களுடன் . . . . விலை ரூ. 1/8

புல் புல் தாரா
அல்லது
ஏமார்ந்த சோணகிரி அ. 2

சொல்ப காப்பிகளே கைவசமுள்ளது. ஆர்டர்க்கு முந்துங்கள்.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய நாவல்

ருக்மிணீகாந்தன் அல்லது ஆபத்தில் காக்கும் அன்பர்கள் விலை ரூ. 2

மதித்துமனம் பதித்துநிதம்
துதித்திடவே நிதிதருணியிவள் ம
வஞ்சகமில்லாத குணகரி
அஞ்சுக சீல மனோகரி அதி ம
வதனமேவும் முகசிங்காரி
மாசிலா ராஜகுமாரி ம
ஹிதமுரா துணை செய்யுமுதாரி
இன்பசுகந்த மணிந்ததி ம
அன்புததும்பிய சுந்தரி சுக ம

தொகையரு

நாரணனும் நான்முகனும் நம்பு மகாதேவனுமே
நாடி ஒன்றுகூடி படைத்தாரோ
பூரணசேவை கொடுத்திட பூவையை நாலுமடுத்திட
பாரினிலே புகழ்பாஸ்கர அருந்
தமிழ் மணபதம் தனையே நிதம்மகல
ஹிதம் பெருகு மதி

பிளேட் நெ. 3870 கட்டாணி

இராகம் காபி, தாளம் ஆதி.

கண்ணிகள்

53 கட்டாணிமுத்தே என் கண்மணியே
உன்னை விட்டகலேன்—மடமானே
தொட்டால் மணக்குது சொன்னால்
இனிக்குது தோகையுன்தேகப் பேர்தானே
தித்திக்கும் முக்கனி தேனுடன் சக்கரையும்
சேர்ந்ததைப் போலொருவாக்யம்
எத்திக்குமே யொரு சய்திக்கச்சம்மதி
இங்குரைத்தாலது பாக்யம்
ஆனந்த வஸந்த காலமிதுவடி
அங்கஜனோடு விளையாட
ஞானந்தரு மதுரைபுரி பாஸ்கர
நாதவேத கீதம்பாட

கும்பகோணம் சங்கீதவித்வான்
செம்மங்குடி S. சீனுவாச அய்யர்

ராகம் காம்போதி-ஆதி தாளம்.

பல்லவி

54 திருவடிசரண மென்றிங்கு நான்நம்பிவந்தேன்
தேவாதி தேவா நின் தி

அநுபல்லவி

மறுபடியும் கருவடையும் குழியில் தள்ளி
வருத்தப்படுத்த வேண்டாம் பொன்னம்பலவா தி

சரணம்

எடுத்த ஜனனம் கணக்கெழுதத்துலையாது
இரங்கிமகிழ்ந்து தேவரீர் வேணுமென்று
கொடுத்த மனிதஜென்மம் வீணாச்சுது
குறையும் தீர்ந்த பாடுமில்லையே
அடுத்து வந்தனின்னே உன்னை
அடுத்துவந்தவன் தன்னலாகாது ஹர ஹரா
வென்றொருதரம் சொன்னாலும்போதும்
தடுத்தாட்கொள்ள இதுசமயம் கோபாலகிருஷ்ணன்
ஸந்ததமும்பணிந்து அவர்மஹிமை தி

திருகோகர்ணம் T. N. மாணிக்கம்

பிளேட் நெம்பர் 3880 வண்டினுங் கருங்கூந்தலோ

ராக மாலிகை.

55 வண்டினுங் கருங் கூந்தலோ மதன வாட்டும்
[வில்லிவள் புருவமோ
கண்டமே யருஞ்சங்கமோ முகம் கார்த்திய சந்திர பிம்பமோ
கண்டதும் கவலைதீர்க்கும் என் காதலாள் தனியாயிதோ
அண்டர் பூபதிவனிதை போலிவள் ஆலோலத்தைப் பாடு
[கிறாள்

நிகரற்ற கள்ளபார்ட்டு சிங்கம்

T. N. ராமலிங்கம் பிள்ளை, தஞ்சாவூர்

பிளேட் நெ. 8130

காமிக்

56 நாகரீககாலம்வந்து நானுவிதமாய் கெடுத்து
போகுருரே என்கணவன் பிள்ளைகுட்டியை விடுத்து

பாட்டு

புதுமைகிருப்பு வைச்சதென்ன வீருப்பு
பூடுசுகுடை ஷோக்குசட்டை வீணான மதிப்பு
இப்போ நாங்கிடக்கிற கிடையிலே
நாட்டுகோட்டையார் கடையிலே
வாங்கினகடன் அடையிலே
வந்திருக்கிற முடையிலே
இந்தமனுசன் கெட்டகேடுக்கு
ரெண்டுபெண்டாட்டி ஆசையாம்
இசுக்கு பிசுக்கு தட்டிக்கின்னு
இழுபடுதே மீசையாம்
இந்தகுடித்தனம் மிக தடித்தனம்
இதைநடத்தணும் வழிபடுத்தணும்
பெண்ணைக்கட்டிக் கொடுக்கணும்
பேரன் பேத்தி யெடுக்கணும்
அண்ணிகொஞ்சம் துடுக்குகாரி
அவளை அடக்கி ஒடுக்கணும்
முன்னடி வீட்டுக்காரி
மொண மொணப்பைத் தடுக்கணும்
காசுபணம்வேணும்
கவலைதீரத்தானும்
பேசும் ராமலிங்கம் டப்பா
பிரபலமே தோணும்

உறையூர் T. M. காதர்பாக்ஷா சாயப்பு

C. சரஸ்வதிபாய் ஓடியன் ரிகார்டு

பிளேட் நெ. A. 105

பல்லவி

57 மோகனரூப மனோகரன் நீரே உன்னை
நம்பினவர் வடிவாய் வந்தீரே ஜகன் மோ

அநுபல்லவி

தோகை யென்மேல் என்ன துயரமோ கோபமோ
துணிந்துமவுனமே கொள்ளலாமோ முறையாமோ
தூயனேபரம நேயனே வாயனே மோ

சரணம்

ஏழையென்மேல் உமக் கிரக்கமும் இல்லையா
எனையருட்கண்பார்ப் பதுமில்லையா மனமில்லையா
என்னையாள் கருணைக் கண்ணனே நன்னய மோ

பிளேட் நெ. A. 105

பல்லவி

58 அன்பே உமைப்பிரிந்தேனே
அடியாள் மனம் நொந்தேனே அ

இனிமை நிறைந்த நாவல் வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது. கோபாலரத்னம் விலை அணா 14.

அநுபல்லவி

துன்பம் சகித்திலேனே வருந்தினேனே துயரால்
உயிரும் தரித்திருப்பேனோ
உமையன்றி வாழ்வேனோ
எனதாவியான நாதா
எனையேன் அகன்றீர் நீர்தான் அ
செல்வப்போகங்கள் வேண்டேன்
செல்வப்பொருள்கள் வேண்டேன்
எல்லாம் நீ யென்றுதானே
இருந்தேன் இந்நிலையிலானேன் அ

கொடிமுடி மிஸ் K. B. சுந்தராம்பாள் பாடிய பாடல்கள்

பிளேட் நே. L. B. E. 11 ஆயலோட்டும் பெண்ணே
இராகம் மாண்ட்

பல்லவி

59 ஆயலோட்டும் பெண்ணே பெண்ணே
ஆயலோட்டும் பெண்ணே பெண்ணே ஆ

அநுபல்லவி

ஆவியே என்னுருயிர் சஞ்சீவியே
மன்மதனென்னும் பாவியே
மலர்க்கணைகள் தூவியே
வாட்டுறான் கண்ணே ஆ
தென்றலாலே பெண்ணே
பாயும் தென்றலாலே பெண்ணே
பாங்கியே மெத்தவும் மனம் ஏங்கியே
வந்தனை மோகனங்கியே மனத்துயரம் ஓங்கியே
வாராய் கண்ணே ஆ

பிளேட் நெ. L. B. E. 11 வெட்டுண்ட கைகள்

பல்லவி

60 வெட்டுண்டகைகள் வேதனையாகி
மிகவுதிரம் வழிந்தோட வெ

அநுபல்லவி

தட்டுண்ட காட்டில்
தவிக்குரே ஐயோ ஐயோ
தலைவிதியோ தெய்வமே தெய்வமே
ஆதரிப்பார்கள் யாரையும் காணும்
அனுதியாகினேன் தெய்வமே தெய்வமே வெ
தீதிவையெல்லாம் தீவினையாலே
எடுத்த ஜென்மம் தெய்வமே தெய்வமே வெ

S. G. கிட்டப்பா கொலம்பியாவில் பாடியது

பிளேட் நெ. L. B. E. 28 ஜீவசிந்தாமணி

பல்லவி

61 ஜீவசிந்தாமணி யெந்தன் தெய்வநாயகா
தினம் நினைந்துருகினே னருள் செய்வாய்தாயகா ஜீவ

இனிமை நிறைந்த நாவல்! கனிரசம் போன்ற நாவல்!
காதற் கடிதம் மிளிரும் நாவல்!

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதியது

கோபால ரத்னம்

விலை அணு 0-14-0

அநுபல்லவி

என் மன மகிழ்ந்தே னருகினில் வாரும்
மலர் வாயினொலொரு முத்தம் தாரும்
மிகக் கனிவுடன் என்கலி தீரும்
அருகில்வந்த நேயமிருந்த அமரர் பிரானே
மனமுவந்து மரகதநிற மைந்த மகிமையோனே ஜீவ

சரணம்

புகழ்புவன சுந்தர நாதா யெழில்
அரவணை துயிலும் விநோதா தவ
புனித புங்கவ சமேதா
பூந்தாமரைப் பொற் பாதா அடியாள்
போற்றும் பிர போதா ஜீவ

இராகமாலிகா-ஆதி

பல்லவி

62 மகா சுகிர்த ரூப சுந்தரி—மதி
வதனியே புனிதையே வினையமா
மனோகரியே மதனரதியே மகா

அநுபல்லவி

முககோகில மிருது வசன சுபாஹித அலங்காரியே
சுரவனிதையர் தமையே நிகரும் சுமுக மோகனாங்கியே
பகரொணாத எழில் நிலவிய பாவையே கருணாகரி
பதுமநேத்ரியே உல்லாச பாக்யவதி வசிகரி மகா

சரணம்

பருவகால தருணி கண்ய பாமினி மனோன்மணி—சௌ
பாக்ய விபவ சிலாக்யநாயகி உனையல்லாது
தேருதல் வாய்மொழி புகல்பவர்
யாரோ தெரிகிலேனே இனி
ஆருதலோடென்னை நீ அணைவாயெழில்
[சேர்மானே

மதனுடல் மெலிந்தேனே இகமே யுறைசெய்தே
[னறிகுவாய் (மகா)
ஆலோலமென்றே கூறும் நின் அமுதமான
[மொழியில்
எனதாசையும் மீறுதுமட அன்னமே அழகு சொர்ணமே
ஏலாதி மாதரசி சிறந்த யூகக்குணத்தரசி
இதத்தொழில் மனத்தினில் நிகழ்த்திடும் (மகா)

பிளேட் நெ. L. E. B. 8. மாதரசே மயிலே

இந்துஸ்தான் வர்ணமெட்டு

பல்லவி

63 மாதரசே மயிலே ஆசை மா

அநுபல்லவி

மௌன மாகுமே குயிலே ஆசை மா
நீ தயவு புரிவாய் இனி (நீ தயவு)
எந்தன் நேரிழையே வருவாயே ஆஹா மா
மா மலரா ளனையே முனம்
மா மலரா ளனையே பொல்லா மா

சரணம்

அம் மதவேள் செயுவேதனையே
சகியேன் எந்தன் கோமளமே
மகிழ்வா எனைக் குலவச் சமயம்
வருவாயே ஆசை மா

பிளேட் நெ L. B. E. 12 அன்றொருநாள் விருத்தம்

விருத்தம்

64 அன்றொரு நாள் குட்டி அரும் சிறையிலிட்டேனுன்
தந்திரத்தால் இங்கெதனை யெண்ணி எனை வருத்த
வள்ளி இவளைப் படைத்து மையல் சிறையிலென்னை
தள்ளி அடைத்தது வேதந்தான்

பிளேட் நெ. L. B. E. 12 எல்லோரையும் போல

ஸுத்த சாவேரி

பல்லவி

65 எல்லோரையும் போலவே என்னை
எண்ணலாகு மோடி போடி எல்

அநுபல்லவி

வல்ல மிருதருசெல்வ செல்வனெனும்
சுப்பிரமணியனிடத் திலே
கண்ணியமில் லாமலே எல்

சரணம்

ஜாடை தெரிந்து கொள்ளவேண்டும்
தந்திரமாகவே விள்ள வேண்டும்
சேடிமார் போதனைகளைநிகழும் செய்துதள்ளவேண்டும் எல்

எடுப்பு

மோடி என்னடி பாலும் பதக்கும்
மோரும் பதக்கும் என்று உரைக்கத்தகுமோ
முக்கியமாய் இதை உனக் கிசைந்தமணி பொக்கிஷமாகவே
நினைக்க வேண்டு மல்லாமல் எல்

சங்கீதவித்வான் S. V. சுப்பையா பாகவதர்

கொலம்பியாவில் பாடிய பாடல்கள்

பிளேட் நெ. 44 பார்வதி தருபாலகா

இராகம் அரிகாம்போஜி

பல்லவி

66 பார்வதி தருபாலக நமோ நமோ—திரு
பார்வதி தருபாலக நமோ நமோ
உன்பாதம் நம்பினேன் பா

அநுபல்லவி

நேர்வருக ஜனகசம்சார நிமல பிரணவரூபகார பா
ஐங்கரவிராஜனனே விக்கின விநோத
புகழும்புவியெங்கும் விளங்கிடும் மங்கள நாதா பா
இங்கிர்தகுண வரப் பிரசாதா எனக்குன்
அருள் வாழ்வைத் தாதா பா

பிளேட் நெ. G. E. 44 காதல் மனோகரி

பல்லவி

67 காதல் மனோகரியைக் கண்டேன்கண்டேன்—மிக
ஆதரவான மையல் கொண்டேன் கொண்டேன் திரு கா

அநுபல்லவி

பாதப்பிரசாத அமுதுண்டேன் உண்டேன்
இனிபகருவாய் கா

தொகையரு

சந்தனமும் குங்குமமும் தனிப்புனுகும் ஜவ்வாதும்
சரியாய்ப் பூசி
செந்தமலர் பள்ளியறை யலங்கரித்து அதிலிருவர்
கனிவாய் பேசி
கந்தமலர் கனிசிரமும் வீசும் மலர் தென்றல்
மதி விரித்தாட
சிந்தைமகிழ்ந்து அனுராஜபோக சுகஜீவிப்போம்
ஜீவிப் போம்

பாட்டு

விதகுண கரனே நேர்த்தி நேர்த்தி (வதுர்)
வேதகுண தமிழ் வாசி வாசி
விதசபாஸ்கர ராசி ராசி
கிருபைதானே கா

பிளேட் நே. G. E. 112

அமீர்கல்யாணி-ஆதி தாளம்

பல்லவி

68 மலர் சூடி விளையாட வருவாயே ம

அநுபல்லவி

பலவித லீலை செய்து பருவ காலத்திலே கூடி
பாங்கு பெருகவே கொண்டாடும் ம

சரணம்

நரு மிகும் தென்றலாளே
நண் புகழ் மன்றலாளே
நம்பும் பாஸ்கரன் தமிழ் நாமே இனி ம

பிளேட் நே. G. E. 112 காபி ஆதி.

பல்லவி

69 தேனே மாங்கனியே தெய்வ மோகினியே தே
நல்ல மாங்கனியே தெய்வ மோகினியே தே

கஜல்

நானே உண்மை யான காதல்
தானே கொண்டு நாடினேன்
நாயகியே நீ யறிவாய் நேயமாகப் பாடினேன் தே

தொகையறு

வானோர் புகழ்ந்திடும் மாமதுர வசனியே
என் வன்னமயிலே என் பருவப் பெண்ணே நீ
வாது செய்யாது என்னைப் பாது காப்பாய்
வன்னப் பருவ இன்ப மயிலே தே
மாசிலாத நேசியே உன் ஆசையாலே வாடினேன்
மார்க்க மோன தீர்க்கஞான
பாஸ்கரன் சொல் பாடினேன் தே

பிளேட் நெ. G. E. 123 இராகம் காபி ஆதி-தாளம்

பல்லவி

70 ஏனோடி இந்தக்கோபம் என்மேல் உனக்கு
மானார் விழிமயிலே மான்குயிலே ஏ

அநுபல்லவி

மனக்குறைபது சொல்வாய்
மதனவதன நல்ல கனகசித்ரக் கிளியே
கண்ணொளியே ஏ

சரணம்

உருவே எனதாசை தரும துரையே
தீங்கான பூமிதனில்
பருவம் மிக்க ரதிமானே இன்று ஏ

பிளேட் நெ. G. E. 118 தனக்கோர்
(ஆனந்த பைரவி)

71 தனக்கோர் யிணையில்லாதவள் தாரணிதன்னில் த

மருடங்கள்

சந்தித்தே வந்தித்தே பழகிட
நந்தித்தே சிந்தித்தே தாரணியில் த

சாதுரியத்துடனே மொழிபேசிட
மாதுரியத்துட ஞர்கனி கூசிட
சகலகலையுணரு மிவளொரு சரஸ்வதி
இகபர சுதந்தரு இதமிகு குணநிதி த

பார்க்க, படிக்க, கேட்க, தெவிட்டாத இன்பத்தைதரும் நாவல்
புல்-புல்-தாரா அல்லது ஏமாந்த சோணகிரி. அணா 2.

சரணம்

இவளே தருந்த தேவி
இன்றே ஜீவ சஞ்சீவி
வனக் கோகிலம்போல் தாவி
வருந்தெய்வ மருந்துண்ண மதிமதி த

பிளேட் நெ. G. E. 99

பல்லவி

72 நம்பினேரை கைவிடுதல் ஞாயமா
ஞானபண்டிதா என் பிதாயமா நம்

அநுபல்லவி

அம்பிகையின் பாலகுகா
ஆதிகுருநாதா ஷண்முகா

ப. எடுப்பு

தும்பிமுகன் சோதரா மகா
ஸ்வாமிமலை மீதிலே சுகா நம்

சரணம்

உன்னையன்றி தெய்வமுண்டோ
உன்மையது வார்த்தை ரெண்டோ
அன்னை தந்தை சேயர் பெண்டோ
அகம்வரப் பார்க்கக் கற்கண்டோ
ஆதரவான துணை நீ
தரும் போத நினை
சாதகமே தரு பாஸ்கரன்
சந்தத் தமிழ் சொந்தம் பெற
கந்தப்பனே இந்தப் புவிதனிலே நம்

மிஸ் T. S. இராஜலக்ஷிமி

பேசும் படக்காக்ஷியில் பாடிய பாடல்

பல்லவி

73 அருமை பொருந்தியதோர்
அழகுள்ள என்னருங்கிளியே
பரிவுமொழி பகருவாயோ கிளியே
அன்பாய் முத்தம் தந்திடுவாய் அருமை

அநுபல்லவி

பஞ்சவர்ணக்கிளியே கொஞ்சவாராய் கிளியே
சஞ்சலம் தவிர்த்திடவே இன்பக்கவியுரைக்கிளியே
அருமை

தக்ஷகன் பெண்கொண்டுள்ள
தன்மொழிப் பச்சக்கிளியே
இச்சைக் கவர்ந்திடுமென் கிளியே
இன்பமுத்தம் தா கிளியே அருமை

மிஸ் M. R. வாசுவாம்பாள் அட்சன் பிளேட்டில் பாடிய பாடல்

பிளேட் நெ. S. N. 20 துள்ளிக்கோல்

74 படகு பாட்டு

துள்ளிக்கோல் வெள்ளிபோலும்—சோரால் வேரால்
ஏரால்பாயும்
கள்ளிக்கோட்டை கடலுக்குள்ளே—கடகடனு படகுதள்ள
நானும் மேலேறிக்கொண்டு வருகுவேனே
நாகப்பா சிநேகப்படி தருகுவேனே
ஆணையும் பெண்ணையும் அடுக்கடுக்காய் கரைக்குவர
காணலையோ சிற்பிமுத்து கரைமணலில் கதிர்வீசும்

மாலையிந்த நேரமிரு பேருமகா
கோலமுடன் கடலுலாவி மேடேறுவோம்
நாகப்பா துடுப்பெடுத்து படகுதள்ளு
தள்ளு தள்ளு ஏலேலோ படகுதள்ளு [படகுதள்ளு
படகுதள்ளு ஏலேலோ படகுதள்ளு அயிலேலோ
ஏலேலோ படகுதள்ளு—ஏ மாமா படகுதள்ளு
ஏ மச்சான் படகுதள்ளு ஏ சாமி படகுதள்ளு
படகுதள்ளி மனம் பழகும் புள்ளி
உடலுருக அரபிக் கடலருகே
என்னுடனிருந்து கடலுலாவிவந்து
கனக முத்துச்சாமி கவி பகர்ந்து துள்

முசிரி சுப்பிரமணிய அய்யர்
கொலம்பியாவில் பாடியது

நவசித்தி பெற்றாலும் L. B. E. No. 41

கரகரப்பிரியா சாப்பு தாளம்

75 நவசித்தி பெற்றாலும் சிவ பக்தி இல்லாத
நரர்கள் வெறும் சாவி
எவர் புத்தியும் தள்ளி சுய புத்தியு மில்லா
திருப்பவர் வெறும் சாவி
நாதன் அருள் மறந்து போத மில்லாக்
கூத்து நடிப்பவர் வெறும் சாவி
சிதமதியணியும் சிவனை நினையாமல்
திரிபவர் வெறும் பாவி
தாய் தந்தை மனம் நோகச் செய்கின்ற
குருத்ரோகத் தலைவர்கள் வெறும் சாவி

பார்க்க, படிக்க, கேட்க, தெவிட்டாத இன்பத்தை தரும் நாவல்
புல்-புல்-தாரா அல்லது ஏமாந்த சோணகிரி. விலை அணா 2.

நாய்போல் எவரையும் சீறிச்சண்டை தொடரும்
நலங் கொட்டார் பெரும் பாவி
பாபமும் புண்ணியமும் கவனியாமல்
பணத்துக்கே பிறப்பவர் வெறும் சாவி
கோபமும் லோபமும் கொண்டு நல்ல குணத்தை
குலைப்பவர் பெரும் பாவி
கேட்டும் கண்டும் அனுபவித்தும் உண்மை யுணரா
கெர்விகள் வெறும் சாவி
என்றும் வாட்டமில்லாத கதி கொடுக்கும் நீலகண்டர்
அன்பில்லார் பெரும் பாவி [க்கு

மதுரை A. M. கார்மேக ஆச்சாரி பாடியது.

பல்லவி

ஸ்ரீரங்கத்திலே உலக்கை மாத்துற திரு விழா [கொண்டாட்டம்
ஆறுங்குளமும் பெருகியூரில் அரைக்குள்ளே நீரோட்டம் ஸ்ரீ

அநுபல்லவி

பாருங்கள் நன்றாக உற்று பரமபக்தர் கூட்டம்
பலநாளும் விழியாது மலை நாகந்தனில் தூங்கும்
பாண்டுரங்கனை பாடுறார்
புளியோதரை வேண்டுமென்றே கூத்தாடுறார் ஸ்ரீ

சந்தம்

.ச்சரிசியும் பாசி பருப்பும் ஏலங்கிராப்பும் போட்டு
.சுபாலு நெய்யும் சீனி முந்திரி பருப்பும் சரியாய் போட்டு
கைசரிகமா பதனிசாவென
... ..இல் போட்டு

பாட்டு

சொற்கலோகம் போனதாக சொல்லுகின்றாரையா இந்த
அக்ரமத்தை இன்னதென்று அறிந்து கொள்வீரையா
அடியார்கள் மிடி தீரும்படியாகவே தெய்வம்
அகத்திலிருக்குதையா—பாஸ்கரன்
மகத்வம் பெருகுதையா ஸ்ரீ

பெங்களூர் K. அஸ்வதம்பாள் ஓடியன் ரிக்கார்டு
பிளேட் நெ C. A. 620 ஆலமர முரங்க குட்டி
காமிக் பாட்டு

77 ஆலமர முரங்க குட்டி அடிமரத்து வண்டு ரங்க
உன் மடிமேலே நாலுரங்க குட்டி
வரம் பெற்று வந்தேனடி
ஒட்டைக் கரண்டகமே குட்டி ஓசையுள்ள வெங்கலமே
நெல்ல வெங்கலம் கட்டி வெங்கலமே
கொத்து மருக்கொழுந்து அடி தொங்குதடி உன்
கொண்டையிலே
தானனை தானனை தனனனை குட்டி
தெற்குத்தி மதுரை பாண்டியண்டி அடி பாண்டியண்டி
அத்திவரும் பெண்களுக்குக் குட்டி
அத்தானே முத்து மாலே
உன்னே விடுவேனென்று கண்ணே உன் மனதில்
எண்ணுதடி பெண்ணே எண்ணுதடி கண்ணே
எண்ணுதடி பண்ணபாவம் தீருமடி
குட்டி பசுங்கிளியே உந்தனக்கு

ஆசார கன்னியடி குட்டி அறிவேனடி சாமர்த்தியத்தை
உந்தன் சாமர்த்தியத்தை நல்ல சாமர்த்தியத்தை
பாசாங்கு போடாதடி குட்டி பக்ஷமுள்ள மாமனடி
தானான தானான தனனான குட்டி தெற்குத்தி

பபூன் N. S. கிருஷ்ணன் ஒடியன் ரிகார்டு

பிளேட் நெ. C. A. 621 காமசுந்தராங்கி

காமிக் பாட்டு

ராகம் தன்யாசி, தாளம் ரூபகம்

பல்லவி

78 காமசுந்தராங்கி உனது காதலோங்கியே
மனமுருகுது அறிகுவாயடி காம

அநுபல்லவி

கட்டுப்பட்டேன் உன் கையில்
குட்டுப்பட்டேன் தட்டுவாணி நீ காம
கடுந்துயரடைந்து உனை தொடும்போதுடல்
நடுங்குகிறதடி காம
கதைக்கு நீயோர் வானரமே
அடுத்து எனை பிடித்துமேனி
கடித்து தளி விடுத்திடுவாயடி காம
கச்சுப்பெறு உனதிருகையால்
உச்சுத்தலை பிச்சுப்போடுவாயடி காம
பேன்நிறைந்து ஈர்குறைந்து
பிடுங்குதலை நடுங்கமத மடங்கமுத்தம்
கடங்கொடுப்பாயடி காம

பல்லவி எடுப்பு

கண்டுமலைத்தேன் காக்கை நிறத்தாளே
காமனை ஓடி ஒளிக்கச் செய்தாளே
பண்டு ராவணன் தங்கை நிகர்த்தாளே
நிதம் உனது பதம் தொழுவேன்
அதம் செய்யாதே கதம் கலங்குதடி காம

T. P. ராஜலக்ஷ்மி பேசும் படகாக்ஷியில்

சூர்ப்பனகை ஆக்டில் பாடியது

பல்லவி

79 காதலாகினேன் சாமி கலந்தணைகுவாய் என் சாமி கா

அநுபல்லவி

மாதர்க்கெல்லாம் அழகி நானே கோமானே கா

சரணம்

உன் அழகால் நானே உருகினேன் சீமானே
உன்னைக்கூடி இன்பம்தானே இன்று சேர வந்தேனே
பக்ஷம்வைத்து எந்தனை பரிவாய் கட்டிச் சேருவாய் கா

நகைச்சுவை ததும்பும் நாவல்!

பங்கஜாக்ஷி

அல்லது

சிவாநந்தத்தின் தீரச் செயல்

விலை அணா 2

மிஸ். K. B· சுந்தராம்பாள் கொலம்பியாவில் பாடிய பாடல்கள்

பிளேட் நெ. L. B. E. 13 தாயிடத்தில் அன்பில்லாத

ஹிந்துஸ்தான் தோடி.

பல்லவி

80 தாயிடத்திலன்பில்லாத ஜென்மம் வீணே
ஜென்பம் வீணே கன்மம் வீணே
(பெற்றதாயி)

அநுபல்லவி

தாய்நாட்டில்லன்பில்லாற்கு தர்மமேது கர்மமேது
பேயாய்த் திரியுமவர் பேரேது (பெற்றதாயி)

மானிலத்து மக்களெல்லாம் மகிழ்ந்திடும் நற்
சோதரரே

தானே யறிந்து தாயை போற்றுவீரே
(பெற்றதாயி)

ஒற்றுமையில்லாத நாமும் உலகத்தை ஆளுவோமோ
கற்று மறிவல்லவரும் கசடற்களைப் போல்
(பெற்றதாயிட)

ந்தமஹிம்சை பூண்டு சற்காவை நீர்கைக்கொண்டு
தி உபதேசம் நீர் கைக்கொண்டு
(பெற்றதாயிட)

அழகே ஓர் உருவாய் அமைந்த நான்கு ஆப்டோன் படங்க
ளுடன் கூடியது மர்மழகி அல்லது ரஸாயன கள்வன் அ. 12

பிளேட் நே. L. B. E. 15 வாளிபாய்ந்து ஒருமான்
ஹிந்துஸ்தானி வர்ணமெட்டு.

பல்லவி

81 வாளி பாய்ந்தொரு மான் வந்ததுண்டோ வள்ளி

அநுபல்லவி

வேல் விழிமாதே கண்டதுண்டோ நீ
வள்ளி வாளி
கொம்புகளிரண்டுண்டு கோதில்லா முகமுண்டு
கொஞ்சிப் பேசுங்கிளி குரலுமுண்டு வள்ளி வாளி
மந்தகமுக முண்டு மருவில்லா உடலுண்டு
மானே எனைக் கண்டால் மருள்வதுண்டு வள்ளி வாளி

பிளேட் நே. L. B. E. 13 கன்னிவள்ளியே
இராகம் காபி.

82 கன்னி வள்ளியே உன்மேல்
காதலால் நான் அலைந்தேன்
கட்டியணைத்தொரு முத்தம்
தருவை யானல் கைதொழுவேனே நித்தம்
முத்தி பெரும்பல—சித்தர்களாயினும்
இத்ததியே—இதமுற்றிடும் நீ இத கன்னி

செங்கோட்டை
மிஸ்டர் S. G. கிட்டப்பா
கொலம்பியாவில் பாடிய பாடல்கள்
L. B. E. 14 கீதார்த்தமு பாகம் 1 & 2
இராகம்-ஸுரடி, தாளம்-தேஸாதி

பல்லவி

83 கீதார்த்தமு ஸங்கீதா நந்தமு
நீதாவு நஜூடரா ஓமநஸா கீதா

அநுபல்லவி.

சீதாபதி சரணுபஜமு நிடுகொந்த
வாதாத்மஜூநிகி பாக தெலுசுரா கீதா

ஹரிஹர பாஸ்கள காலாதி கர்மமு
லநு மதமுல மர்மமுல நெறிங்கிந
ஹரிவர ரூபுகு ஹாரஹய விநுதுடு
வரத்யாக ராஜ வரதுடு சுகிரா கேதா

பிளேட் நே. L. B. E. 16. ஆண்டவன் தெரிசனமே
இராகம் ஹிந்துஸ்தான் அஸாவேரி

84 ஆண்டவன் தெரிசனமே
தியாகேசன் தாண்டவன் தெரிசனமே ஆ

பூண்டிடும் நாக குண்டலமாட
வேண்டும் அடியார் விணேயோட தியாகேசன் ஆ

மத்தளம் தாழை மகிழ்ந்திருக்கின்னம்
சித்தம் களித்துரு வண்ணம் தியாகேசன் ஆ

திருமுல்லைவாயல் இராஜேஸ்வரி
பிளேட் நே. C. A. 630 குருவிக்காரி பாட்டு
இராகம்-காபி தாளம்-ஆதி

85 டீயோ டீயோ டீயோ டீயோ
டீயோ டீயோ ஆயாளோ (டீயோ)
பச்சைமணி பவளமணி வாங்கலீயோ ஆயாளோ
மாலைகட்டி போட்டுகிட்டா நல்லாருக்கும் ஆயாளோ
சின்னஊசி பெரியஊசி வாங்கலீயோ ஆயாளோ
வாங்கி நல்ல சேலைதச்சா கட்டிகிலாம் ஆயாளோ
காடேகௌதாரி மைனு வாங்கலீயோ ஆயாளோ
கட்டிவைத்து தீனிபோட்டால் முட்டையிடும்
ஆயாளோ (டீயோ)

பிளேட் நே. L. B. E. 16 நான் ஏன் ஏவினேன்

இராகம் ஸிந்து பைரவி.

பல்லவி

86 நானேன் ஏவினேன்
உனைத் தூதாக நா

அநுபல்லவி

மான்விழியே செந்தேன் மொழியே
வீணேன்பழியே சொல்லா உலகில்போ நா

சரணம்

ஊரெங்கும் தூறி உடலெங்கும் தாவி
உனைச் சொல்ல வைத்தான் மதன் மீறி
ஷண்முகன் உனைச் சொல்ல வைத்தான் மதன் மீறி
பளக்கக்காரி யென்றே நா
தந்நிடை தளரா சங்கமாய் குளிர
தந்தக்குறி பட்டு இதள் வெளிர
முருகன் தந்தக்குறி பட்டு இதள் வெளிர
மொழிக்குழறக் கனியே நா

இராஜேஸ்வரி பாடியது

பிளேட் நே. C. A. 630 காசினியோர்

இராகம்-சோஹினி தாளம்-ஆதி.

87 காசினியோர் புகழ் காந்தி அவதாரன்
காந்தி அவதாரன் நம்மை கார்க்கும் உபகாரன் (காசி
தேசம் செழிக்க அவர்செய்த அனுகூலம்
செய்த அனுகூலம் செய்ய இது காலம் (காசி
சத்தியாக்கிர ஹமென்னும் தவம்புரிவோம் நாம்
தவம் புரிவோம் சமயமிதேயாம் காசி
உத்தமர் அவர்மொழிக் குறுதி நாம் தருவோம்
உறுதி நாம் தருவோம் நமக்குற்றதை பெறு
வோம் (காசி

P. S. சிவபாக்கியம்

C. A. 631 நெம்பர்.

பல்லவி

88 காரில் செல்லுவோமே காபி ளைப்புக்கு நேரே
நமது மோட்டார் கா

அநுபல்லவி

போரோக்ளாக் (four o'clock) காகியது பாரும் டய
மீறுது (மோட்டார் காரி)

ஆபீசிலிருந்து வந்த அலுப் பைத்தானே காட்டுறீர்
ஆகட்டு மென்ற சொல் வெகு சோகமாக நீட்டுறீர்
ஆப்போசிட்டாக (opposite) வார்த்தை யலங்கரித்து
சூட்டுறீர்—ஆனாலும்

எனக்கு நெவர் மெண்டு என் அருமை தெரிவது
யுவர்கைண்டு

இனிவீணே ஜாலம் செய்யாதீர் அரிஜெண்டு
வேடிக்கை விலாசம் வேறெது சந்தோஷம்
தேடிவைத்த காசும் சிலவழிக்கக் கூசுவதோ காரில்
ரென்பனெட்டில் சென்று லேடீஸ்
ரிஸ்ட்டு வாச்சு வாங்கணும்

ரெங்கமாளைப் போலடைமன் நெக்லஸ் மாலைபோட
ணும்

அன்பரே உம்மோடு டென்னிஸ் ஹாக்கி விளையாட
ணும்

ஆங்கிலேயர் பாங்குக்கில்லை யீடு மற்ற தத்தனையும்
சுத்த வெட்கக்கேடு

புகழ்—ஓங்கிடும் சுந்தரன் தமிழ்நீடு ஓமைடியர் நேமா

உலாவப் போகலாமா தாமதமும் ஆமா
தலை வலியும் சாமான்யமா காரில்

திருவழிமழலே சகோதரர்கள் கொலம்பியாவில் நாதஸ்வர வாத்தியங்கள் வாசித்தது

பிளேட் G. E. X. 1 சேதுலாரா 1 & 2 பாகம்

இராகம் பைரவி தாளம்-ஆதி

பல்லவி

89 சேதுலாரா ஸ்ருங்கா ரமு
ஜேஸி சூதுறு ஸ்ரீராமா சேது

அநுபல்லவி

ஸேது பந்தந ஸுரபதி ஸர
ஸிருஹ பவாதுலு பொகடநா சேது

சரணம்

ஆணி முத்யால கொண்ட வேஸி
ஹவுஸுகா பரிமள கமதமு பூஸி
வாணி ஸுரடிசே விஸரக வாஸி
வாஸி யநுசுத்யாக ராஜநுதயநி ரோஜி சேது

பிளேட் நெ. G. E. 69 பூர்ண சந்திரன் தோடி

பல்லவி

90. பூரணச் சந்திரன் உதயமானதுபோல்
சம்போக வதி இவள் முகம் பூ

அநுபல்லவி

பொட்டிட்டு நெற்றிக்கிணே
எட்டுத்திசை முட்டிப் புகழ் பூ
பூவையாளின் சேவை காண
தேவ மாதர் கூவி நாண பூ

சரணம்

சாமுத்ரிகா லக்ஷண குணவதி
சங்கீத ஞானம் தன்னிற் சரஸ்வதி
தேமற் படர்ந்த சிற்றின்ப மேனிரதி
சிற்றின்பம் திரண்ட முற்றிய ஸந்நிதி
காமதேனு நிகர்த்த இவளே

கைப்பிடிப்பவனே மகாபதி
மாமதுரித முத்தமிழ் பாஸ்கரன்
வாசத்திருப்பதம் பேசிச் சேர்வேன் ததி
வஞ்சமதன் கணையாகியே
நெஞ்சை யுருக்குது தேவியே
நினைக்க எனக்கு
மனைக்குத் தகுந்த ஓ

T. M. சாரதாம்பாள் ஓடியன் ரிகார்டு
பிளேட் நெ. C A 590 பசும்பால் பாட்டு

பல்லவி

91 பசும்பால் வாங்கலையோ நல்ல
பால் வாங்கலையோ நல்ல
பக்குவமாக நீர் தங்காமல் காச்சின (பால்

அநுபல்லவி

சக்கரை காணுது தன்சுவை மாறுது
மிக்கப் புதியது விடியக் கறந்தது (பால்

சரணம்

நெய் வெண்ணை பால்தயிர் நேர்மையாய் செய்யலாம்
நீடித்திருந்திடும் பால்கோவா கிண்டலாம்
கல் பட்டி நிற்காமல் காப்பியில் சேர்க்கலாம்
கண்டமட்டும் சாதத்தில் விட்டு புசிக்கலாம் (பால்
பால் தயிர் மோர்
பாலோபால் தயிரோ தயிர் மோரோமோர்
பால்வாங்கலையோ பால் தயிர் வாங்கலையோ தயிர்
மோர் வாங்கலையோ மோர்
பால் வாங்கலையோ பால் பால் தயிர் வாங்கலையோ
தயிர் தயிர்
மோர் வாங்கலையோ மோர் (பால்

மதுரை சுப்புலக்ஷிமி

பிளேட் நெம். N. 3612 அதிர்ஷ்டம் வந்தி

கண்ணிகள்

92 அதிர்ஷ்டம் வந்திட்டவுடன் கண் தெரியாது
அதுவும் மாத்திரமல்ல காதும் கேளாது
அதிர்ஷ்ட மிருந்து நல்ல வாயும் பேசாது
பார்க்குள் இதுவும் சுபாவம் யார்க்கும் தப்பாது அதி

தாய் தந்தை குரு தெய்வம் சன்னிதி பணியார்
சாதுக்கள் தம்மைக் கண்டு தருதலை துணியார்
சிந்தையில் தீர்த்த பதில் செல்வமும் துணியார்
செல்வ பேர் என்றதெல்லாம் நல்ல பேர் அணியார் அதி

தீதற்ற தருமத்தை செய்யாது இப்போதே
தீக்கொல்லை தண்டவரி சேரும் தப்பாதே
காதற்ற ஊசியும் கூட வராதே
கடவுளுக்கே பயந்து நடப்பீரிப்போதே அதி

பெண்ணும் பொன்னும் பூமியில் பொய்யாகும் மனமே
புண்ய பாவம் நன்மை பின்வரும் கணமே
மின்னும் மேற்கையும் பதம் விரும்புவாய் தினமே
மேன்மை தரும் பாஸ்கர சாமி கீர்த்தனமே அதி

பழுத்த கிழவியும் கொழுத்த சிரிப்பு சிரிக்கும் நாவல் எது?
தமாஷ் தடியன் அல்லது தஞ்சாவூர் தங்கரத்தினம் விலை அ. 2

மிஸ் N. S. ரத்னம்பாள் அட்சன் ரிகார்டில் பாடியது

பிளேட்நே. S. N. 66 மாயமான ஹரி-பியாக்

பல்லவி

93. மாயமான வாழ்வை நம்பி
மதிகுலைவ தேனோ நெஞ்சே மாய

அநுபல்லவி

தாழ்விலாத நமது சாமி
தாளை தேடு பாடு பூமி மாய

சரணம்

திரேக மாமிச மூட்டை—பல
ஜந்துக்களுக்கும் நல் வேட்டை—அதில்
ஆவிபோன கூட்டை
மறுபடியும் எந்த பாட்டை—பாட்டை மாய
இன்றைக்கு ஆளுவார் நாடு—நாளை
எடுப்பாரே கையில் ஓடு—உடல்
ஒன்றுக் குதவாத கூடு—இதை
உற்றுப் பார்த்தால் வெட்கக் கேடு—கேடு மாய
எண்ணி யிருந்து மிங்கே—முன்னே
யிருந்த பேரெல்லாம் எங்கே—நாம்
நண்ணிப் போகவேண்டு மங்கே—வேத
நாயகன் பாதம் நம்பு—இங்கே மாய

மதராஸ் மிஸ் P. E. பஸ்தம் கொலம்பியாவில் பாடிய பாடல்.

பிளேட் நே. G. E 33 தளுக்கு சுந்தரம்

காமிக்

94 தளுக்கு சுந்தரம் தனியாய் போரவளே பெண்ணே தளு
உன்னத ஒய்யாரி அடி
எனக்கொரு முத்தந் தாடி
நீயும் நானுங் கூடி
விளையாடிடுவோம் வாடி கண்ணே தளு

கருணை செய்ய வாடி
நீ யொரு சிமை கமல லேடி நம் இருவருக்கும்
சிறுவயதிலே சரியான ஜோடிப் பெண்ணே தனு
ஏனோடி இந்த மோடி
செய்யாதடி வாடி
இந்தக் கவியை தேடி அடி
நரசிமகான் பாடி வரும் தனு

ஸ்ரீமதி வை.மு. கோதைநாயகி அம்மாள் பாடியது

பிளேட் நெ. G. E. 205 சத்யாக்ரகத்யாகி
இராகம்—மாண்டே—தாளம் ஆதி.

பல்லவி

95. சத்யாக்ரகத்யாகி நம் காந்தி மகான்

அநுபல்லவி

வித்யா வல்லபன் அருள் சக்தி யுள்ளவன் பெரு
சத்யஸ்ரூபன் காந்திமகான் சத்
இந்நில மக்களுக்கோர் சந்திரன் போன்ற காந்தி
சிந்தை வலிமை பெற்ற காந்திமகான் சத்
கலியுகந்தனில் வந்த கலிதீர்க்கும் தேவரூபன்
சலிப்பிலா ஊக்கம் கொண்ட காந்திமகான் சத்

மதுரை பபூன் ஷண்முகம்

பிளேட் நெ. G. E. 19 சைனு ஜப்பான்

காமிக்

96 சைனு ஜப்பான் ரங்கோன் பர்மா
சல்லா சில்க்கு காரியே
மைனு பிடிக்காதடி மாராட்டம் பேசாதடி
மதிக்கும் ஈகோ செண்டு சோப்பு
மாறிப் போச்சு கிராப்பு சீப்பு சை

தொந்தி குலுங்க சிரிக்க வேண்டுமானல் டக்-புக் தாமோதரன் காவலை வாசிக்கவும். விலை அணு 2

நாகரீகம் பெருக்கப் பெருக்க
தற்கால உலகத்தில்
நடைமாறி போச்சு ஸை
தேகம் வெளுத்துப் போச்சு
சிங்காரப் பின்னலாச்சு அடி
செந்தூரஞ் சாந்து சந்தியில் போச்சு
இந்தியர் காலம் இப்படியாச்சு ஸை

அந்த நாட்டுக்கோட்டை பியூட்டியே
எதேஷ்டமாய் வளர்ந்தது
வீட்டுக்கொரு காருமுண்டு
விளையாட்டு காலமுண்டு
வெட்கக் கேடு வெளியில் சொன்னால்
அக்கம் பக்கம் சிறிக்கும் பின்னால் ஸை

மதுரை பபூன் ஷண்முகம்

G. E. 34 இராகம் தேசிக தோடி தாளம்-ஆதி

97 அக்கா பக்கா கைக்காரி மிக்க
துக்காய் நினைத்து பேசுகிறார்
எக்காலம் காட்டுகிறார்
என்னைக் கேலி மூட்டுகிறார்
எதிரி சிரிக்க
வயிறு கொதிக்க
பதரி விழிக்க
பயலும் சிரிக்க அக்

வல்லாளக் கண்டியவள்
வாய் கொழுத்த லண்டியவள்
வாக்கு போக்கு சாக்கு சொல்லியே
ஏய்க்கப் பாக்கிறுள் நாட்டுப் பள்ளியே (அக்
கெட்டா முட்டா துட்டா என்று
உத்தாரம் பலக் காட்டியே அவள்
கொட்ட மடக்கி வைத்து
குர்தாரை போல் நிறுத்தி
கோடை ஷண்முக சாமி யிருக்க
எழுந்து போகவா எனக்கு சகிக்க (அக்

சாத்தூர் சங்கீதவித்வான் S. கிருஷ்ணய்யங்கார்
பிளேட் நே. C. A. 627 தாயே யசோதா
இராகம்-தோடி-தாளம் ஆதி.

பல்லவி

98 தாயே யசோதா உந்தன் ஆயர் குலத்துதித்த
மாயன் கோபால கிருஷ்ணன் செய்யும் ஜாலத்தை
கேளடி (தாயே

அநுபல்லவி

தையலே கேளடி உந்தன் பையனைப் போலவே யிந்த
வையகத்திலொரு பிள்ளை அம்மம்மா நான் கண்ட
தில்லை (தாயே

சரணம்

காலினிற் சிலம்பு கொஞ்ச கைவளை குலங்க-முத்து
மாலைகள சையத் தெரு வாசலில் வந்தான்
வானோர்களெலா மகிழ மானிடரெலாம் புகழ
நீல வர்ணக் கண்ணனிவன் நர்த்தமாடினான்
பாலனென்று தாவியணைத்தேன் அணைத்த என்னை
மாலையிட்டவன் போல்வாயில் முத்த மிட்டாண்டி
பாலனல்லடி உன் மகன் ஜாலமாகச் செய்ததெல்லாம்
நாலு பேர்கள் கேழ்க்கச்சொல்ல நாண மாகுதேயடி
(தாயே

பிளேட் நே. 3868 நேற்றந்தி நேரத்திலே

இராகம்-உசேன், தாளம்-பேசும்

பல்லவி

99 நேற்றந்தி நேரத்திலே நீராடும் கரைதனிலே
நெருங்கியுமை ஜாடை காட்டி அழைத்தவளாரய்யா
நே

அநுபல்லவி

நேர்த்திமா மயிலேருங் கந்தா நீர் வளாலெதிர் மொழி
[யாய் நிற்க
மயிலிலே சொக்கையிலே பக்கந்தனிலிருந்தேன்
[சாமி நே

சரணம்

பச்சிளந் தேமர்படர்ந்த கிண்ணம்போல் ஸ்தனமும்
பவளவாயும் கருங்குழலும் கபடமில்லாமனமும்
இச்சகத்திற் காணேனந்த லக்ஷணத்தைபோலபெண்கள்
இந்திரலோகரம்பையோ பின் எந்தஉலக வரிவையோ
ஸ்வாமி நே

முந்நாளில் என்னிடத்தில் சொந்தம் போல
வந்து குத்து முத்தாய் சரசமாடி மோகமதனை
தந்து மன்னவாவுன் நினைவு கொண்டு
அன்னங் கண்டொரு மாதமுண்டு வாருமைய்யா
என்துரையே தீருமையா என் கவலை நே

மதுரை R. V. அருணாசல ஆசாரி

பிளேட் நெ. C. A. 632 தளுக்குமினுக்கு

திருடன் பாட்டு.

பல்லவி

100 தளுக்கு மினுக்கு சதாரம் தக தகவென தங்காரம்
தத்தளிக்கிறேன் இத்ததியே சித்தம் வையடி உத்தமியே

அநுபல்லவி

சிலுக்கு நடைக்கார குட்டி உன் சித்தாடை இருக்கிகட்டி
உல்லாசமாக வாடி உகந்து மகிழ்ந்து புகழ்ந்திடு
[வோம் தளு

சரணம்

உனக்கு நான் கோரிடவே கல்யாணம்
நான் கொடுத்திடுவேன் சன்மானம்
நீ மினுக்கி மினுக்கி மேல் உடுத்த
மேகவர்ண புடவை தாரேன் தளு

காக்கிநாடா மல் ரவிக்கை தாக்கிடவே ஜம்படுக்கை
அம்மாவசை ஜில் கருக்கை அறைக்குள் வாடிகும்
கொடுக்க தளு

பட்டபகல் பணுவேலை பஃட்டி வேலை உனக்கு மேலே
சட்டத்தோடுசர்க்காருலே சர்ட்பிகேட் பெற்றவண்டி தளு

அளப்பு அளக்காதே இங்கே
கொள்ள கொளத்து போகாதே இங்கே
மக்கர் வேலை செய்தா யின்னா
டக்கர் வேலை செய்திடுவேன் தளு

மதுரை பபூன் ஷண்முகம்

பிளேட் நெ. G. E. 47 பெண்சாதி நீ யிருக்க

காமிக்

101. பெண்சாதி நீ இருக்க
பிள்ளை வரம் தானிருக்க
அஞ்சாது கூடவாடி என்—தங்கரத்தினமே
நான் ஆருக்குமே அஞ்சமாட்டேன் யென்—பொன்னு
[ரத்தினமே
நாடகத்து கூட்டத்திலே
நான்பிறந்த திக்கத்திலே
பாடகாரரை கேட்டுப்பாரு என்—தங்கரத்தினமே
நான் பாங்கான மாப்பிள்ளை நான்—பொன்னுரத்தினமே
ரங்கோன் கொழும்புமுதல்
வங்காள சீமையெல்லாம்
மங்காத பேரெடுத்தேன் என்—தங்கரத்தினமே
இதில்மாராட்டமொன்றுமில்லை என்—பொன்னுரத்தினமே
நாகசுரம் வீராசாமி
ராஜரத்தினம் பஞ்சாபி
ஆதரவாம் சுப்பிரமணியம் என்—தங்கரத்தினமே
இதில் அருமை சிநேகமடி யென்—பொன்னுரத்தினமே
நானில மெல்லாம்புகழு
நாகசுர வித்வானும்
நாடும் புகழுதடி என்—தங்கரத்தினமே
நானும் புகழுரேண்டி யென்—பொன்னுரத்தினமே
திருவிடமருதூர் வீராசாமி
திருவாலூர் சுப்பிரமணியம்
திருவாடுதுரை இராஜரத்தினம்-என் தங்கரத்தினமே
அந்த திருச்சி அங்கப்பனடி யென்—பொன்னுரத்தினமே

காமிக்

102. ஆசைக் கண்ணாட்டி எந்தன்
அருமைப் பெண்டாட்டி
தேசம் புகழ்ந்தவண்டி சிங்கார மானவண்டி
வாசம் புனைந்தவண்டி வடிவம் அமைந்தவண்டி
வாங்க வென்றாலே பாட்டுக்கா யிரஞ்சாலே
சங்கீத கூட்டத்துடன் தப்பாது நானிருப்பேன்
பங்காரு தங்கபுமானே பாட்டழகன் கேட்டதிலே
பதிலென்ன சொல்லு என்பதி முகதினியே
கிராமபோன் பிளேட்டிலெங்கும்
கீர்த்தியுடன் பேர்துலங்கும்
சுரகீத ரத்தினம் வெகு சுப்பையபாகவதர்போலே
துலங்குகிறாயே அரமனைக்குள்ளே
ஆரியகானசபா அனந்தநாராயணய்யர்
அவரண்ணன் செல்லப்பய்யர் ஆடிவரும் நாடகத்தில்
அடியேன்பேருண்டு எனக்கதுவுங் கல்கண்டு
மட்டிலடங்கா சங்கீத மாஸ்டரெனப் பெயர்புனைந்த
கிட்டப்பா சுந்தரியை கேட்டுக்கோ யேதேஷ்டஞானம்
கே. எஸ். தேவுடய்யர் ஹார்மோனியம் யோகமடைந்தவண்டி
(ஆசை)

அழகிய படத்துடன்
திருப்பாதிரிப்புலியூர்
ஸ்தலமான்மியம்.
ஐதிகபடம் 4 கலரில் அச்சிடப்பட்டது
விலை அணா 6

மதுரை பபூன் N. S. ஷண்முகம்

P. S. சிவபாக்கியம் "ஓடியனில்" பாடியது

பிளேட் நே. C. A. 572.

கண்ணிகள்

103 கூடை முறங்கட்டுவோம் குறிசொல்லுவோம்—நாங்கள்
கோணமான பச்சைகளெல் லாங் குத்துவோம்-பெருங்
காடுமலை மேடுகளில் குடியிருப்போம்-எவர்க்கும்
கைகளையும் பார்த்துரே கை சொல்லுவோம்-இன்னும்
சேராத பெண்ணெல்லாம் நாங்கள்
சேரும்படி செய்வோம்—தேடி
வாராத பெண்ணெல்லாம் கிட்ட
வரும்படிக்குச் செய்வோம்-கேளு

இன்னுஞ்சில வேறு மருந் தென்னிடத்திலே
இருக்குதிப்போ கைவசத்திலே-உனக்குவேணுமா
சொன்ன சொன்னபடி யே யிருக்கும்-எங்கள்
சோதனை தெரியுமெல் லாப் பேருக்கும்-ஆனல்
என்னடாவென் றிப்போதிருக்கும்-நீ முன்
எண்ணியது போலவே பின்னல் நடக்கும்-உனக்கு

வேணுமானல் கூறு—அப்படி
விலகியிருந்து பாரு—என்மேல்
சாமிவரும் நேரு—அது
சாற்றுவதைத் தேரு—என்ன

சாமியை யழைக் கட்டுமா—அழைத்துனக்கு
நான் சங்கதியைச் சொல்லட்டுமா
சொல்லு சீக்கிரம் சொல்லு சீக்கிரம்
சொல்லுசீக்கிரம் கூடை

பிளேட் நெ. L. B. E. 17 நம்பிக்கை கொண்டேல்லோரும்

ஹிந்துஸ்தான் வர்ண மெட்டு.

பல்லவி

104 நம்பிக்கை கொண்டெல்லோரும்
கைராட்டினம் சுற்றுவோம்
கைராட்டினம் சுற்றுவோம்
கைராட்டினம் சுற்றுவோம்
நம்பிக்கை கொண்டெல்லோரும்
கை ராட்டை சுற்றுவீர்
கை ராட்டை சுற்றுவீர்
சுய நாட்டைப் பற்றுவீர்—தினம் நம்

அநுபல்லவி

ரானுவ பலன் நமக்கேது
கதர் ராம பாண மிது போது
எங்கும் நடை பெரும் வெதிரிய
மலரிய அடியோடு நாளும் தப்பாது-தினம் நம்

தொகையறு

வேலை யற்றிருக்கும் போது
விளையாட்டாய் நூற்கலாமே
மீறிடும்பசி நோய் பஞ்ச
வினைகளெல்லாம் போக்கலாமே
சோலை சூழ் கிராமந் தோறும்
சுகம் பெறப் பார்க்கலாமே
சோம்பலும் குடியும் காமத்
துயரமே தீர்க்கலாமே

பாட்டு

காந்தி முனிவர் திருவாக்யம் தினம்
கனவிலு மறவாதே யோக்யம் இனி
கங்கண மணிகுவீர் மங்கள பாஸ்கரன்
சங்கீத பாக்யம் தினம்

நம்பிக்கை கொண்டெல்லோரும்
கைராட்டை சுற்றுவீர்
சுயநாட்டைப் பற்றுவீர் தினம் நம்

மதுரை M. கண்ணம்மாள் ஓடியன் ரிகார்டு
பிளேட் நெ. C. A. 589 கதரோ கதர்
இராகம்-அடாணா தாளம்-ரூபகம்.

பல்லவி

105 கதரோ கதர் கதர் வாங்க வில்லை—அதைக்
கட்டு மென்று உமக்கும் பிட்டுச்சொன்னேன்
சுத்த கதர்

அநுபல்லவி

மதபேத மில் லாதல்லாஹூ அக்பர்
மந்தத் தொனியின் பத்தின் விளங்கத்வித நெஞ்சத்
தூயர் கதர்

சரணம்

ரோமா புரியில்பட் டாடை நெசவில்
ருசிக்கப் பிறந்த கதர்—சர்வ
லோகாபிமான சக் ராயுத ராட்டினம்
நூற்கச் சிறந்த கதர்—
சாம தான பேத தண்மை புரிகதர்
சாத்வீக வானைத் தரித்தோரக் கதர்
பாமரர் கோபத்தை பங்கஞ்செய்யும் கதர்
பஞ்சப்பிணி வஞ்சக் கலி
யுஞ்சப் புவ னஞ்சுற்றிய கதர்
ஆறு வருஷம் சத்பாக்ரகவாசத்
தடைக்கல மென்ற கதர்—நமக்
காக்கத்தை யுண்டாக்கும் துன்மார்க்கத்தை
[போக்கும்

அடாணு படிக்கும் கதர்—
மாறும் விவேக வளமை சொல்லாக் கதர்
வாக்கிய சிதம்பரம் மங்களஞ் சொல் கதர்
சோறுந் துணியும் சுகமுந் தருங் கதர்

துஷ்டக்குண சட்டக்கல
கக்கக்கெவி கொட்டிபுகழ் கதர்

S. V. சுப்பைய பாகவதர்

கொலம்பியாவில் பாடிய பாடல்

பிளேட் நே. G. E 94 கோடை வெயில் மழை பனியால்

பராபரக் கண்ணி

106 கோடை வெய்யில் மழைபனியால்
குளிர்நடுக்கம் வாடுகின்றாய்
மேடையிலே சுகிப்பதற்கு
வெட்கமுற்றே ஓடுகின்றாய்
மீறிய கோபமேனோ குறத்தங்கமே
விரும்பினால் லாபந்தானே கோ

வேடுவர்க்குள் யோகனடி
வேங்கை மயில் வாகனடி
கோடு பற்றும் மோகனடி
கோதையே நின்பாகனடி

பாடும் பாஸ்கரனே குறத்தங்கமே
பரிமளம் எற்காதடி கோ

A. V. நாகசுந்தர ராஜா
கொலம்பியாவில் பாடியது

பிளேட் நே. G. E. 83 அன்றுமுதல்—செஞ்சுருட்டி

விருத்தம்

107. அன்று முதல் இன்றுவரை நம்
நாட்டை நிலைநிறுத்தி அழியாக் கீர்த்தி
கொண்டுவந்து மேன்மையுற்ற தெது
வெளிலோ கூறுவேன் கேள்
பெண்டுகளின் உயர்கற்பு மகத்துவமே
முக்கியமாம் பெண் பேயே நீ
கண்டுகொண்டு நன்னடக்கையாய்
இருப்பாய் நீ

பாட்டு

காதகியே இது பாதகமாகும்படி நீ
கண்டு கொள்வாயடி ஆதலினுலெனை
நேசிப்பதாகுமோ அச்சம் விட்டிருந்து
லெஜ்ஜை கெட்டு வந்த காதகியே

ஷை விருத்தம்

மனமென்னும் ஒரு குரங்கை சுவாசமென்னும்
இருகயிற்ருர் வரிந்துக் கட்டி
கனமெனும் குண்டலியால் லாராதாரம்
கடந்து கசிந்து சொட்டும்
தனமென்னும் முகம்காட்டி பவமெனும்
நரகிடையே தள்ளவந்தாய்

பாட்டு

சாகசமே னினி ஏகுவாய் இத்ததியே
நீ தங்கிடும் பதியே மோகவலைக் குள்ளே
நானும் அகப்பட்டேன் முத்து சந்தம் திகழ்
குஞ்சரம் துதி சொல் காதகியே

பிளேட் நே. குடித்தனத்தில்.

காமிக்

108. குடித்தனத் திருந்த பெண்ணைக்
கொண்டு வந்தான் பார்ப்பான்—அவன் குடி

பெரிய குடித்தனத்திலே
நல்ல குடித்தனத்திலே—அந்த குடி

கொண்டு வந்தான் பார்ப்பான்
கொண்டுஒருகை பார்ப்பான்—நான்
கூடியிருந்து பார்க்காவிட்டால்
குட்டி உங்களை ஏய்ப்பான்
அடித்துக் கெடுக்க வந்து அர சாங்கத்தில் பிறந்து
தீராக் கோபிகட்கு ஏமாற்றுங் கன்னிகளா—அடி
எங்கள் அன்னிகளா—அடி
இருக்கட்டும் உங்கள் பேச்சு—இதை
எடுத்துச்சொன்னல் ஏச்சு—இதை
சிரிக்க வைக்க வழி யாச்சு—உங்கள்
ஜென்மம் வீணாய்ப் போச்சு—உன்னை
கட்டிவைத்து கண்டிக்குபோன சுணவன் நானிருக்க-அந்த
தட்டிப் பறிக்கும் தடிகளுடனே போகலாமா சிரிக்க-அடி
எட்டி மரத்து ஓரம்—நீ
போகலாமோமா சோரம்—அடி
குட்டிபோன வாரம்—நீ
பட்டது அபாரம்—அடி
மானங் கெட்டவளே—ஒருகூடை
மாங்காய் விற்றவளே
ஈனங் கெட்டவளே—பயல்களை
நம்பிக் கெட்டவளே
தாசியைப் போல் சேலைகட்டி—அடியே குட்டி நீ
வேசியைப்போல் நடக்கும் குட்டி—நீ
காசுக்காக அணைத்துக்கட்டி—அடி
கண்டவனை சேருங்குட்டி குடித்

ஓடியன் புதிய ரிகார்டு.

தஞ்சாவூர் T. M. சாரதாம்பாள்

பிளேட் நெ. C. A. 590 (ஆசை மச்சான்)

109. ஆசைமச்சானே பேசிடுங்கோ
நீங்க பேசிடுங்கோ
நீங்க பேசிடுங்கோ
அத்தை பெற்ற லெச்சை கெட்ட-மச்சான் நீங்க
காசுதந்த மையல் கட்டழகா-என்னைக்
காணவந்த கோணத்தலை குட்டழகா
கள்ளு வெறியாலே கடைத்தெரு மேலே
தெள்ளுமணி போலே சிறிக்கி யென்முன்னாலே
போனாயோ போக்கிரியே புத்திகெட்ட அசமந்தமே
வீணான நிர்ப்பந்தமே வேண்டாமிவ் வொப்பந்தமே
வெட்டுண்டு போவாயடா—பத்தினி நான்
வேறுமுகம் பாரேனடா (ஆசை)

கட்டிக்கொண்டு வந்து விட்டுவிட்டுப்—பொல்லா
கங்காணி போலே வழி தட்டுக்கெட்டு—சில
குட்டிமார்களையுங் கூட்டிக்கிட்டு—என்னை
குத்தவச்சு விட்டுப்பணம் வாங்கிக்கிட்டு—நீ
கூறுகெட்டமாமா குணமிழந்துபோமா
நேரங் கெடலாமா நினைவிழந்து போமா
நீலங் கருத்தவனே நெஞ்சிலெனைக் காத்தவனே
மாலப் பழுத்தவனே பக்கிரிசாமி யிதனே
பஞ்சாயம் கூட்டிடுவோம்—நீயும் நானும்
பாரபக்ஷம் பார்த்திடுவோம்—நம்ம
பாரபக்ஷம் பார்த்திடுவோம் (ஆசை)

ஆப்டோன் படங்களுடன் கூடியது "அறுபது தலைவாங்கிய அற்புதவல்லி" நாவல் அவசியம் வாங்கி படியுங்கள் விலை ரூ. 1—8—0.

ஓடியன் புதிய ரிக்கார்டு
கோல்டன் கம்பெனி P. சாரதாம்பாள்
பிளேட் நெ. C. A. 597 வண்டோட்ட வந்த
இராகம்-தேசிகதோடி-தாளம் ஆதி.

தொகையரா

110. வண்டோட்ட வந்த விடத்திலெனைப் பார்க்கலையோ —எனை
பெண்டாட்டி என்ற முறை பேசலையோ பேசலையோ

பாட்டு

ஒரு வாரத்தவணை சொன்னீரே
வர வழைத்துக் கொள்வேனென்றீரே

பல்லவி

ஓ மன்னா இது நீதியோ மாதல்லவா
நான் மனவி என்பதை யறியீரோ
நல் நினை வழிந்து போனீரோ வண்

வனத்திலே அந்த இடத்திலே எங்களிடத்திலே
வரவில்லையா —வண்டையோட்டி
யெதிர் வந்து மேட்டிமையாய் நின்று
காத்திடவு மில்லையா
அரிக்ய பாத்தியமும் ஆசமனீயமும்
அளித்தேன் ஏற்றிடவில்லையா—பின்
களித்தென்ன பார்த்திட வில்லையா
மோகதாகமது தீர நீரு மோரு
முத்த மளித்திட வில்லையா—இது
சத்ய வசனமையா
நான் வளர்த்து வரும் மான்களுக்குப் புல்
நீரு மளித்திட வில்லையா—அது
தானு மருந்திட வில்லையா
ரமிக்கும் போது கௌ தமத்தாயைக் கண்
டொளித்துக் கொள்ளவு மில்லையா—பின்
களித்து மீண்டது மில்லையா

பிரியும் போது எனை மறவேனென்று பல
தரமுஞ் சொல்லித் தரவில்லையா என்
சிரசிலடித்துத் தரவில்லையா
ஆதரம் பெருகி மோதிரம் தனை
நீரு மளித்திட வில்லையா—கண்
ணீர் பெருகிடவு மில்லையா ஓமன்னு வண்

P. S. சிவபாக்கியம் பாடியது

பிளேட் நெ. C. A. 572 ராஜீ உடன் படிக்கை

தேசீய கீதம்

பல்லவி

111. ராஜீ உடன்படிக்கை முக்ய நடவடிக்கை
தேச குடி படைக்கே நன்மை தரும்படிக்கே ராஜீ

தொகையறு

வைசிராயின் மாளிகையில்
வார்த்தைபே சிய நேர்த்தியாம் ராஜீ

பாட்டு

சாந்த மிகுந்த காந்திவகுத்த
சாத்வீக சட்ட மறுப்பையும்
தடுக்கும் சர்க்கார்
அடக்கும் முறையின்
தாண்டவத்தையும் நிறுத்தியே
உப்புவரி யொழித்தார்
ஒப்பியது மதித்தார்
அதிகார வர்க்கம் காங்கிரசைத் தாங்கி நின்ற
கைதிகளை விடுவித்தார் ராஜீ

மிஸ்டர் A. V. துரைராஜ் அட்சன் ரிகார்டு
பிளேட் நெ. S. N. 64 நிருதர் இராகம் பியாக்

பல்லவி

112 நிருதர் சம்ஹாரா தேவர்க் காதாரா
தசரத ஸ்ரீரகு ராமனே ஜெய தசரத

அநுபல்லவி

நிஷ்டூரக் கதமே நினைப்போர்க்கு சதமே
நினதிரு பதமே நீல்தேவா மிர்தமே
நிச்ச சங்கீதமே மச்சாவ தாரமே
நிசமருள்புரி பரந்தாமனே ஜெயநிதமரு

சரணம்

கோபிகள் லீலையா கொண்டதா லீலையா
கொஞ்ச மனமில்லையா கோபாலா என்மீதையா
கேனு மானு கன்னையா கோரிப்பாடியு மெய்யா
கோபமேனோ கோதண்டக் கோமானே
என்மேல் கோபமேனோ கோதண்டக் கோமானே நிருத

மதுரை மிஸ் A. சுந்தரம்
மாஸ்டர் வாய்ஸில் பாடிய பாடல்
பிளேட் நெ. 8013. தாம்பூலம் தரித்துக்கொள்ளும்

இராகம்-தோடி தாளம்-ஆதி

பல்லவி

113 தாம்பூலம் தரித்துக் கொள்ளுமென் துரையே
இது தருணம் கருணையுடன் தா

அநுபல்லவி

காம்புடன் நரம்பு புள்ளி கறுப்புப் பழுப்பு நீக்கி
கஸ்தூரிப்பொடிப்பாக்குடன் முத்துச்சுண்ணந்தடவிய தா

சரணம்

மாம்பூவின் துளிரைப் போல்
மேம்படும் வெற்றிலையிற்
கிராம்புடன் லவுங்கம்
ஏலம் வைத்த குணமே நல்ல

தேம்பொதிந்த வாய் மணக்கச்
சோம்பலின்றித் தான் மடித்துத் தித்திக்கும்
பரஸ்கர கீதச் சித்திர வேலைப்பாடுள்ள தா

பிளேட் நெ. 8001 முருகனே கலியுக வரதா செஞ்சுருட்டி

பல்லவி

114. முருகனே கலியுக வரத மெய் மூர்த்தி தினம்
முழுமனதுடன் தொழுதிடப் பெருங்கீர்த்தி மு

அநுபல்லவி

திரு மூலாதாரமாம் பிரணவமொழிந்த சற்குருவாம்
முறையிடும் தொண்டர் குறை யகலவே அருள்
புரிவோன் நேர்த்தி மு

தொகையறு

முக்காலமும் பக்தி செய்வோர் மனதிலே
மோகமாய்க் குடிகொள்வானே
மூதண்ட மேகொண்ட மாசண்ட னின்பாசம்
முறியவேல் விடுங்கையனே

பாட்டு

இனி-மூவாசையுமே களைந் திடமுயன்று நின்றிடுவோம்
முதுமறை புகழ் மதுர பாஸ்கரன் மொழியும்
செந்தமிழ்ப் பூர்த்தி மமு

பிளேட் நெ. 8001 ஜோதி நிறை இந்துஸ்தான் தோடி

பல்லவி

115. ஜோதி நிறை மாமதுரைச் சோமசுந்தரா ஜோ

அநுபல்லவி

சோமசுந்தரா திரு நாமமந்திரா ஜோ

சரணம்

ஆதிமறைத் தாயகனே அம்பிகையின் நாயகனே
ஆண்டவர் மெய்த் தாண்டவஞ் செய்தாடும் பாதனே
ஆடும் பாதனே பக்தர் தேடும் போதனே ஜோ

தொகையறு

அடியார்கள் மிடிதீர அறுபத்துநாலுவிளையாடல்
புரிந்ததேவா
அன்பு கொண்டுன் பாதம் நம்பினேன் இன்பமா
யாதரித்திட முன் வா வவா

பாட்டு

பாஸ்கரன் சொற்பாடினனே பணிந்து கொண்டாடினனே
வேற்கரனை தந்தகீர்த்தி மிக்கத் தங்கமே
மிக்கத் தங்கமே திவ்ய சொக்கலிங்கமே ஜோ

மதுரை கள்ளபார்ட்

கார்மேக ஆச்சாரி பாடியது

பிளேட் நெ. 8022 கடலோரத்திலே கப்பல்பார்

காமிக்

116. கடலோரத்திலே கப்பல் பார்
கப்பல் சுத்தி போட்டு பார்
போட்டை சுத்தி போயா பார்
போயா சுத்தி ஆயா பார்
ஆயா மேலொரு தட்டை பார்
தட்டுமேலொரு லட்டு பார்
லட்டுமேலொரு கிளியை பார்
கிளியின் வாயிலே பழத்தை பார்
பழத்துமேலொரு சொத்தை பார்
சொத்தை மேலொரு புழுவைப் பார்

புழுவின் வாயிலொரு ஈயைப் பார்
ஈயை அடிக்கிற கையைப்பாருங்கோ
துரைமார்களே
இந்த பெண்ணுக்கு இடுப்பை சுத்திப்பையை பாருங்கோ
தட்டுகூடை யென்றால் தட்டுகூடை உங்கள்
சையினு பேச்சை கத்துகூடே
பட்டு கூடையினு பட்டுகூடை உங்கள்
பர்மா பேச்சை கத்து கூடே
முட்டை கூடையினு முட்டை கூடே உங்கள்
முரட்டு பேச்சை விட்டு விடே
அடியே குட்டி மீனு அவளெங்கடி போனு
அலேகுரேனே வீணு அழைத்து வாடி கானு
அப்புரம் போடி கீனு அகத்திலொன்றும்தோனு
அழகிர் சிறந்தவனு அறை சந்தோஷம்தானு கட

பிளேட் நெ. 8015 தல்லி இண்டிகி

காமிக்

117 தல்லி இண்டிகி போயே நவி—வெனக்க
தருமி எந்துக்குப் பிலிஸ்துன்னவு
மல்யேல மாட்ளாடுதாவு—வெனக்க
மரிச்சி மரிச்சி ஆட்ளாடு தாவு தல்லி
மன்ச்சிவாணி தப்பு மருல்லேநா செப்பு
கென்ச்சிகினி உப்பு கெதி செடினு கொப்பு
அம்முகோனி வொஸ்திவே ஏ பாவா
அடிக்கித்தே இந்தக்கோபமா தல்லி
கல்லுதாகி வச்சி முட்டிதீவி சேத்தி
காசடி வேசி வேசி கொட்டிதீவி இந்த
திண்டிராம டெக்கடுண்டி புட்டிதீவி தல்லி
தில்லு முல்லு சூத்தி தெலுசுநீ மூத்தி
பல்லு சூம்பே கோத்தி பலுக்கு நன்னி தூத்தி
பாடந்த சேசித்திவே ஏ பாவா
பட்டி பட்டி தோசித்துவே தல்லி

கோடி கூறத்தாவேன் சித்தினி பெத்த
குண்டலவேசி மெல்லதின் சித்தினி
நேடு சொன்னனு தன் சித்தினி
நீக்கந்தா நாக்கந்தா பஞ்சித்தினி
நீ மனசு சூடி இங்க நாமனசு சூடி
நீ மாட்ள தோசித்திஞே—ஏ பாவா
நா மாட்ள வேசித்திஞே தல்லி

காமிக்

118 குட்டல்லவோ தெரியா கூடிவிட்டேன்—ஏழெட்டு
குருக்கம் நஞ்சை புஞ்சையை எழுதிபோட்டேன்
[நிலத்தின்
பட்டா அவள் பேருக்கே மாத்திவிட்டேன்—செய்த
பசப்புகல்லவோ யானும் உடனும் பட்டேன்—அங்கு
பாட்டி யென்றொருத்தி படுநீலி சமர்த்தி
பாழும் பாதகத்தி என் பணத்தெல்லாம் ஏமாத்தி
பரித்திட்டாள் குறத்தி பகைத்தெனை தூரத்தி
பலபேரிடத்தில் சொல்லி—எனை
கலகம் செய்திட்டாள் கள்ளி
பக்கத்தில் போலீசு பார்த்துமே கேசு
பல்வாறு வக்கீல் பீசு பலமாச்சுதென் சிபார்சு
பாவிகேஸோடிஸ்மிஸ் பழிகார விலைமாதர்களை
கண்ணால் பார்த்தாலும் தோஷமென்று பகரும்
கார்மேக தமிழை பாரில்பாராட்டாதின்று குட்

தமயந்தி குமாரத்தி V. அபயாம்பாள் ஒடியனில் பாடியது

பிளேட் நெ. C. A. 588 பருவ மிகுரதியே காவடிச் சிந்து

இராகம்—சாமா—தாளம் சாபு.

பல்லவி

119 பருவமிகு ரதியே மருவ யிது தரீயே
பழகு பஞ்சணை செல்லலாமடீ ஓரே பருவ

அநுபல்லவி

அழகு மிகுந்தவர்கள் நாமடி அந்த
பஞ்ச பாணனை மிஞ்சிடா வண்ணம்
அஞ்சவே செய்து ரஞ்சிதம் பெற
பரி பக்குவ லீலைகள் ஆடலாம் நாம்
உரியக் கவலையல்ல ஆடலாம் பருவ

சரணம்

உருவம் மாறினும்போல அரிவை யத்தனை
இந்த வுலகினில்அறியேன் வேறுதைபலே—அந்த
மனக்—கலக்கமில்லாமல் கொண்ட மெய்யலே
ஒரு பாயமே நீ புரிந்திடு பேரு நல்லதும் கார்குழல் செரி
ஒளிரொம்பனய நிந்த நங்கயே யென்
துளமசின் செய் செய்படி இங்கேயே பருவ

V. N. சுப்பிரமணிய பாகவதர் பாடியது.

பிளேட் நெ. 3906 காதல் கொண்டேன் கண்மணியே

இராகம்-தேசிகதோடி 1 & 2 பாகம்

பல்லவி

120 காதல் கொண்டேன் கண்மணியே என் ஆருயிரை
காத்தருளும் கண்மணியே உன் மீதிலுண்மை கா

அநுபல்லவி

காரணி சூரணி சுதந்தர தாரணி வாரணி இதந்தர கா

கஞ்சித்தாள் கொஞ்கித்தாள் திசுக
மிஞ்சித்தாள் கொஞ்சித்தாள் மருவிட கா

கருத்தில் நினைத்த படிக்கிரக்கமிக்க
வருத்தமனைத்து மகற்றி யிருக்க கா

காவித் தொழிலற்புத விற்பனி வுனை
குலவிப்பழகத் தருணத்தில் மிக கா

தொகையறு.

செந்தமிழின் குருமுன் வமர்ந்திருக்கும்பொதிய
மலைச்சிகத் தென்றல்
சந்ததமும் புலியெனவே சிறி வரமதியனல் போல்
தகிக்க மாரன்
கந்தமலர்க்கணைத் தொடுத்துக் கதரிடவே வருந்து
மிந்தக் காலம் தனில்
சொந்தமுடன் அபயமளித்திடவே தகுந்த
பெருந்துணைவி நீயே

பாட்டு

கரும்பு தின்றிடக் கூலி தனை
விரும்பி நின்றிடக் கேலி
கட்டுக் கதைகளை வீணிலே நம்பிக்
கெட்டுக்கூடமத கோயிலே வெம்பி
காலம் போக்காதே மணக் கோலம் புரிந்தார்க் குணம்
காக்ஷிதரும் இல்லறமே பாஸ்கர
சாக்ஷிபெரும் நல்லறமே சாஸ்பத காதல்

காயனபடு கீர்த்தனபடு
C. சரஸ்வதிபாய்

K. B. சுந்தராம்பாள் கொலம்பியாவில் பாடியது

ப்ளேட் நெம். L.B.E 48. ஸ்வர ராக சுதா 1 & 2 பாகம்

இராகம்-சங்கராபரணம் தாளம்-ஆதி

பல்லவி

121 ஸ்வர ராக ஸுதா ரஸயுத பக்தி
ஸ்வர்கா பவர்க முரா ஓமனஸா ஸ்வர

அநுபல்லவி

பரமா நம்த மநு கமலமுபை
பக பேகமு செலங்கேமி ஸுகமா ஸ்வர

சரணம்

மூலதார ஜ நாத மெறு குட
முதமகு மோக்ஷ முரா
கோலா ஹல ஸப்தஸ்வர க்ருஹமுல
குருதே மோக்ஷமுரா ஓமனஸா ஸ்வர

ப்ளேட் நெ. L.B.E. 23 வன்னத்தாமரையைக் கண்டு

காவடி சிந்து

இராகம்-ஆனந்தபைரவி அட-தாளம்

122 வன்னத்தாமரையைக் கண்டுவாயின்
மதுர ராகம் பாடிக் கொண்டு மதி
மயங்கியேட்டினுடன் முயங்கியே கிடக்கும்
[வண்டுகள்ளையுண்டு
அந்தரத்துப் பெண்கள் நாடி யங்கு
அன்பாகவே விளை யாடி செல்லு
மன்னலார் நடக்கு நன்னடைகுறுகி
[யன்னஞ் செல்லு பின்னும்
மந்த மேதியுள்ளே யெட்டும்—சினை
வருலு மெழுந்துமே முட்டும் போது
மடிசுறந்து கன்றுதனை நினைத்தகண்டமட்டும்
[பாலைக் கொட்டும் [வ

பிளேட் நே. L.B.E. 28 சிதம்பரம் போகாமல்

இராகம்-செஞ்சுருட்டி, ஆதி-தாளம்

பல்லவி

123 சிதம்பரம் போகாம விருப்பேனே
செனமத்தை வீணாக்கி கெடுப்பேனே சித
பக்தியும் மனமும் பொருந்தினதங்கே
சத்தியம் சொன்னேன் சடலமுமிங்கே சித
ஆசையுநேசமு மானந்தமங்கே
பேசலும்பாசமும் பிதற்றலுமிங்கே சித

S. G. கிட்டப்பா கொலம்பியாவில் பாடியது

பிளேட் நே. L.B.E. 22 கிளிக்கண்ணி 1 & 2 பாகம்

124 ஐந்துகரனுக்கிளைய ஆறுமுக வேலவனை
செந்தில் புகழ்ந்தவனைக் கிளியே
சோமனஞ் சோருதடி ஐ
ஐந்து வயதினிலே அறியாப் பருவத்திலே
பிஞ்சிலே கூடினேனடி கிளியே
பிரிய மனங் கூடுவதில்லை ஐ
வள்ளிக்கணவன்பேரை வழிப்போக்கன் சொன்னாலும்
உள்ளங் குழையுதடி கிளியே
ஊனும் உருகுதடி ஐ
மோகந்தவிர என்னைப் முந்தி பிடித்திழுத்து
ஏக வெளிதனிலே கிளியே
என்னைக் கலந்தாரடி ஐ

பாகம் இரண்டு

125 எட்டாப் பழமடியோ இறக்காததேனடியோ
மட்டில்லா ஆனந்தமே கிளியே
மால் மருகன் தந்தசுகம் ஐ

காட்டுக்கொடி படர்ந்த கருமுருகாட்டுக்குள்ளே
விட்டுப் பிரிந்தாரடி கிளியே
என் வேதனை தவிர்க்காமல் ஐ

கன்னல்மதுரமொழி கட்டழகன் என்குறவன்
என்ன பொடி போட்டானடியோ கிளியே
இணை பிறிய கூடுவதில்லை ஐ

உண்டால் கிறுக்கவைக்கும் ஊரிலுள்ள கைச்சரக்கு
கண்டால் கிறுக்கவைக்கும் கிளியே
கட்டழகன் பேருருவம் ஐ

பிளேட் நே. L. B. E. 53 அம்மா ராவம்ம (பாகம் 1 & 2)

இராகம் கல்யாணி

பல்லவி

126 அம்ம ராவம்ம துலஸம்ம நநுபாலிம்பு
மம்ம ஸததமு பதமுலே நம்மிநா நம்ம அம்

அநுபல்லவி

நெம்மதிநி நீ விஹ பரம்மு லொஸகு துவநுக
கமமவில் துநி தண்ட ரிகலகைக பா யடட அம்

சரணம்

நீம்குது துநுவுநுகநி நீ பரிமளமு நுகநி
நீ மஹத்யமுநுக நி நீரஜாக்ஷி
தாமரஸதள நேத்ரு த்யாகராஜு நிமித்தி
ப்ரேமதோ விரமுநநு பெட்டு கொநநாட்ட அம்

பரமக்குடி P. S. சிவபாக்கியம்

பிளேட் நெ. C. A. 631 அத்தான் பரிகாசப்பாட்டு

காமிக்.

பல்லவி

127 அத்தானுக்கு வந்தயோகம் எத்தனையடி தங்கப்
பொத்தானைக் குடுத்தினியிற் பூட்டத்தெரியாத அ

அநுபல்லவி

கழுத்துப்பட்டி யெடுத்துக் கட்டிக்கொள்ளச்
சொன்னேனே
முழுத் துப்பட்டியெடுத்து மூடிக்கொண்டார்
இழுத்துவரச் சொன்னேனே யிந்த மணத்திண்ணைமேலே
அழுத்தி விழிக்குறாரே ஆந்தைப்போலே ஓஹோ அ
கேலிகட்டிப் பேசமாட்டார் வாலிங்கெல்லாம்
வீசமாட்டார்
காலிகட்டி மேய்த்தார் காட்டுக்குள்
வேலி கட்டியுந்திரிந்தார் மேவு நம்பெண்ணுக்குத்
தாலிகட்டி யாச்சுதென்ற சந்தோஷம்பார் ஓ ஹோ அ

சரணம்

குலுக்கும் மயிரைப் பாரே குண்டோதரனைப் போலே
கொண்ட விரலைப்பாரே நண்டுக் கொடுக்குப்போலே
அலைக்கும் குடுமியைப்பார் அருகம்புல் வேருபோலே
அலங்கார மீசையைப்பார் ஆட்டுகடா கொம்புபோலே
இலக்கணம் பேசி நேற்று வழுக்கி விழுந்து
உடுமலைக்கவி யொன்றிரண்டு முழக்கினுரே ஓஹோஹோ அ

காப்பிஹோட்டலின் விநோதமும், பாம்பாட்டி சன்மானமும், பெண்வேடம் பூண்டவன்படும்அவஸ்தையைப் படிக்க,கேட்க இனிக்கும் நாவல் புல்-புல்-தாரா அல்லது ஏமாந்த சோணகிரி விலை அணு 2.

172809

மதுரை
T. A. நாகசாமி பாகவதர்

பிளேட் நெ. 8038 புனிதமான சுபதினமே

இராகம் ஸுரபி

பல்லவி

128 இது புனிதமானசுப திவமே மிகப்
பூரித்தேனெனது மனமே கனமே இது

அநுபல்லவி

மனித வாழ்விற் பெறுந்தனமே
மாதுதேடினேன் போது கூடினேன்
மகிழ்ந்தருஞ் சுகந்தரும் மதிமுகி இது

சரணம்

ஜென்மம் தோறும் உனையே
சேர்ந்திருக்க நினைத்தேன்
தேவர் மூவரறியச் சிந்தை
துணிந்துரைத் தேன்
என் மனதார அன்புபதிந் தேன்
இன்பவல்லியே நம்புபாஸ்கரன்
இயல்புசொல் நயம் பெறத்தரணியில் இது

பிளேட் நெ. 8025 வெளிக்குச் சொன்னால்

இராகம் செஞ்சுருட்டி

பல்லவி

129 வெளிக்குச் சொன்னால் இவள் பிழைப்பு
மிக வெட்கக்கேடு மாமா

தழுக்குடம்பின் மினுக்கும் நடையின்
குலுக்கி முறுக்கி லெவர்க்கும் புளிக்கும் வெ

விருத்தம்.

ஆதியிலே அந்த வீதியிலேவும்மை அன்புடன் கண்டமுதல் எனக்
காசைமிகுத்தது வேசைத்தனமல்ல யாருக்குமுள்ளதுதான்—தினம்
அன்னம் தண்ணீர் நித்திரையின்றித் தவிக்கின்றேன்
என்னமோ என்பாக்கியம் இன்று வந்தீரென்பாள் வெளி
இன்றுமுதல் நானுன்பெண்டாட்டி சத்திய
மென்றேகாலைப் பிடிப்பாள் பிரிந்தேனுகிலப் போதே
முட்டிக்கொண்டு சாவேனென்று கண்ணீர் வடிப்பாள்
இப்படிப்பேசியிருக்கத் தாய்க்கிழவி ஒப்பாரி வைப்பாடுரை
[தூங்கியோர் மூலையில்

---

130. பிளேட் நே. 8025 மாயப்பெண்டுகள் இராகம் காபி

மாயப் பெண்டுகள் பேரின்பக் குறுத்தறுக்கும் வண்டுகள்
அந்தப் பேயாலே நோயாகி ஓயாக்கவலை சேரும்
கண்டுமொழிபேசி கண்ணுள்வலைவீசிக்
கையாலழைத்தேதம் மெய்யைவிலைகூறும்
அண்டர்முனிவோரும் அறிவையால் தான்தேறும்
யாகமும்யோகமும் மோகமாநித்தவித்தார்
மண்டலவீதிலிந்த மாதர்களாலேமுந்தி
மாண்டமன்னர் கோடி மார்பில்துகில்மூடி
தண்டமிழ்பாஸ்கர சாமிதமிழ்சாரம்
சாற்றினேன்பேரின்ப மாற்றக்கூற்றுயுதித்த மாய

மதனகாம நூல் வெளிவந்து விட்டது!

இல்லற இன்ப இரகசியம்
அல்லது
உண்மைக் காதலியின் வெற்றி

அழகிய காதல் ஆப்டோன் படத்துடன் விலை அணு 3

ஹட்சன் புதிய ரிக்கார்டு
மிஸ் M. R. வாசுவாம்பாள்
பிளேட் நெ. S. N. 63 காடுசுற்றும் வேடுவப்

பல்லவி

131 காடு சுற்றும் வேடுவப் பையா—நீயும்
கண்டமானுக் கடையாளம் விண்டதும் மெய்யா (காடு)

அநுபல்லவி

கங்கைச் சடைதங்கும் பெருமான்—அன்புற்றேறு
கையிற்பிடி மெய்யற்புத தெய்வத் திருமான்
இங்கெப்படி வந்துற்றது காண் நெஞ்சிற்பெரு
சங்கைப்படு கொம்புற்றது வம்புத் தனங்காண்
கள்ளத்தனமே உள்ளத்தினிலே தான்—கொண்டவ
னென்பதில்
எள்ளத்தனை பிசகில்லை தரணியில் தெள்ளத்
தெளியவே தான்
தீரமுற்றிடு வீரலக்ஷணமான—இந்த மான்
திருட்டு நடத்தை படைத்தோரினத்தை வெருட்டி
முடுக்கிடுமான்

ஜீவியமான்—காவியமான்
ஓவியமான்—செல்வமான்
கல்விமான்—வள்ளிமான்-நல்ல
செந்தமிழ் வித்வ பாஸ்கரன் சந்தம்
பாடும்மான்—இம்மான் (காடு)

ஹட்சன் புதிய ரிக்கார்டு.
மிஸ்டர் A. V. துரைராஜ்
பிளேட் நெ. S. N. 64 மன்னர்
இராகம் செஞ்சுருட்டி

132 மன்னர் மன்னர் போற்றுமிந்த தேசத்திலே
இப்போ வந்திருக்கும் நெருக்கடி தோஷத்திலே

என்னமாய்ப் பிழைக்கப் போரோம் பஞ்சத்திலே
நம்மை ஏரெடுத்துப் பாரையா கொஞ்சத்திலே
சொன்னு சொன்னபடி கேட்கும் இந்துக்களே
மூட்டைதூக்கி என்று தள்ளப்பட்ட ஜந்துக்களே
வீட்டுவரி நாளுக்குநாள் மேலேறிப் போகுதையோ
தண்ணீர்வரி அடிக்கடி தத்தளித்துப் பாயுதையோ
திரியில்லா லைட்டுவரி செலுத்திக் கை ஓயுதையோ
முனுசிப லந்தமட்டும் மற்றதெல்லாம்
மொழிந்தார் எவ்வாரும் கெட்டு
கப்பல் ரயில் வண்டிகளில் கண்ணியம் நமக்கில்லை
ஆராரோ வந்தார்களே ஆலவட்டம் போட்டார்களே
ஊருராப் போனார்களே உண்மைபோலச் சொன்னார்களே
என்ன கொடுத்தாரய்யா உங்களுக்கு
சுதந்திரம் எப்போ பெறுவோமையா (மன்ன)

மிஸ். ரத்தினம்பாள் பாடிய பாடல்

பல்லவி

133. பண்டாரமாம் ஞானப் பண்டாரமாம்—நல்ல
பழநிமலைவாழும் பண்டாரமாம் பண்

அநுபல்லவி

பருவத ராஜகுமாரி குமாரன் பண்
பால்தேன் பஞ்சாமிர்த சண்முக பண்
பந்தபாச பிணி வந்துறுதபடி
சிந்தை தங்கிவளர் தண்டபாணி எனும் பண்
படிக்குந்திருப் புகழ்க்குஞ் சுகங்
கொடுக்குங்கொடிப் பிடிக்குந்திருப் பண்
பக்தர் நித்தமும் மச்சக்காவடி
புஷ்பக்காவடி சர்ப்பக்காவடி
பால்காவடி சேவடிசேர்த்தருள் பண்

சரணம்

பரவுஞ்சங்கர லிங்கசுவீகர
சரபந்தந்தருள் செந்தமிழாதிய

சந்தப்பா துதிபெரு மயின்மிசை
வந்தப்பா தெரிசன மதுதரு
கந்தப்பா எனவடியவர் புகழ் பண்

மதுரை கே. வி. கேசவபாகவதர் பாடியது
பிளேட் நெ. 8039 வாகானமயிலே
ராகம்-ஆனந்தபைரவி, ஆதி தாளம்

பல்லவி

134 வாகானமயிலே மதுரக்குயிலே
வசன ஒயிலே என் புனிதமாதரசி வா

அநுபல்லவி

நீ கான மதிலே தானிருக்க
லாகாது துயர்போகாது சொன்னேன் வா

சரணம்

மந்த மாருதவஸந் தகாலமிது
சந்தேகம் விடுவாய் சொந்தநாயகி
மாணிக்கமே பிரமாணிக் கமே சொன்னேன்
நாணிக்குள்ளே முதல் காணி கொயாமே
மங்களமே தங்குபுகழ் பாஸ்கர
சங்கீதம் பாடுவோம் மலர்சூடுவோம்

உலகில் நாம் பார்ப்பனர்களால் ஏமாற்ற மடையாமல்
இருக்க வேண்டுமானல்?

பார்ப்பனர்கள்

சூழ்ச்சி, மாய்கை, தந்திரம், எத்தல். எய்த்தல், மோசம்,
முதலிய இழி செய்கைகளையும்

முனிவர்பல் நிதியை பகல் கொள்ளை யடிக்கின்ற அநீத
வழிகளை அறிய ஆசைப்பட்டால்

ரெகுநாத சர்மா அல்லது மோசத்தால் வந்த
நாசம்

நாவலை வாங்கிப் படியுங்கள்

கலர் படத்துடன் விலை அணா 6.

மதுரை மிஸ் கங்காபாய்

F. T. No. 729. பண்டாரம்போல் வரும்.

பல்லவி

135 பண்டாரம் போல் வரு முருகனை
பார்க்க வாருங் கோ—தெய்வ
பந்தானக் காவடிச் சிந்தைக்
கேட்கவாருங் கோ—பழனி (பண்

அநுபல்லவி

தண்டபாணியெனவோர் தடிகை
கொண்டுபேணி வருவார் தொழுங்கிழப் (பண்

சரணம்

பஞ்சாக்ஷர மகிமையினாலே
பழவினை தீர்த்ததர்க் களவில்லையாம்
பாலோடு தேனபிஷேகப்
பஜனை செய்யார் உளமுருகலையாம்
பக்திப்ரமானந்தக் கடலிடை
யிட்டுத்திரு வேடந் தரித்திடுவதே
பழக்கமாம் பதப்ரசங்க
முழக்கமாம் பரனெதிர் வேதம்
படிக்குதாம் பரகதி விளம்பரம்
பிடிக்குதாம் பகவதி வேலை
நடிக்குதாம் பவனியி லுறைதமிழ்ப்
பாசுர கீதாமிர்த சிதம்ப
ரேஸ்பர கோலால கடம்பம் (பண்

பபூன் கார்மேக ஆச்சாரி பாடியது.

பிளேட் நெ. G. T. 8 பரமசிவம்

136 பரம சிவம் என்ன வரம் வேணுமென்று
கேட்டாராம் கைலை (பரம

கேட்டாராம் அவர் கேட்டாராம் அவர்
கேட்டாராம் அவர் கேட்டாராம் (பரம
அவர் அரைப்பலம் கஞ்சா வேணுமென்று
சொன்னாராம் சொன்னாராம்
ஓ கணேசா! ஓ கணேசா!
ஜினுக் ஜினுக் ஜினுக் (பரம
பரமசிவம் என்னவரம் வேணுமென்று
கேட்டாராம் அவர் கேட்டாராம்
அவர் கேட்டாராம் அவர் கேட்டாராம்
அவர் அரைப்பலம் கஞ்சா வேணுமென்று சொன்னாராம்
சம்போ சம்போ சபக்பல் சம்போ சம்போ சம்போ (பரம
கயிலை ராஜா அந்த பரமசிவம்
என்ன வரம் வேணுமென்று கேட்டாராம்
ஓ கணேசா! ஓ கணேசா! (பரம

நபிக்கைக் கோண்டேல்லோரும் மெட்டு

F. T. 583 A. M. கர்மேக ஆச்சாரி.

பல்லவி

137 ததிங்கிண தோம் கிணதோம்
கிணதோ மெனவே—தில்
லானு பாடுவோம்—தில்
லானு பாடுவோம்—தில்
டோமரி ஆடுவோம்—பல் ததி

அநுபல்லவி

சுகம்பெறும் வழியதைத் தேடு—உன்
அக மகிழ்வாகவே கூட்டு—இச்
ஜெகமதில் புகழ்ந்திடும் விகசித மயிலே—நீ
சேர்வாயன் போடு—பல் ததி
மாமதன் திருவிளை யாட்டு—உன்
மாமனே மருவிப்பா ராட்டு—சத
மதிவீதரண கவி ததிபுகல்—கார்மேகம்
மனம் போல் மணஞ்சூட்டு—பல் ததி

மதுரை A. M. கார்மேக ஆச்சாரி பாடியது.

மாஸ்டர் வாய்ஸ்

பிளேட் நெம். 8040 நெருங்கிய சொந்தக்காரனடி.

காமிக் பாட்டு

138 நெருங்கிய சொந்தக்காரண்டி அதனாலமகன்
அருங்கணை தொடுத்தாண்டி சகியேண்டி நெ
அருமை கிளியே மோடி செய்யாது எனை
அணைந்து சுகமே தாடி மைடியர் லேடி நெ
புருஷனென் ஆனதாலே பூவையுனக்கோர்
புதையல் கிடைத்தார்போலே புவிமேலே நெ
வருமைபோ காமனாலே வந்ததைதீர்க்க
வழியுரைப்பா யிக்காலே வணக்குயிலே நெ
தருவேன் பொருளுனக்கு தற்சமயம்
தையலார் வேறெனக்கு தர்க்கமெதற்கு நெ
தருணம் எந்தனைநோக்கு ததிகார்மேகம்
தாணியிலோ தியவாக்கு தரும்செல்வாக்கு நெ
தடுத்து மொழியை எடுத்துறையாதே
கொடுத்திடு முத்தம் நெ

பிளேட் நெம். 8040 மாமியே உன் மகளை யென்மேலே.

139 காமிக்

மாமியே உன் மகளையென்மேலே மனதுவைக்கச் சொல்லு
மனதுவைக்கச் சொல்லு மறுத்தாலோவரும் மல்லு
மதிகூர்வதென்றால் நில்லு இல்லை
மரியாதையுடனே நீயும் வந்தவழி செல்லு மா
திரேகம் கெட்டுவிடுமென எத்தினமும்கையை நீட்டேன்
எத்தினமும் கையைநீட்டேன் அவள் தேவையெல்லாம்
[கேட்டேன்
தெரிவித்த நகைபோட்டேன் சதா
தெருச்சண்டைப் போடுறாள் அவளோடிருக்கமாட்டேன்()

விருந்தினர்கள் வந்திட்டாலோ வீட்டடைத்து படுப்பாள்
வீட்டடைத்து படுப்பாள் வீணை வாங்கி எடுப்பாள்
விபரீதவாது தொடுப்பாள் இந்த
வீம்புனக்காகுமோவென்றால் விரைவிலரைகொடுப்பாள்
வில்லங்கம்செய்யும்மாது இவ்
விடத்திலேகூடாது ததி
விள்ளுங்கார்மேகஞ்சொற் கேட்டு
விட்டிற்கூடாதிப் போது மா

பிளேட் நே. 8026 என்ன ஜிலுஜிலுப்பு

140. காமிக்

என்ன ஜிலுஜிலுப்பு என்ன மினுமினுப்பு
என்ன பளபளப்பு என்ன ஜொலிஜொலிப்பு
வய்யாரமிய்யமுகம் என் கையிலேதொட்டாலும் கிட்
[டும் சுகம் எ
பட்டாடையும் பனாரஸ்பகட்டு ரவிக்கையும்பேஷ்
பார்க்கபார்க்கவே தமாஷ்
பாவையவள் பகரும் மொழியோ சபாஷ்
போரகியமிஸ்டர் கார்மேகமே
யோகத்தார் பூணுமிக்காலமே
சுந்தரன்தேர் காவியச்சீலமே எ
ஓ எஸ் வெரி யூடி
நேயசுக மூட்டும்
தாயஜென் மோகினி மாஸ்டர்
வாய்ஸ் கம்பெனி தனில் நல்ல
பிளேட்டாகவே கிராமபோன்
பிளேடினிலே புகழ்ந்து
பாட்டாகவே பாடுவேன்
இவள்முன்னே நியாயமாகவேயாடுவேன்()

A. M. கார்மேக ஆச்சாரி

பிளேட் நெ. 8026 சமயோசித சிங்காரி

காமிக்

141. சமயோசித சம்போக சிங்காரி
சரச சிங்காரி தழுவு மொய்யாரி சம
மல்லிகை முல்லை ரோஜா மலர்விரித்தாடி
மலர்விரித்தாடி மகிழ்வோமேகூடி சம
நாலு பதினூர் லீலை நாம் புரிவோமே
நாம்புரிவோமே நயம்பெறுவோமே சம
விருப்பமுடன் மாரனை விரும்படி தேனே
விரும்படி தேனே அது தருமமடி மானே சம
தொகையறு
இருவரும் ஒரு மனதாய் இருந்திடுவோமானால்
இன்றோடிடுவான் காமனே
தருணமே யென்முகம் திரும்பி யொரு முத்தமே
தந்தால் ஞான் க்ஷேமவானே
கருணை யோடுனை கருதுங் கார்மேகம்
கவிதனை கேட்டு கவலையை மீட்டு சம

பிளேட் நெ. 8052 ஞானத்திலே

காமிக்

142. ஞானத்திலே இந்த காலத்திலே—பண்டு
நாகரீக மெல்லாம் போச்சே ஞா

காதர் களஞ்சியம், ஆனந்த ஊற்று, இனிய மொழி இவைகள் அமைந்து மருதூர் A. பிரபாகர சாஸ்திரியார் எழுதிய மதன சிங்கர் அல்லது உரிமை இழந்த சீமான் விலை ரூ 1.

கோலத்திலே இந்த ஜாலத்திலே—புத்தி
கோடாலி காம்பு போலாச்சே ஞா

குடுமி தலையில் வைக்க—கூடாதென்றே நறுக்க
அடையாளம் மாறி நிற்க ஆங்கிலேய பாங்கிதக்க ஞா

ஆரமுதாகிய சோருடு கூடிய—நீராகாரம் தொடமாட்டார்
காறும் கடலெண்ணை பலகாரமும்—காப்பியும் கைவிட
மாட்டார் ஞா

கண்ணாடி பூட்சு நெக்டை—கழற்றுவதில்லை சட்டை
பண்ணுவதெல்லாம் அசட்டை—பகரலாமோ வெறும்
பகட்டை ஞா

ஏறுழும் சம்சாரிகளும் தத்தம்—ஏற்ற தொழிலை விடமாட்
டார்கள்
பேரழகற்று பெலமு மற்றுவிஸ்கி-பிராந்தி வகையை தொட
மாட்டார்கள் ஞா

பிச்சிப் பூ மல்லிகை பூ— பிடிக்குதில்லையே சுப்பு
பச்சை நீல சிகப்புரிப்பன்-பவுடர் சோப்புக்கே மதிப்பு ஞா

பிளேட் நெ. 8052 காமிக்

143. கத்தாழம் பழமொழிய காலம் நேர்ந்ததே—சப்பாத்தி
பித்த வெட்டை சூடகற்றி—பெரும்பாலோரை காப்பாற்றி
வத்தா சமுத்திரம் போல—வாழையடி வாழைபோன்ற க
வஞ்சக மில்லாத ஜெந்து—வருமையன்றி புசித்து
வாழ்நாளை போக்கிவந்த—வானரமெல்லாம் தபிக்க க

நிலங்களுக்கு நிலையாளாய்—நிற்கும் சுத்தி தயிரியமாய்
நித்திய கஷ்டமில்லை யென—நினைத்த சமுசாரிநோக க
பாட்டன் பாட்டிமொழிந்த—பழத்தை தின்றே வளர்ந்த
மாட்டரங்களை பிள்ளையாவும்—மயங்கி தயங்கும்படி க
வித விதமாய் தேளுகளும்—விஷபாம்பு குட்டிகளும்
வீற்றிருக்க இடமில்லாது—வீடுவாச லெல்லா மலைய க
எமன்போலோர் பூச்சிவந்து—எங்குமே கருவறுத்து
ஏகவெளி பொட்டலாக—எடுத்துரைையோ வேரோடு க
சித்தர் கள்முறையி லொன்று—சிக்கில் சிலமைக்கு நன்று
வித்துவ கார்மேகத் தமிழ் விதரணை நாட்டுக் காதார க

சாத்தூர் சங்கீதவித்வான் S. கிருஷ்ணய்யங்கார்

பிளேட் நெ. C. A. 627 அறிவேனையா

இராகம்—அடாணு தாளம்—ரூபகம்.

பல்லவி

144 அறிவேனையா உன் அந்தரங்கம்
எல்லாமின்று நன்ருய் (அறி)

அநுபல்லவி

பிரியாம லென்னுடனே கூடி பேதையாமிப் பெண்ணை நாடி
வெறிகொண்டவன் போலோடி வீணுக்கிங்கு வந்தீரோ
தேடி (அறி)

சரணம்

ஆசைபாச மெல்லாமங்கே ஆணையிடுவதெல்லா மிங்கே
பூசை செய்வதெல்லா மங்கே போக்கிரிப்பேச்சு இங்கே
வேசையைநீர் புகழ்வதங்கே வீம்புடனென்னை வைவதிங்கே
காசை யிறைப்பதெல்லாமங்கே கணக்கிடுவதெல்லா மிங்கே
(அறி)

மிஸ் K. B. சுந்தராம்பாள், கொடுமுடி
(கொலம்பியா)

பிளேட் நெ. B. E. X. 3 ஆழ்ந்த யோசனை
இராகம் மாண்ட்

பல்லவி

145 ஆழ்ந்த யோசனைகள் செய்தார்-மகாத்மா காந்தி
ஆத்மசக்தியைக் காட்டினார்-அந்நியர் கட்கு
ஆத்மசக்தியைக் காட்டினார் ஆழ்ந்த

அநுபல்லவி

கரை காணு ஆத்மா கருத்துள் மகாத்மா
கருத்தை விலக்கிக் காட்டினார்-கவர்மெண்
[டோடு
கடிதம் மூலமாய்ப் பேசினார் ஆழ்ந்த

தொகையறு

ஆயிரத்தித் தொளாயிரத்து முப்பத்திரெண்டாம் ஆண்டு
செப்டம்பர் இருபதிலே
தாழ்த்தனம் சகோதரர்க்குத் தனித்தொகுதி வேண்டா
கூட்டுத் தொகுதி வேண்டுமென
காந்தி உண்ணு விரதம் பூண்டார்

பாட்டு

பட்டினி யென்றதுமே பதைத்து பாரதமக்கள்
பிரார்த்தனை செய்யலுற்றார்-சர்வேஸ்வரனை
பிரார்த்தனை செய்யலுற்றார் ஆழ்ந்த

தொகையறு

தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதி வேண்டும்
கூட்டுத் தொகுதி வேண்டாமென
கரைபுரண்டழுதாரே அம்பேத்கார் தருமசிலராம்
காந்தி ஜீயைத் தரிசித்துமே
கூட்டுத் தொகுதிக்கே கையொப்ப மிட்டார்
தென் நாட்டுக் காந்தியென
தியாகங்கள் பலசெய்த திருராஜ கோபாலாச்
சாரியார் நம்

காந்தி உண்ணு விரதமதை ஓதியே மக்கள்
ஓட்டுப் போட வேண்டு மென்றார்

பாட்டு

ஒற்றுமைப் பட்டாரோ மக்கள் உத்தமத்யாகியாம்
[காந்தி
சித்தங்களிக்க வென்று திறந்தார் கோவில்-திண்
[டாதார்க் கென்றே ஆழ்ந்த

காயனபடு, கீர்த்தனபடு C. சரஸ்வதி பாய்
ஓடியன் ரிகார்டில் பாடிய பாடல்

பிளேட் நெ. G. E. ஜாதிமத பேதசண்டை

பல்லவி

146 ஜாதிமத பேதசண்டை தாணிப்பூமி சாதனமே
சம்மதித்தெல்லோரும் ஒன்று சார்ந்திட்டால்
விமோசனமே ஜா

அநுபல்லவி

நீதி தெய்வம் ஒன்றே நினைப்பீர்கள் இன்றே
நேசமில்லாலே தேசமதை இழந்தோம் ஜா

தொகையறு

சங்கரர், ராமானுஜர், பின்சார்ந்த புத்தர்
மகம்மதுவும், தரையில் தோன்றி
பொங்கு மதவெறி பிடித்து அவரவர்கள்
போக்கில் இவ்வழி போனுரையோ
இங்கதுவும் போதாமல் ஏசு வென்னும்
ஒருவர் மதம் இடையிலாச்சே
பங்கமற்ற இந்தியர் நாம் பலபிரிவாய்
போனதும் உன்பாவம் தானே

அநுபல்லவி எடுப்பு

காந்தி மதமே சதம் கதருடையே இதம்
காருண்ய பாஸ்கரன் கூறும்மெய் பக்திபதம் ஜா

பிளேட் நெ. E. S. 2 கன்னி வள்ளியே
காவடிச்சிந்து

147 கன்னி வள்ளியே உன்மேல்காதலாய் நானலேந்தேன்
கட்டியணைத்தொரு முத்தம் தருவாயானல்
கைதொழு வேனே நித்தம்
வர்ண பசுங்கிளி அன்னமே தேன்மொழி
காட்டமேன் ஒளிர் வாட்டுதே நான்
கட்டியணைத்தொரு முத்தம் தருவாயானல்
காலில் விழுவேனே நித்தம் கன்

காடு அதிலே திரிகிற வேடா செய்வாய் மதமோ சொல்
போடா மூடா நீ நில்லாதே உனக்குப் பித்த மோடா
வீண் வார்த்தை பேசாதே
கட்டுறவாகிய நெட்டருள் கூறிய
துட்டரை மீட்டும் வெட்டருள் வாளுடன்
கன்றகோடாலி வாள்கொண்டு—என்னண்ணன்மார்கள்
துண்டம் செய்வார் சினங்கொண்டு கன்னி

அரியக்குடி
சங்கீத வித்வான் T. ராமானுஜ அய்யங்கார்
ஓடியன் ரிகார்ட்டில் பாடிய பாடல்கள்
பிளேட் நெ. A 102 இராகம் முகாரி என்றைக்குச்
சிவகிருபை

பல்லவி

148 என்றைக்கு சிவ கிருபை வருமோ—ஏழை
என் மனச்சஞ்சலம் அருமோ எ

அநுபல்லவி

கன்று குரலுக்கது கனிந்து வரும் பசுபோல்
ஒன்றுக்கு மஞ்சாதே உள்ள துயரம் தீர்க்க எ

சரணம்

உண்டானபோது கோடி உறன்முறை யார்கள் வந்து
கொண்டாடி தொண்டாகி கொள்வார் தனம் குறைந்தால்
கண்டாலும் பேசாரிந்த கைதவமான பொன்னுல்
சண்டாள உலகத்தில் சற்குருகளைத்தேடி எ

பிளேட் நெ. A 102 எத்தனை சொன்னாலும்

இராகம் சாவேரி

பல்லவி

149. எத்தனை சொன்னாலும் தெரியாதவருடன்
ஏன் பெண்ணே இழிகொள்வாய் மகளே எத்

அநுபல்லவி

அத்தனடித்த பூமான் ரேசல் வைதாலுமென்ன
ஆத்திரப் படுகிருய் பெண் புத்தியாலே
அன்புள்ளவர்க்குகோபம் இருக்கும் மென்மேலே
ராத்திரி ராமாயணம் கேட்டுமப்பாலே
ராமருக்கு சீதை முறையென்ன என்பதுபோலே எத்

கொண்டவனை நயத்திலும் பயத்திலும் சொல்லடி
கோதையே தோத்துக்கொண்டு போனதென்னடி
கண்ட உனக்கு பாலும் பழமடி கூடிக்கடி
தாய்பேறெடுப்பாய் வெகு நேர்த்தியாய்
தினவிழியாளே உனக்கேன் இந்த துடுக்கு
நாளொருத்தி இதற்கெல்லாம் போடா விட்டால் தடுக்கு
பெறலாமோ பொன்மணி யெல்லாம்வெகு முடுக்கு
நானும் ஒரு பெண்ணென்று நீகுலுக்குவாய் யழகி எத்

மிஸ். N. S. ரத்னும்பாள் அட்சன் ரிக்கார்டு

பிளேட் நெ. S. N. 66 ஷண்முகா ஹிந்துஸ்தானி.

பல்லவி

150 ஷண்முகா கண்பாரென் ஜென்மம்
ஸாபல்யம் தான்பெறுக் கன்மம் (ஷண்)

அநுபல்லவி

உண்மையாய் நம்பியும் வன்மம்
செய்வதோ உன்குல தர்மம் (ஷண்)

தொகையரா

சமரிலே சூரனைக் கொன்ற வேலாயுதச்
 சைவமே உன்னைநானே
சகல போகம் பெறக் கோரியே விரதமும்
 தானிருந் தேங்கினேனே
குமரனே இன்றென்னைக் கைவிடல் ஞாயமோ
 கூர்வடி வேர்க் கையோனே
கொலைகளவு சூதுபொய் குடியேறுகுலமென்ற
 கோபமோ தெரிகிலேனே
கோமகன் பாஸ்கர கீதா ஏழையை
 ஆட்கொள்வீர் நாதா (ஷண்)

மிஸ் M. R. வாசுவாம்பாள் பாடியது

பிளேட் நெ S. N. 63 தெள்ளு மயிலிருக்க தெம்மாங்கு

பல்லவி

151 தெள்ளு மயிலிருக்க தெள்ளு மயிலிருக்க
தெய்வானை தானிருக்க வள்ளிக்குறத்திக்காக
வனம் தேடிப் போனதென்ன சொல்லையா கந்தா
 துரைமகனே தெ

அநுபல்லவி

பாண்டித் துரைச்சிப்பெற்ற பாலசிகாமணியா
ஆண்டி வேடத்தை பூண்டு ஆனவிபரமெனக்கு
 சொல்லைய்யா தெ

சரணம்

உற்றும் வளர்ந்த பிள்ளை ஷண்முகத்தேவா
ஒன்றுக்கு இரண்டிருக்க ஷண்முகத்தேவா
பெற்ற தகப்பன்வந்து ஷண்முகத்தேவா
பிச்சை யெடுத்துண்டதென்ன ஷண்முகத்தேவா
தெ

மதுரை ஸ்வரஜோதி T. A. நாகசாமி பாகவதர்
மாஸ்டர் வாய்ஸில் பாடிய பாடல்
பிளேட் 3885 சாமுத்ரிகா லக்ஷணம்

பாட்டு

152 சாமுத்ரிகாலக்ஷண சாதுர்யவதி குண
சலிஸௌபாலி சகுந்தலையே சா

தொகையரு

தத் துவகல்வியாம் வித்துவம் தெரிகுவாய்
தன் தெய்வம் கணவனென்று தொண்டுபுரிகுவாள்

பாட்டு

தாரணி புகழுந்திடும் தாரதன்மையுப்பெறும்
தான நிதானி தேசபிமானியே

தொகையரா

அகத்துணைக்கொருத்தியே அமைந்திடும்பாக்யமே
இகத்திலும் பரத்திலும் யீகுவான்யோக்யமே

பாட்டு

ஆரணங்கிவள் கற்புக் கோரறுந்ததியாம்
ஆழ்ந்தவிவேக முள்ளநவநிதியாம்

தொகையறு

கனவிலும் நினைவிலும் கருதுவான் ஜீவகாருண்யமே
கன்னியின் தெரிசனங்கள் முன்செய்த புண்யமே

பாட்டு

காவிய மொழியின் சஞ்சீவி பாஸ்கரன் தமிழ்க்
காந்தியின் சாந்தியாற் கதி பெறவே

V. அபயாம்பாள் ஓடியன் ரிகார்டு

பிளேட் நெ. C. A. 504 { ஞானபண்டித மோதிலால்
பாடுதுபார் வண்டு }

இராகம்-கமாஸ் தாளம்

தேசிய கீதம்

பல்லவி

153 ஞானப்பண்டித மோதிலால்
நம்மைப் பிரிந்தார் ஞா

அநுபல்லவி

ஆனந்தபவன அரண்மனை ராஜபோகன்
ஆதி சொரூபராணி மோகன் அடிமைத்யாகன் ஞா
சகலமுந் துறந்தார் சந்யாசம் நிறைந்தார்
ஜவர்லாலையும் மறந்தார் ஐயோ இறந்தார் ஞா
பாரதமாத பயின்ற நம் மேதா
பாஸ்கரசாமி சதா கொண்டாடுந் தாதா ஞா

சர்வதேசப் புரட்சியின் ஆரவாரம், குடிமுடிப் போரில் சமதர் மக்குழப்பம், மகுடமன்னர்கள் முடியிழந்த வரலாறு தெரியவேண்டு மானால் தென்பாதி T. S. கனகசபை பிள்ளை எழுதிய "அறுபது தலைவாங்கிய அற்புதவல்லி" படியுங்கள். அழகிய படங்களுடன் ரூ 1—8—0

மிஸ் N. S. ரத்னும்பாள் பாடியது

பிளேட் நெ. S.N. 55 கானுக் கருங்குயிலே

154 தர்க்கம்

ஆண் கானுக் கருங்குயிலே கட்டழகி பெண்மயிலே நீலக்
கருங்குயிலே நான் நிக்கட்டுமா போகட்டுமா

பெண் நின்றுலென்ன போனுலென்ன நிர்மூடா யென்னைவிட்டு
உண்டோ சுகமுனக்கு செண்டு ஜில்பாக்காரா

ஆண் செண்டு ஜில்பாகாரன்குட்டி ஜெகமே புகழ்ந்தவண்டி
அகமே துஞ் செய்யாதடி இருவத்தாறுநம்பர்கள்ளனடி

பெண் கள்ளபயலே என்னிடம் கத்துவதாலென்ன பலன்
தொல்லுலகில் பெண்களாலேமாண்டவர் தெரியாமலே

ஆண் மாண்டாலும் நான்மாளேனடி வேண்டாமென்
[செல்கேளடி
ஆண்டவன்போல் வந்தேனடி அஞ்சாபெரிய சாமியடி

பெண் பெரியசாமி என்பவரே பேர்போன கள்ளன் நீரே
புகழ் என். எஸ். இரத்தினும்பாள் பதிலைக் கேட்டு
[சொல்வீரே

உலகில் பார்ப்பனர்களால் நாம் ஏமாற்ற மடையாமல்
இருக்கவேண்டுமானுல்

ரெகுநாத சர்மா

அல்லது

மோசத்தால் வந்த நாசம்

என்னும் நாவலை வாங்கி வாசிக்கவும்

கலர் படத்துடன் விலை அணு 6.

பிளேட் நே. C. A. 504. பாடுதுபார் வண்டு
இராகம் மாண்டு
பல்லவி

155. பாடுதுபார் வண்டு பாடுதுபார்
பழனிநாதனைப் பா

அநுபல்லவி

பாபவி மோசன பரமதயாளனை பா

சரணம்

தேடொரு ஞானத்தை தேடியுந்தேறிடா
தென்மறை வேதாந்த நன்மறைநாதனை பா

புதுவை T. G. வெங்கடேசன்
ஓடியன் ரிக்கார்டில் பாடிய பாடல்கள்
பிளேட் நே. C. A. 503 காலமிதே அமீர்கல்யாணி
பல்லவி

156. காலமிதே கருணை மேவியே
காத்தருள் மரிதேவியே கா

அநுபல்லவி

ஞாலமிதே நான்விரும்பும்
நலம்பெற என்னுவியே கா

தொகையரா

சீராரு மாசபையில் யான்
சேர்ந்து சார்த்தூர்யம் மீரவே
ஏராளமாய்ப் பாடி
எங்கும் மங்களம் சேரவே கா

பார்க்க, படிக்க, கேட்க, தெவிட்டாத இன்பத்தைதரும் நாவல்
புல்-புல்-தாரா அல்லது ஏமாந்த சேரணகிரி.

பாட்டு

பூவுலகம் போற்றும்சுதனைபுத்த ரனாய் அடைந்தனை
தேவர்முதலோர் காணவே தெரினமேதந்தனை கா

பிளேட் நெ. C. A. 503 தேவகுமாரா அமிர்கல்யாணி

பல்லவி

157. தேவ குமாரா ஏசு நாதா தேவதேவனே
சிந்தாகுலம் தவிர்க்க செய்வாய்மனுபாவனே தே

அநுபல்லவி

பாவம் மிஞ்சியவர்க்கு பரிசுத்தனாய் வந்தவா
பற்றுதலையடைந்த ஞான பாகம் மிகதந்தவா தே

தொகையறு

ஆதியாயம் கற்பனர் அவனியோர்கள் கடைத்தேறவே
பிரதியே கொண்டாசையதாய் பிரபலா நான்கதி தேறவே

பல்லவி எடுப்பு

கருத்திலும் சுதரிசனும் காணுங்கவலை நீக்கியே
காருண்யம் காட்டுவாய் நின்கழலிணையை போற்றி
[னேன் தே

P. S. வேலு பிள்ளை பாடியது

பிளேட் நெ. C. A. 506 கும்பகோணம் கொசுவுகளா

காமிக்

158. கும்பகோணம் கொசுவுகளா
கோணமுக புவுசுகளா
கண்டவரை யெல்லாம் கடிக்கும்
கருப்பண்ண சாமி களா
கடிக்கலாகுமா-ரெத்தம் குடிக்கலாகுமா கும்

பெண்டாட்டி பிள்ளைகளுடன்
படுத்துறங்கும் போது வந்து
கும்பலாக வந்து நீங்கள்
கொண்டாட்டம் போட்டுக்கொண்டு
கடிக்கலாகுமா ரெத்தம் குடிக்கலாகுமா குடி

மாடிமேலே ஏறி நாங்கள்
கூடியே படுத்திட்டாலும்
தோடி ராகம் பாட்டுப் பாடி
கோடி கோடியாக வந்து
கடிக்கலாகுமா ரெத்தம் குடிக்கலாகுமா குடி

காதோரம் வந்து நீங்கள்
கய் வோ என்று கத்து ரீங்க
கேதாரம் பாட்டுப் பாடி
கய் வோ வென்று கத்துரீங்க
கடிக்கலாகுமா ரெத்தம் குடிக்கலாகுமா குடி

பாலு குடிக்கும் பச்ச
பாலனைக் கடிக் கிரிங்க
வேலு படிக்கும் பாட்டை
கேட்டு நீங்க ஓடிப் போக
கடிக்கலாகுமா ரெத்தம் குடிக்கலாகுமா குடி

பிளேட் நெ. C. A. 506 குடித்தனம் சுத்த தடித்தனம்

(காமிக்)

159. குடித்தனம் சுத்த தடித்தனம்—இதை
நடத்தணும் வழிபடுத்தணும்—இதை
படித்துப் படித்து எடுத்துச் சொல்லியும்
பதப்படத் தக்க விதத்திலில்லே குடி

மான வெட்கம் சூடு சொரணை
நல்ல ரத்தம் இல்லை
மனுஷப் பிறப்பாய் இருந்தால் தெரியும்
மதிப்பாரந்தத் தொல்லை
ஆனமட்டும் சொல்லிப் பார்த்தும்
அகம் பிடிக்கிறுன் பல்லை
விலகி விலகி மாட்டிக்கொண்டு
யார்படு வா ரிந்தத்தொல்லை குடி

இந்த மனுஷன் கெட்ட கேட்டுக்கு
ரெண்டு பெண்டாட்டி ஆசை
இவன் விலகி விலகி மாட்டிக்கொண்டு
இழுபடுதே மீசை
இவன்கொண்டுவந்த பெண்டாட்டிரெண்டும்
கொழுத்துப் போன வேசை
இவன் கோபத்தை தடுப்ப தென்றுல்
கூடுதில்லை சேச்சே குடி

நான் கிடக்கிற கிடையிலே
எனக்கு வந்த முடையிலே
நாட்டுக் கோட்டையான் கடையிலே
நான்பட்ட கடன் அடையிலே

S. S. விஸ்வநாததாஸ் ஓடியன் ரிகார்டு
பிளேட் நெ. C. A. 610 கதர் கப்பல் கொடி.

கதர் பாட்டு

160 கதர் கப்பல் கொடி தோணுதே கரன்
சந்திர மோகனதாஸ் காந்தி இந்திய சுதேச [கதர்

அநுபல்லவி

அதர்க்கப்பால் ஞானகாசம்
அதிலே பாரதவாசம்
இதற்குள் சிவப்பிரகாசம்
இனி நமக்குச் சந்தோஷம் கதர்

சரணம்

மானிட சிப்பிக் குள்ளே
மகாத்மா ஓர் முத்துப்போலே
ஞான வடிவம் கொண்டு
நம்மைக்காக்க வந்ததாலே

லௌகிகம் விட்டால்
வைதீகம் பெற்றால்
விதேசம் நன்றாய்க்
கொள்வோம் நாகரீகம் கதர்

பஞ்சத்தை பஞ்சால் வெல்வோம்
படையை உடையால் கொல்வோம்
வஞ்சத்தை விட்ட கல்வோம்
மார்க்கத்திலே முயல் வோம்

மறைநேர்க்கும் இந்த முறையே ஏற்கும்
மகாத்மா உரை காக்கும்
நம்மனை மக்கள் மானம் காக்கும்

பேதை குடியகற்றல்
பிறர் பெண்மேல் இச்சை கொள்ளல்
பேதைகள் ஜாதி தீண்டல்
விமோசனமாம் பழேந்திரன் விந்தைக்காவல்
மகாத்மா சிந்தைக் கோவில்
தாய் தந்தை வாழ்வில்
தமிழ் வேல்சாமி சொற்கடல் தீவில் கதர்

மிஸ். N. S. ரத்தினம்பாள் பாடியது

பிளேட் நெ. S. N. 55.

161 அடவிதனில் வந்து அகப்பட்ட
அன்னமே—ஆரடி
கண்ணே—ஆரடி
பெண்ணே ஆரடி—யிந்த

ஆண் பிள்ளையைகூடி முத்தந்தந்தால்
வெகு ஜோரடி கண்ணே
அணையவா வென்றென்னை அதட்டிக்
கேட்க வந்ததாரடா
ராஜா—ஆரடா
இந்த ஆகாத வார்த்தையை அடுத்துரைத்தால்
பாவம்—பாரடா
ராஜா—பாரடா
எங்கும் புகழ் பெற்ற எந்தன் குரு
தங்க—வேலடி
தங்க—வேலடி
என்னை இன்பமாய் கூடிஞல் இடரொன்றும்
வராது—பாரடி
கண்ணே—பாரடி
இன்பமாய் கூடென்று இகழ்ச்சியாய்
பேசிடும்—ஈனனே
அடா—யீனனே
அடா—யீனனே
என்னை யேனிந்த வாதுகள் ஏசிப்பேசுராய்
துஷ்ட—சீலனே
அடா—சீலனே

மதுரை மிஸ் A. சுந்தரம் பாடல்

பிளேட் நெ. 8024 மாதவர் தொழும் இராகம்-தோடி

பல்லவி

162 மாதவர் தொழும் மதுரை மீஞக்ஷி உந்தன்
மகா தரிசனை யருளாக்ஷி மாத

அநுபல்லவி

ஸ்ரீதரன் சகோதரி பூ நாதனின்சமேதரி
ஸ்ரீதேவி சங்கரி தயாபரி மாத

சரணம்

ஆதியாம் பரஞ்ஜோதிகண்டு அருள் கடலானந்தங்கொண்டு
பூதலமிசை புரிந்தேன் தொண்டு
புவிப்ரபல கவிப்பனுரை
குவிப்புருளாத விப்பதமீ
தாய்க்கழகுசேய்க் கினியதாய்க்கனியும்
வாயக்கமுது தருவது முறையிது தருணம்வருகுவாய்
திருவடி சரணம் தவமணியே பவவினைதீர்
சிவனஞ்சதா சிவதுணை நீ மாத

மதுரை M. கண்ணம்மாள் ஓடியன் ரிக்கார்டு

பிளேட் நெ. C. A. 619 சட்டம் புறப்பட்டது சாமி

பல்லவி

163 சட்டம் புறப்பட்டது சாமி அபச்சார மானதால்
விபச்சாரதொழில் கெடுக்கும் சட்

அநுபல்லவி

கஷ்டமில்லாது காலம் கழித்துமே திரிந்தார்
காசு பணங்களென்ற கவலை விட்டிருந்தார்
பட்டுவில் வெட்டுகளால் பகட்டியே திரிந்தார்
பலவிதத்திலும் இப்போ கலவரம் அடைந்தார் சட்
இந்த மட்டிலும் அது இருந்திட வில்லை
இணைக்கும் மாமாக்களுக்கு இனி பிழைப்பில்லை
சங்கதி வெளியினில் தெரிந்தாலும்
தள்ளிவைத்தார் அய்யய்யோ தனித்தொரு எல்லை சட்
நாடியரியார் இவர் குலத் தொழிலல்லாமல்
நட்டாற்றில் நின்றது போல் நடுங்குவதல்லால்
ஏங்கி வயர் பிழைக்க ஏகும் ஊர் எல்லாம்
இடர் செய்யவரும் மென்றே எண்ணுரார்
சொல்லால் [சட்

உற்றகுடும்பங்களும் ஓங்கியே செழிக்க
ஊழ்ல்களை விலக்கி உணர்ச்சியை பெருக்க
கற்பின் கலைவளர கவலையும் ஒழிக்க
காதல் மணமென்பதைக் கருத்துடன் மதிக்க சட்

ஓடியன் ரிகார்டு

வாசுதேவ நல்லூர் V. A. செல்லப்பா

பிளேட் நெ. C. A. 636 மாதகியே மையல் தந்து.

இராகம்-அமீர் கல்லியாணி—தாளம்-ஆதி.

பல்லவி

164 மாதகியே மாதகியே
மையல் தந்து கையகன்ற பாதகியே
மங்கையரிளங் கையலுயர்ந்த செழுந்தங்கமான மா
காம-வேதனையால் வாடுரேண்டி மெள்ளவந்தாள்
சொல்வதற்கு கள்ளமுமேண்டி வெற்றி
மகன் விட்டகணை தைத்திட வருத்தமெனும் மா

பிளேட் நெ. C A 636 அடைக்கலமே

பல்லவி

165 அடைக்கலமே அடைக்கலமே
அதிநயகுணமுள்ள ஆரணங்கு வாருங்கள் அ

அநுபல்லவி

இடக் குலந்தன்னில் வந்த எங்களின்
தாயே இனி உன்னை யல்லால்
கெதியில்லை யறிவாயே அ

சரணம்

பாவி யென்னை மணந்து பலனென்று மறியாள்
பர்த்தாவே தெய்வ மென்பாள் வேறென்றும் தெரியாள்
ஏவியதைச் செய்வாள் இழித்தொழில் புரியாள்
இசையும் பருவம் நோக்கில் இவள் மிகச் சிறியாள் அ

T. M. சாரதாம்பாள் ஓடியனில் பாடிய பாடல்கள்

பிளேட் நெ. C. A. 647 } நான் பட்ட பாட்டிலே

166 போதும் நான்பட்ட பாட்டிலே
நாடேன் உங்கள் ஜாதி வீட்டிலே
போதும் நான்பட்ட எங்கள் மாமா பட்ட
போதும் நான் பட்ட பாட்டிலே
எங்கள் மாமாபட்ட பாட்டிலே நாங்கள்
பட்ட பாட்டிலே இனி நாடோம்
உங்கள் ஜாதி வீட்டிலே
கான் பட்ட கன்னியில் மான்பட்ட
வ[illegible]ங்க கத்தினேம்
உம்மைத்தான் தொட்டதே குற்றம்
ஏன்கிட்டவந்திப்போ நத்துறீர் போ
கூன் பட்டதே எங்கள் மாமா
முதுகு உங்கள் குத்திலே
கோமானே பாஸ்கரன் சாமி
தமிழ் வாஸ்த்தவத்திலே போ

வசனம்

இப்போது எதற்காகய்யா கிட்ட கிட்ட வருகிறீர்கள் அய்யா செட்டியாரே-போதும்-போதும் உங்கள் வீட்டுக் கல்யாணத்தில் வந்து நானும் என் மாமாவும் பட்டபாடு நீங்கள் அடித்த அடியில் எங்கள் மாமாவுக்கு முதுகு வளைந்துபோச்சய்யா-அப்போது என்ன தைரியத்திலய்யா எங்கள் மாமாவை அடித்தீர்கள்

பாட்டு

தப்பித மில்லாத யெங்கள் கொப்பிய
மாமா அவரை குப்புரம்
பிடித்து தள்ளி தொப்பு, தொப்பு
தொப்பு தொப் யென்றப்படி
அடிக்கலாங்கோ ஓ செட்டியாரே
எப்படி அடிக்கலாங்கோ ஐயா
செட்டியாரே எப்படி அடிக்கலாங்கோ
தப்பிதமில்லாத

T. M. சாரநாம்பாள் ஓடியனில் பாடியது.

பிளேட் நெ. C. A. 647 மழையை நம்பி மண்ணிருக்க

167 மழையை நம்பி யேலே லோ
மண்ணிருக்க அயிலிசா
மண்ணை நம்பி யேலேலோ
மரமிருக்கஅயிலிசா
மரத்தை நம்பி யேலேலோ
கிளையிருக்கஅயிலிசா
கிளையை நம்பி யேலேலோ
இலையிருக்க அயிலிசா
இலையை நம்பி யேலேலோ
பூவிருக்க அயிலிசா
பூவை நம்பி யேலேலோ
பிஞ்சிருக்க அயிலிசா
பிஞ்சை நம்பி யேலேலோ
காயிருக்க அயிலிசா
காயை நம்பி யேலேலோ
பழமிருக்க அயிலிசா
பழத்தை நம்பி யேலேலோ
நாணிருக்க அயிலிசா
என்னை நம்பி யேலேலோ
நீ யிருக்க மழை

168 சாலையிலே ரெண்டு மரம்
சர்க்காரு வச்ச மரம்
ஓங்கி வளர்ந்த மரம்—என்
தங்க ரெத்தினமே—அது
உனக்கேற்றத் தூக்குமரம்—என்
பொன்னு ரெத்தினமே
சின்னச் சின்ன வெற்றிலையாம்
சிங்கப்பூரு வெற்றிலையாம்

வேஷ்டிக்கடை முட்டாபியாம்—என்
தங்க ரெத்தினமே—உனக்கு
மாறுக்கட்டு மரிக்கொழுந்தாம்—என்
பொன்னு ரெத்தினமே
ஆசைக்கி மயிர் வளர்த்து
அழகானக் கொண்டைப்போட்டு
கொண்டைப் போட்ட மூணுநாளு—என்
தங்க ரெத்தினமே—உன்னை
கொண்டுபோரேன் கோலாலம்பூர்—என்
பொன்னு ரெத்தினமே சா

பி. எஸ். வேலு பிள்ளை ஓடியல... பாடியது.
பிளேட் நெ. C. A. 648 பலேவெரி தமாஷ

காமிக்

169 பலே வெரி தமாஷ் பலே வெரி குஷால்
பலே மைனர் விளையாட்டு
வீட்டிலே யிருப்பதை கையிலே எடுத்துக்கொண்டு
பலே செலவு பல் ப்ராட்டு
மைனர் தலையில் உருமாலே கட்டு
நெற்றிதன்னில் ஜவ்வாது பொட்டு
ஓயிட் சலவையான பல ஷர்ட்டு
ரோஸ்சாய வேட்டிமேல் பில்ட்டு
வெல் வெட்டினாலே ஒரு பெட்டி
வெத்திலே பெட்டி ஒரு பிராந்தி செட்டு
பேஷனான லெதர் பாக்ஸ்
வெள்ளி கூஜாவினோடு மணிபாக்ஸ்
பேஷான மேக்கு கரைக்ட்டான
டைம் காட்டு (சி எஸ் ஆர் & சன்ஸ்)
C S R & Sons வாட்சு
அதில் தங்க சங்கலி மோரூடாலர் தொங்கிடுமே

வகு ஜோருய் பரிமளங்கள் செண்டு வகையரா
மீரு
தைலங்கள் வாசனையை
கிராப்பு
குட்பார்பர் வேலை தலை
கேரு
ஜோக்கு ஜில்பா இருபக்கம்
மோதிரங்கள்
காதில் வைர கடுக்கன்
வாட்சு
கையில் செயின் ரெஸ்டு
அம்பர்லா
விநோதமான இமிடேஷன்
பூட்ஸ்
விலை யுயர்ந்திடும்
சட்டை
பலவித யூனிபாரம்
நெக்டை
லேஸ்வேலை செய்திட்ட
குட்டை
சச்சதுர சில்க்கை ...லபர்கட்டை தன்
சட்டை
சில சமயத்தில் ...க்விட் டெடுத்திடும்
சதா
ஜோ...முகம் பொடி
மட்டை பலே

பி. எஸ். வேலு பிள்ளை ஓடியனில் பாடியது.

பிளேட் நெ. C. A. 648 சோராக்கத் தெரியாத

காமிக்

170 சோராக்கத் தெரியாத சோம்பேரி பெண்களுக்கு
வீராப்பு ஏதுக்கடி குதம்பா
தாவாரம் பெருக்கத் தெரியாத பெண்களுக்கு
பூவாரம் ஏதுக்கடி குதம்பா
பர்த்தாவே தெய்வமென்று பணியாத பெண்களுக்கு
பொற்ருலி ஏதுக்கடி குதம்பா
பெருந்தீனி தின்றிடும் பேயான் பெண்களுக்கு
விருந்தாளி ஏதுக்கடி குதம்பா
கோண வகுப்பெடுக்கும் கோலாகல பெண்களுக்கு
நாணமும் ஏதுக்கடி குதம்பா
பூமியில் அயல்வீடு ஓடிடும் பெண்களுக்கு
மாமியார் ஏதுக்கடி குதம்பா
சோ

பாட்டுகளின் அட்டவணை.

..டு.	பக்கம்.	பாட்டு.	பக்கம்.
பண்டித மோதிலால்	3	எங்கக் குடும்பம்	19
செந்தூர்	4	யுவதி ஸ்ரீமதி	20
காந்தி லண்டன்	5	ஆதி விநாயகனே	20
காமிசத்ய	,,	விநநாஸ	21
தாமதமேன்	6	மானுருட்டும்	22
பவளகொடி	,,	கைராட்டனம்	,,
ஏசுநாதனே	7	தாழ்த்தப்பட்ட	23
தேடி	8	வேலவரே	25
வாருங்கள்	,,	வேசி ஆசை	26
மதிச்சயத்தில்	9	நில்லு நில்லுங்கடி	,,
வண்ணான்	10	மல்லிகைமுல்லிகை	27
வாங்கடி	12	பெண்கொண்ட	28
பாவட்டம்	,,	ஆதிகடவுளுக்கு	29
நாசகாலதாசி	13	திருச்செந்தூர்	30
ஆடுங்கடி	15	அப்பாடா ஆரோ	,,
பாலுகார	16	ராட்டினமே	31
ஒருநாளும்	17	கார்த்திகேய	32
மகாமோசமான	,,	ஆலோலம்	33
என் அய்யா (இடையன்		மோக்ஷமுகல	34
பாட்டு)	18	முன்னமொரு	,,

		பக்க.
	தனக்கோர்	57
	36 நம்பினோரை	58
முதலான	37 அருமை பொரு	59
காந்திரிஷி	,, துள்ளிக்கோல்	,,
தாசியின்	38 நவசித்தி	60
ஆத்மயாகம்	39 கதருண்டாக்கும்	61
கதிர்வடிவேலா	40 ஆலமரமுரங்க	62
பேயிடத்தில்	41 காமசுந்த	
மாயபிரபஞ்	,, காதலாகினேன்	
வேடா விரை	42 தாயிடத்திலன்	
சத்தியவான் சாவித்திரி	வாளிபாய்	6
தர்க்கம்	43 கன்னிவள்ளி	,,
மதனசுரத	44 கீதார்த்தமு	,,
கட்டாணி	46 ஆண்டவன்	67
திருவடிசரண	47 டீயோ, டீயோ	,,
வண்டினுங்	,, நானேன்	68
நாகரீககாலம்	48 காசினியோர்	,,
மோகன	49 காரில்செல்	69
அன்பே	,, சேதுலாரா	70
ஆயலோட்டும்	50 பூரணச்	,,
வெட்டுண்ட	51 பசும்பால்	71
ஜீவ சிந்தாமணி	,, அதிர்ஷ்டம்	72
மகா சுகிர்	52 மாயமான	73
மாதரசே	53 தளுக்குசுந்தரம்	,,
அன்றொருநாள்	,, சத்யாக்	74
எல்லோரை	54 சைனஜப்பான்	,,
பார்வதிதரு	,, அக்காபக்கா	75
காதல் மனோகரி	55 தாயேயசோதா	76
மலர்சூடி	56 நேற்றந்தி	77
தேனே மாங்	,, தளுக்குமினுக்கு	78
ஏனோடி	57 பெண்சாதி	79

...பாட்டு.

ஆசைக்கண்
கூடைமுறங்
நம்பிக்கை
கதரோ கதர்
கோடைவெய்யில்
அன்றுமுதல்
குடித்தனத்
வசைமச்சானே
...டோட்
...டன்
...முகனே
ஜோதிநிறை
...டலோரம்
கல்வி இண்டி
...ட்டல்ல
...ருவமிகு
...தல்கொண்டேன்
...வாராக
...ன்னத்
...ம்பாம்
...துகரனுக்
...டாபழமடி
...மராவம்ம
...தானுக்கு
...புனிதமான
...ிக்குச்
...பெண்டு
...ற்றும்
...ர்

80 ...
81 வ...
82 பண்...
83 பரமசிவ...
84 திங்கிண...
85 நெருங்கிய...
86 மாமியே...
87 என்ன ஜிவு...
88 சமயோசித...
89 ஞானத்திலே...
90 கத்தாழம்...
,, அறிவேனையா 1...
91 ஆழ்ந்தயோசனை 11...
,, ஜாதிமதபேத 114
92 கன்னிவள்ளி ,,
93 என்றைக்கு 115
94 எத்தனைசொன்னாலும் ,,
95 ஷண்முகா 116
95 தெள்ளுமயில் 117
97 சாமுத்ரிகாலக்ஷணம் 118
,, ஞானப்பண்டித 119
98 கானக்கருங்குயில் 120
,, பாடுதுபார் 121
,, காலமிதே 121
99 தேவ குமாரா 122
100 கும்பகோணம் ,,
101 குடித்தனம் 123
,, கதர்க்கப்பல் 124
102 அடவிதனில் 126
103 மாதவர்தொழும் ,,
,, சட்டம் புறப்பட்டது 127

பககம

—டு.

சாலையிலே 13

,, பலேவெரி தமாஷ் 13

129 சோராக்கத்தெரியாத 13

130

மனோரஞ்சினி அச்சுக்கூடம், சௌகார்பேட்டை, சென்